
www.padippakam.com

1-15 நவம்பர் 2000 ☐ ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



எண்ணெய் விலை உயர்வு: வல்லரசுகளின் சதி




படிப்பகம்

www.padippakam.com

## கோயில் நுழைவுப் போராட்டம்:

# சாதி வெறியர்களின் அடாவடித்தனம் தி.மு.க. அரசின் 'நடுநிலை' நாடகம்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்திலுள்ள இளங்குண்ணி கிராமத்தில், மாரியம்மன் கோயிலில் வழிபாட்டு உரிமைகோரி கோயில் நுழைவுப் போராட்டத்தைத் தாழ்த்தப்பட்டோர் நடத்த முற்பட்டதும், ஆட்சியாளர்கள் அக்கோயிலை மூடி பூட்டு போட்டு, போலீசுக் காவலும் போட்டுள்ளனர்.

இளங்குண்ணி கிராமத்தில் 300 தாழ்த்தப்பட்ட குடும்பங்களும் 700 மேல்சாதிக் குடும்பங்களும் உள்ளனர். மேல்சாதியினரில் பெரும்பான்மையினராக கொங்கு வேளாளக் கவுண்டர்கள் உள்ளனர். இக்கிராமத்தின் நுழை வாயிலிலேயே ஒரு மாரியம்மன் கோயில் உள்ளது. இது தமிழக அரசின் இந்து அறநிலையத் துறையின் பொறுப்பில் உள்ளது. எனவே அனைத்துச் சாதியினரும் இக்கோயிலில் வழிபட சட்டப்படி உரிமை உள்ளது. ஆனால் கொங்கு வேளாளக் கவுண்டர் சாதியினர் இது தமது சாதிக்கான கோயில் என்று உரிமை பாராட்டிக் கொண்டு, இதர பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதியினர் கோயிலில் நுழையத் தடை விதித்துள்ளனர்.

கடந்த ஆண்டு செப்டம்பரில், வழிபாட்டு உரிமை கோரி தாழ்த்தப்பட்ட மக்கள் ஆட்சியாளர்களிடம் புகார் செய்ததையொட்டி, வருவாய்துறை அதிகாரியும் செங்கம் வட்டாட்சியரும் கிராம மக்களிடம் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தி, "அனைத்து சாதியினரும் இக்கோயிலில் வழிபடலாம்; அதை யாரும் தடுக்கக் கூடாது" என்று அறிவித்தனர். ஆனாலும் கொங்கு வேளாளக் கவுண்டர் சாதியினர், தாழ்த்தப்பட்டோர் இக்கோயிலில் வழிபட தொடர்ந்து மறுத்து வந்தனர்.

இந்நிலையில் 'மார்க்சிஸ்டு' கட்சியின், விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவரான ஜி.வீரய்யன், பெரியார் பிறந்த நாளை ஒட்டி செப். 17-ந் தேதியன்று தாழ்த்தப்பட்டோருடன் இக்கோயிலில் நுழைந்து வழிபடும் உரிமைக்கான போராட்டத்தை அறிவித்தார்.

"வீரய்யன் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவரல்ல; அமைதியாக உள்ள கிராமத்தில் அவர் சாதிவெறிக் கலவரத்தைத் தூண்டுகிறார்" என்று கொங்கு வேளாளக் கவுண்டர் சாதியினர் வட்டாட்சியரிடம் புகார் செய்தனர். அதைத் தொடர்ந்து வட்டாட்சியர் மற்றும் போலீசார் முன்னிலையில் சமாதானக் கமிட்டி நிறுவப்பட்டு, வீரய்யன் மற்றும் கிராம மக்களுடன் பேச்சு வார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தையில், தாழ்த்தப்பட்டோர் இக்கோயிலில் வழிபட தடை விதிக்கக் கூடாது என்றும் முடிவாகியது. அதன்படி செங்கத்திலிருந்து வீரய்யனும் அவரது தோழர்களும் இளங்குண்ணி கிராமத்துக்கு வந்ததும், 145-வது பிரிவின்படி தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், வீரய்யன் வெளியூர்க்காரர் என்பதால் உடனே வெளியேற வேண்டும் என்றும் போலீசு எச்சரித்தது.

இதை ஏற்க மறுத்து செப். 17-ந் தேதியன்று மாலை வீரய்யனும் 10 தாழ்த்தப்பட்டோரும் இக்கோயிலில் நுழைய ஊர்வலமாகப் புறப்பட்டனர். உடனே 200 பேருக்கும் மேலாகத் திரண்ட கொங்கு வேளாளக் கவுண்டர் சாதிப் பெண்கள் கோயிலின் முன்பாகத் திரண்டு மறியல் செய்து கூச்சலிட்டபடியே வீரய்யன் குழுவினர் மீது மண்ணை வாரி இறைத்தனர். மறுபுறம், ஈரோடு, தர்மபுரி, ஓசூர் பகுதியிலிருந்து திரட்டி வரப்பட்ட கொங்கு வேளாளக் கவுண்டர் சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் மீது சரமாரியாகக் கல்லெறித் தாக்குதலை நடத்தினர். ஏறத்தாழ 15 நிமிடங்களுக்கு மேலாக நடந்த இத்தாக்குதலில் பலருக்குக் காயங்கள் ஏற்பட்டன. இத்தனையும் போலீசார் கண் முன்பாகவே நடந்த போதிலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வட்டாட்சி நிர்வாகிகள் சமரச நாடகமாகிவிட்டு, கோயிலை மூடி பூட்டு போட்டனர்.

மறியல் செய்யும் மேல்சாதிப் பெண்களை வெளியேற்றுமாறும், வெளியூரிலிருந்து ஆயுதங்களுடன் திரட்டி வரப்பட்டுள்ள சாதி வெறியர்களைக் கைது செய்யுமாறும் வீரய்யன் குழுவினர், இத்தாக்குதலின் போது அங்கிருந்த வருவாய் துறை அதிகாரியிடம் முறையிட்ட பின்னரும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு புறம் தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டு உரிமையைச் சட்டப்படி அங்கீகரிப்பதாக நாடகமாடிக் கொண்டே மறுபுறம் சாதி வெறியர்களுக்கு அணுக்கமாக அதிகார வர்க்கமும் போலீசும் செயல்பட்டது. இப்போராட்டத்தைத் தொடர்ந்து, மேல் சாதியினரின் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்குப் பொருட்களைக் கொடுக்காமல் சமூகப் புறக்கணிப்புத் தொடர்கிறது. இது பற்றியோ, சம்பவத்தன்று தாக்குதல் நடந்ததாகவோ புகார் வராததால் யாரையும் கைது செய்யவில்லை என்று போலீசு நியாய வாதம் பேசுகிறது.

இத்தனைக்கும், வீரய்யன் குழுவினர் நடத்தியது அடையாளப் போராட்டம்தான். இக்கிராமம் மட்டுமின்றி சுற்றுப்புற கிராமங்களிலும் வழிபாட்டு உரிமைக்கான போராட்டத்தை விளக்கி பிரச்சாரம் செய்து, தாழ்த்தப்பட்டோரை அணிதிரட்டும் இயக்கமாக இது நடக்கவுமில்லை. அப்படி பெருமளவு தாழ்த்தப்பட்டோர் திரண்டிருந்தால், இங்கு மிகப்பெரிய சாதி வெறித் தாக்குதலும் கொலைகளும் நடந்திருக்கும் என்று இக்கிராமத்துத் தாழ்த்தப்பட்டோர் பீதியுடன் கூறுகின்றனர்.

தொடர்ச்சி
27-ஆம் பக்கம்

**தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டு உரிமை பறிப்பு: மேல்சாதிவெறியர்களுக்கு ஆதரவாக நிற்கும் தி.மு.க. அரசு உத்தரவுப்படி பூட்டிக் கிடக்கும் இளங்குண்ணி மாரியம்மன் கோயில்.**




படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

## இதழ் 22 - 24

1 அக். 2000 - 15 நவ. 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# அரசியல் கிரிமினல்களின் அட்டகாசம்

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான "டான்சி" என்ற சிறு தொழில் நிறுவனத்தின் நிலங்களை சதி, நம்பிக்கைத் துரோகம், அதிகாரமுறைகேடுகள், ஊழல் - மோசடி மூலமாக ஜெயலலிதாவும் சசிகலாவும் சம பங்குதாரர்களாக உள்ள "ஜெயா பப்ளிகேசன்ஸ்" மற்றும் "சசி எண்டர்பிரைசஸ்" ஆகிய இரு கம்பெனிகள் வாங்கிய வழக்குகளில் ஒன்றில் மூன்றாண்டுகளும் மற்றதில் இரண்டாண்டுகளும் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்திருக்கிறது சென்னை தனி நீதிமன்றம். ஜெயா - சசியோடு, முன்னாள் அமைச்சர் முகமது ஆசிப்பும், மூன்று அதிகாரிகளும்கூடத் தண்டனை பெற்றுள்ளனர்.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் ஆறு பேருக்கு தலா 50 இலட்சம் ரூபாய் இலஞ்சம் கொடுத்து, தனது சிறுபான்மை அரசுக்கு நம்பிக்கை தெரிவித்து நாடாளுமன்றத்தில் வாக்களிக்கச் செய்த குற்றத்துக்காக முன்னாள் பிரதமர் நரசிம்ம ராவுக்கும் அவரது அமைச்சர் பூட்டா சிங்குக்கும் தலா மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறது, புது தில்லியில் உள்ள சி.பி.ஐ. தனி நீதிமன்றம்.

"இந்த இரண்டு தீர்ப்புகளும் சட்டத்தின் மீதும் நீதித்துறையின் மீதும் நாட்டு மக்களுக்கு மதிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும்" என்றும், "எவ்வளவு பெரிய பதவி வகிப்பவர்களானாலும், குற்றம் புரிந்தால் சட்டமும், நீதியும் அவர்களை மன்னிக்காது; நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்" என்று பாடம் புகட்டுவதாக அமைந்துள்ளது என்றும் அப்பாவிகளைப் போல பல அறிஞர்களும் தலைவர்களும் கருத்துக் கூறி இருக்கிறார்கள். ஆனால், இவர்களைப் பார்த்து மட்டுமல்ல, சட்டத்தையும், நீதியையுமே பார்த்து ஏளனமாகச் சிரித்து அவமானப்படுத்துகிறார்கள், தண்டிக்கப்பட்டவர்களின் கூடாரத்தினர்.

ஜெயா-சசி, ராவ்-பூட்டா சிங் ஆகிய கிரிமினல் குற்றவாளிகள் உண்மையில் தண்டிக்கப்பட்டு விட்டார்களா? அதனால் எந்த வகையிலாவது பாதிக்கப்பட்டார்களா? ஒரு கிரிமினல் குற்றவாளி தண்டிக்கப்படுவது என்பது என்ன? "அவன் சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும்; வெட்கித் தலை குனிய வேண்டும்; செய்த குற்றத்தை எண்ணி, எண்ணி மனம் புழுங்க வேண்டும்; குற்ற உணர்வு மேலோங்குவதோடு, இனிமேலும் குற்றஞ் செய்யக்கூடாது என்று திருந்த வேண்டும்; அதற்காக சாதாரண மக்களுக்குரிய உரிமைகள் பறிக்கப்பட்டுச் சிறையிலடைக்க வேண்டும்; கடுங்காவல் சிறையிலிருக்கும் போது அவன் உழைத்து உண்ண வேண்டும்; அவனுக்கு நல்ல போதனைகள் அளிக்கப்பட வேண்டும்." இதெல்லாம் மனச்சாட்சி உள்ளவர்களுக்கும், தற்செயலாகக் குற்றங்கள் புரிந்து விட்டு, கிரிமினல் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்ளும் அப்பாவி ஏழைகளுக்கும் தான் பொருந்தும். திட்டமிட்ட கிரிமினல் குற்றங்களைச் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள், சட்டத்தின் பிடியில் சிக்குவதோ, தண்டிக்கப்படுவதோ அரிதாகவே நடக்கிறது. தண்டிக்கப்பட்டாலும், அவர்கள் சிறைச்சாலைகளையே, குளுகுளு சாதனங்கள், தொலைக்காட்சி - வானொலி, பஞ்சு மெத்தை, செல்.ஃபோன், அறுசுவை உணவு, போதைச் சரக்குகள் கொண்ட உல்லாச வாழ்விடங்களாக மாற்றிக் கொண்டு விடுகிறார்கள். சிறைத் தண்டனையை வெட்கப்படத்தக்கதாகக் கருதுவதில்லை; சமூகத் தகுதியாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

தண்டனை தீர்ப்புப் பெற்ற நரசிம்ம ராவ், ஒருவேளை பிணையில் விடப்படாமல், சிறையிலடைக்கப்பட நேர்ந்திருந்தால், அவர் "சிறை" வைக்கப்படுவதற்காக ஒரு விருந்தினர் மாளிகையை ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள்! விசாரணைக்கு வரும் ஜெயலலிதா முதலிய இலஞ்ச-ஊழல் பேர்வழிகள் குற்ற உணர்வையா காட்டுகின்றனர்? காதுவரை வாய் கிழியச்சிரித்து, வெளிநாட்டுக்கு விமானம் ஏறுபவரைப் போலக் கையசைக்க, விசுவாசிகள் வாழ்த்துக் கோஷமிட கம்பீரமாக அல்லவா வந்து போகிறார்கள்! சட்டத்தையும், நீதியையும் கேலி செய்து கூத்தடிக்கிறார்கள்! தனி நீதிமன்றத்துக்கு வந்தால் கொடிய நோயால் அவதிப்படுபவர்களைப் போல ஆம்புலன்சு வண்டி, ஆக்சிஜன் சிலிண்டருடன் வந்தும், இடைவிடாது தும்மல் போட்டும் தனி நீதிமன்றத்தைத் துச்சமாக மதித்தும் நாடகமாடினர். வரவிரும்பாத போது உடல்நிலை சரியில்லை என்று பச்சையாகப் புளுகிவிட்டு, தமது பரிவாரங்களுடன் உல்லாக, பக்திப் பயணம் போகின்றனர். நீதிமன்றத்திலேயே துணிந்து பொய்வாக்கு மூலம் அளிக்கின்றனர். இதையெல்லாம் சட்டமும், நீதியும் வேடிக்கை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது.

ஜெயா-சசி, ராவ்-பூட்டா சிங் முதலியோரின் குற்றங்கள் நடந்து எட்டாண்டுகளாகி விட்டன. விசாரணை துவங்கி நான்காண்டுகளாகி விட்டன. தனி நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றங்கள் எனச் சட்டத்தின் சந்து பொந்துகளில் இழுத்தடிக்கப்பட்டு ஒரு வழியாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. "வீரப்பனை ஏன் இன்னும் பிடிக்கவில்லை?" என்று குதிக்கும் உச்ச நீதிமன்றத் துரைமார்கள், "ஜெயா, ராவ் போன்ற கிரிமினல்களைத் தண்டித்து, ஏன் இன்னும் சிறையிலடைக்கவில்லை" என்று கேட்கவில்லை. "தண்டனை

தொடர்ச்சி 22-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

## சாதி அரசியல் - வாரிசு அரசியல்

# தமிழகத்தைக் கவ்விய இரு கொள்ளை நோய்கள்

தமிழ்நாட்டுத் தேர்தல் அரசியலை இரண்டு தொற்று நோய்கள் தாக்கி நீண்ட காலமாகிவிட்டது. வாரிசு அரசியலும் சாதி அரசியலும்தான் அந்த இரண்டு கொடிய நோய்கள்.

இப்போது அந்த இரண்டு நோய்களுமே முற்றி, அழுகி சீழ் வடிகிறது; முடைநாற்றமடிக்கிறது. தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் மகன் மு.க. அழகிரியுடன் தி.மு.க.காரர்கள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அக்கட்சித் தலைமை, அதாவது மு.க. அழகிரியின் தந்தையே அறிவிப்புச் செய்தவுடன், மதுரை வட்டாரத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரசியல் பொறுக்கிகளின் ரௌடித்தனம்; பாண்டிச்சேரியில் உள்ள அபிஷேகப் பாக்கம் கிராமத்து மக்களின் தடையை மீறி அங்கே கொடியேற்றப் போன பாட்டாளி மக்கள் கட்சி சர்வாதிகாரி இராமதாசு மீது "கொலை முயற்சித் தாக்குதல்" நடந்ததாகக் கூறி, தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் ஏவிவிடப்பட்ட வன்னிய சாதிவெறிக் கலவரம்—இந்த இரு சம்பவங்களும் வாரிசு அரசியல் நோயும், சாதி அரசியல் நோயும் எந்த அளவு முற்றிப் போயிருக்கின்றன என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

செப்டம்பர் மாத மத்தியில் தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில், மு.க. ஸ்டாலினைப் "பட்டத்து இளவரசராக" முடிசூட்டும் ஏற்பாடுகள் தடபுடலாக அரங்கேறிய போதுதான், அக்கட்சிக்குள் வாரிசுப் போட்டி பகிரங்கமாக வெடித்தது. பெரியார், அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரின் முகவரிசையில் மு.க. ஸ்டாலினுடைய முகத்தையும் சேர்க்கும் கட்சி இலச்சினை, முப்பெரும் விழாவுக்கான விளம்பரப் பிரச்சாரங்களில் திட்டமிட்டுப் புகுத்தப்பட்டது. அதுவரை வாரிசு ஆட்சி உரிமை ஆசையை இரகசியமாக வைத்திருந்த மு.க. அழகிரி கொதித்துப் போனார்.

முப்பெரும் விழாவுக்குச் சில நாட்கள் முன்னதாக, தாம் அரசியலில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார் அழகிரி. அதேசமயம், முப்பெரும் விழாவைப் புறக்கணிக்கும்படி தனது செல்வாக்கின் கீழுள்ள மதுரை மாநகரம், மதுரை வடக்கு, தெற்கு ஆகிய மூன்று மாவட்டத் தி.மு.க. செயலர்களையும் பணித்தார்.

இதனால் கடுப்புற்ற கருணாநிதி அம்மூவர் மீதும் விளக்கம் கோரி நடவடிக்கை எடுத்ததோடு, "அழகிரியுடன் கழகத்தவர்கள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது" என்று கழகத் தலைமை அறிக்கைவிட்டது. அவ்வளவுதான் மு.க. அழகிரியின் ஆதரவாளர்களான அரசியல் பொறுக்கிகள் களத்தில் இறங்கி விட்டார்கள். இரண்டு நாட்கள் வன்முறை வெறியாட்டங்கள் நடத்தினர். எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அடித்து நொறுக்கப்பட்டன - கொளுத்தப்பட்டன. அறிவிக்கப்படாத கடையடைப்பு; வெறி உச்சிக்கேறியபோது போவோர் மீது தாக்குதல்; உருட்டுக் கட்டைகளைச் சுழற்றிக் கொண்டு பீதி கிளப்பினர்.

★★★

தமிழ்நாட்டு அரசியலில் வாரிசு அரசியலைப் புகுத்திய முன்னோடிகளில் ஒருவர் கருணாநிதி! தனது மூத்த மகன் மு.க. முத்துவை சினிமாவில் நுழைத்து எம்.ஜி. ஆரைப் போல பிரபலமாக்கி, அரசியல் வாரிசாக உருவாக்குவதற்கான முயற்சியில் 1970-இல் ஈடுபட்டார் கருணாநிதி. கோடிக் கணக்கில் கருப்புப் பணத்தை வாரி இறைத்தும் மொடாக் குடியரான முத்துவின் சினிமா அரங்கேற்றம் படுதோல்வியில் முடிந்தது; அதோடு கருணாநிதியின் இந்த முயற்சி எம்.ஜி.ஆருக்கு ஆத்திரத்தைத் தூண்டி, தி.மு.க.வைப் பிளப்பதற்கான காரணங்களில் ஒன்றானது.

அடுத்து இந்த மு.க. அழகிரியைத் தனது வாரிசாக்கும் முயற்சியில் கருணாநிதி இறங்கினார். அந்நாள் அமைச்சர் ஓ.பி. ராமனின் மைத்துனியை அழகிரிக்கு மணமுடித்து வைத்து, "தாழ்த்தப்பட்ட மக்களின் சம்பந்தி நான்" என்று கூறி தேர்தல் பிரச்சாரம் செய்தார் கருணாநிதி. அதுவே மு.க. அழகிரி அரசியல் தலைவராக உயர்வதற்கான தகுதியென்று நம்பச் சொன்னார். அதனால்தான் 1980-களில் தனது பத்திரிக்கையான முரசொலியின் மதுரைக் கிளைப் பொறுப்பாளராக்கினார். ஆனால், அழகிரியின் அடாவடி நிர்வாகத்துக்கு எதிராகத் தொழிலாளர் பிரச்சினை எழுந்து, முரசொலியின் மதுரைப் பதிப்பே மூடப்பட்டது. கழகத்தில் இருந்து பலர் வெளியேறி, எம்.ஜி.ஆர். கட்சியில் இணைந்தனர்.

அழகிரியை அரசியல் வாரிசாக்கும் முயற்சி தோல்வி காணவே, மு.க. ஸ்டாலினை இளைஞரணித் தலைவராக்கினார் கருணாநிதி. 1976-77 அவசர நிலைக் காலத்தில் மிசா கைதியாக சிறையிலடைக்கப்

வன்முறை-கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்தி, தென் மாவட்டங்களைத் தனது பிடிக்குள் வைத்துக் கொள்ள முயலும் நவீன குறுநில மன்னன் மு.க. அழகிரி, (இடமிருந்து மூன்றாவது) தனது தளபதிகள் புடைசூழ மதுரை மத்திய சிறையைக் கலக்கிவிட்டு இராஜநடை போடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

பட்ட தியாகி ஸ்டாலின் என்ற பிரச்சாரத்தோடு, அன்பில் பொய்யாமொழி, பரிதி இளம்வழுதி போன்ற இரண்டாம் மட்டத் தலைவர்களின் வாரிசுகளைக் கொண்ட ஒரு கும்பல் உருவாக்கப்பட்டது. நாட்டிலேயே உட்கட்சி ஜனநாயகத் தேர்தல்கள் முறைப்படி நடத்தும் பாரம்பரியமிக்க கட்சி என்று தி.மு.க.வுக்குப் பெயர் உண்டு. ஆனால், எல்லாத் தேர்தல் முடிவுகளையும் முன் கூட்டியே திட்டமிட்டு, மோசடி - நிர்பந்தம் மூலம் தன் விருப்பம் போல செய்து முடிப்பவர் கருணாநிதிதான். அதனால்தான் கழகத்தின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராக கருணாநிதி 30 ஆண்டுகளாக விளங்குகிறார்.

இதே உத்தியைப் பயன்படுத்தி வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல கழகத்துக்குள் ஸ்டாலினைத் திணித்தார். எல்லா மட்டங்களிலும் உள்ள தனது விசுவாசிகளைக் கொண்டு, வரவேற்பு, பொதுக் கூட்டங்கள், பேரணிகளை ஸ்டாலினை முன்னிறுத்தி நடத்தும்படி செய்தார். ஸ்டாலின் சேவைக்கென்றே உருவாக்கி வளர்க்கப்பட்ட இளைஞரணி பிரமுகர்களுக்குக் கட்சியிலும் பதவியிலும் எலும்புத் துண்டுகள் போடப்பட்டன. அவர்களோடு சேர்த்து ஸ்டாலினும் எம்.எல்.ஏ., மேயர் என்று முன்னேறி, கருணாநிதியின் அரசியல் வாரிசு ஸ்டாலின்தான் என்று பொதுச் செயலர் அன்பழகன் வாயாலேயே அறிவிக்கச் செய்தார்.

மு.க. அழகிரி இதையெல்லாம் சகித்துக் கொண்டு, தலைமைக்குப் போட்டியாக நிற்காமல் இதுவரை ஒதுங்கியிருந்ததற்குக் காரணம், தமிழ்நாட்டின் தென்பகுதி ஆளுகையில் வேறு யாரும் தலையிட மாட்டார்கள்; ஒரு குறுநில மன்னரைப் போல, மதுரையில் இருந்து சிற்றரசு நடத்துவது தொடரும் என்ற நம்பிக்கையிலிருந்தார்.

ஸ்டாலின்தான் தி.மு.க.வின் எதிர்காலத் தலைவர், கருணாநிதியின் அரசியல் வாரிசு, அங்கிருந்தால் தலைமைக்கு உயர முடியாது என்பதால் கட்சியைப் பிளந்து கொண்டு வெளியேறினார், வை.கோ. ஸ்டாலினுக்குப் போட்டியாக வை.கோ. வளர்ந்து விடுவார் என்பதால், அவர் வெளியேறுவதற்கான நிர்பந்தத்தை கருணாநிதியும் உருவாக்கினார். ஆனால், கருணாநிதிக்கு அதிர்ச்சியூட்டும் வகையில் மதுரை பொன். முத்து, கோவை மு. கண்ணப்பன், தஞ்சை எல். கணேசன், மதுராந்தகம் ஆறுமுகம், செஞ்சி ராமச்சந்திரன் போன்ற தூண்களும் வைகோவுடன் வெளியேறினர். குறிப்பாக, தென்மாவட்டங்களில் ஏற்பட்டச்



தமிழகமெங்கும் மரங்களை நட்டு வரும் சமூக சேவகன் என்ற பெயரில் அரசியலில் திணிக்கப்படும் இராமதாசின் வாரிசு அன்புமணி.

சரிவை ஈடுகட்டிக் கழகத்தைக் காப்பதற்கு உழைத்தார் அழகிரி என்கிறார்கள். அப்படி என்ன இரத்தம் சிந்தி உழைத்தார்? வெளியேறியவர்களுக்குப் பதிலாக ஒரு பொறுக்கி அரசியல் படையை உருவாக்கினார். அதற்காக கோடிக் கணக்கில் பணத்தை வாரி இறைத்தார். கட்சி மற்றும் அரசு செல்வாக்கைப் பயன்படுத்தி பதவி—அதிகாரம் என்ற எலும்புத் துண்டுகளை வாரியிறைத்தார். கட்டைப் பஞ்சாயத்து, கந்துவட்டி, மீட்டர்வட்டி, அடாவடி ஆக்கிரமிப்புகளுக்குத் துணை நின்றார். கழகத்தவரின் கலியாணம், காது குத்து, புதுமனைப் புகுவிழா எதுவானாலும் தவறாது போய் "மொய்" எழுதினார்.

அரசு அலுவல்களில் அழகிரியின் தலையீடு எல்லை மீறிப்போனது.

புதிய வரவுகளான கருப்பசாமி பாண்டியன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் ஸ்டாலின் விசுவாசிகளாக, இந்தக் கும்பல் ஆதிக்கம் தலைதூக்கவே, முன்புபோல கட்சியிலும் அரசிலும் காரியங்களைச் சாதிக்க முடியாத நிலை ஏற்பட்டது. "என்னை நம்பி வரும் கழகத் தொண்டர்களுக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆதலால் நான் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்கிறேன்" என்று பச்சையாகச் சொன்னார் அழகிரி. அதிலிருந்து பகிரங்கமான வாரிசுச்சண்டை வெடித்தது.

அழகிரி இப்படிப் பொறுமுகிறாரே இதன் பொருள் என்ன? அவர் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டுக் கழகத் தொண்டர்களுக்கு ஏதாவது செய்து வந்தார் என்றுதானே தெரிகிறது. கட்சியிலோ, அரசிலோ எந்தப் பதவியிலும் இடம் பெறாமல் எப்படி இதைச் செய்ய முடிந்தது? சட்டத்துக்குப் புறம்பாக ஒரு அதிகார மையத்தை உருவாக்கிக் கொண்டு, அதில் எந்தப் பாதிப்பும், குறைபாடும் வரக்கூடாது என்று அடம்பிடிக்கிறார் அழகிரி. அதற்காகத் தனது விசுவாசிகளை ஏவிவிட்டு கலவரம் செய்கிறார். பேருந்து எரிப்புக்கு எதிராக வழக்குப் போட்டவரைத் தாக்கியிருக்கிறார்.

இப்படித்தான் ஜெயலலிதா ஆட்சியிலும் விஜயன், சண்முகசுந்தரம் ஆகிய வக்கீல்கள் தாக்கப்பட்டனர். இவ்வளவு நடந்தும், "அழகிரி விவகாரம், ஒரு உட்கட்சிப் பிரச்சினை" என்று சொல்லி அமுக்கப் பார்க்கிறார் கருணாநிதி. ஜெயலலிதா பாதையில்தான் கருணாநிதியும் போகிறார். அரசுக்கு வெளியே அதிகார மையமாக அப்போது விளங்கிய "நடராஜனுடன் (சசிகலா) தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம்" என்று அறிக்கை விட்டார் ஜெயலலிதா. "ஜானகியுடன் அரசியல் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம்" என்றார், எம்.ஜி.ஆர். எல்லைமீறிப் போகும் இந்தச் சக்திகளை உருவாக்கியவர்கள் அவர்கள்தானே?

"மாறன், அழகிரி, ஸ்டாலின் என்று குடும்ப ஆட்சி நடத்துகிறார் கருணாநிதி" என்று சரியாகவே குற்றஞ்சாட்டும் ஜெயா - சசி கும்பல், அதே வேலையைத்தான் செய்கிறது. எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு ஜெயலலிதாவும் ஜானகியும் நடத்திய சக்களத்தி அரசியல் சண்டையில் நாடே நாறியது. "எனக்கென்ன புள்ளையா, குட்டியா?" என்று கேட்டு ஆட்சியைப் பிடித்த ஜெயலலிதா, சசிகலா குடும்பத்துடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு, அதன் உறுப்பினர்கள் பெயரில் கோடி கோடியாகக் குவித்தார். அரசியல் வாரிசை உருவாக்கும் முயற்சியாகவே வளர்ப்பு மகனைத் தத்தெடுத்தார். அது படுதோல்வியில் முடிய, அவரது அண்ணன்களான தினகரன், பாஸ்கரனை அரசியல் வாரிசுகளாக வளர்க்கிறார். சசிகலா குடும்பந்தான் ஜெயா கட்சியை ஆக்கிரமித்து ஆட்டி வைக்கிறது என்பது நாடறிந்த விடயம்.

மூப்பனாரும், வைக்கோவும் இரகசியமாகவே தமது மகன்களை அரசியல் வாரிசுகளாக வளர்க்கின்றனர். தானோ, தனது குடும்பத்தினரோ கட்சியிலும் ஆட்சியிலும் ஏந்தப் பதவியும் வகிக்க மாட்டோம் என்று

படிப்பகம்

www.padippakam.com

சபதம் செய்த பா.ம.க. இராம தாசுதான் பச்சையான பேரா சையுடன் அரசியலில் குடும் பத்தையே இறக்கி விட்டுள்ளார். மகன் அன்பு மணி, மனைவி சரசுவதி மட்டுமல்ல, மருமகள், பேரன் - பேத்தியைக் கூட கட்சிக்குள் திணித்துக் கட்சியைக் குடும்பச் சொத்தாக்கி விட்டார். முத லாளிகளை உருட்டி மிரட்டிப் பணம் பறிக்கும் ''பசுமைத் தாயகம்'' என்ற பெயரால் அமைப்பு வைத்து, சர்வதேச நிறுவனங் களின் மானியங்களைச் சுருட்டிக் கொண்டு, மரம் நடும் சமூக சேவை நாடகமா டுகிறது இராமதாசு - அன்பு மணி கும்பல்.



தன்னைத் 'தாக்கிய' தாழ்த்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, பாண்டி மாநில அரசு அதிகாரிகளை மிரட்டும் இராமதாசு.

தமிழ்நாடு மட்டுமல்ல, நாடு முழுவதும் தற்போது எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், மந்தி ரிகள், முதல்வர்களாக உள்ளவர்களில், குறைந்தது 60 சதவீதம் பேர், முன்னாள் களின் வாரிசுகள்தாம். பரம்பரை பரம்பரை யாக இது தொடர்கிறது. ஆடம்பர, உல்லாச, ஊதாரிகளாகவும், தின்று கொழுத்தும் வளரும் இந்த வாரிசுகள், கந்துவட்டி, கடத்தல், கட்டைப் பஞ்சாயத்து போன்ற சமூக விரோதத் தொழில்கள் தொடங்கி பன்னாட்டுத் தொழில் கழக முகவர்களாக உயர்ந்து, எந்தவித உழைப்பும் தகுதியும் இல்லாமலேயே கட்சியில் ஆதிக்கத்தை நிறுவி, அடாவடித் தேர்தல்கள் மூலம் பத விக்கும் வருகின்றனர். இலஞ்ச - ஊழல் அதி கார முறைகேடுகள் செய்து, பணத்தில் படுத்துப் புரளும் இந்த இரத்தம் குடிக்கும் அட்டைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டால் தவிர, சமூகத்தின் மீதுள்ள தன் பிடியை விட மாட்டா.

★★★

**வா**ரிசு அரசியலைப் போலவே சாதி அரசிலையும் பச்சையாகச் செய்கிறார், இராமதாசு. ஆரம்பத்தில் மஞ்சள் நிறக் கொடி, அக்னிக் கும்பச் சின்னம், வன்னிய இளைஞர் திருவிழா என்றும், 20 சதவீத இட ஒதுக்கீடும் கேட்டு சாலை மறியல், கடையடைப்பு, மரம் வெட்டுதல், பாலம் தகர்ப்பு என்று சாதா ரண சாதி சலுகைக்கே தீவிரமான போராட்டங்களை நடத்தினார், இராம தாசு. போராட்ட வடிவங்களில் காட்டும் தீவிரத்தைக் கண்டே மதிமயங்கிப் போன பேராசிரியர்கள் சிலர், அவ ருக்கே மார்க்சிய, பெரியாரிய, அம்பேத் கரிய சாயம் பூசி, சமூகநீதி நாயகனாக உருவாக்கினர். அரசியல் பேராசை கொண்டு பாட்டாளி மக்கள் கட்சியைத் துவக்கினார். மாபெரும் போராளி - தியாகியாக நடித்தார்.

ஆனால், ஆரம்பம் முதலே அரசியல் இலாபத்துக்காக விலைபோகக் கூடிய வர்தான் என்பதை இராமதாசு நிரூபித்தார். மூப்பனார் - இராஜீவ், கருணாநிதி, ஜெயல லிதா என மாறி மாறிப் பேரங்கள் நடத்தி ஆதாயம் அடைந்தார். ஆடம்பரமாக அணிந்து கொண்ட கொள்கைப் பட்டாடை களை எல்லாம் வீசிவிட்டு, பதவிக்காக பார தீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் கூட்டுச் சேர்ந்தார். மந்திரி பதவியை வைத்துக் கோடி கோடியாக வாழப்பாடி சம்பாதித்ததைக் கண்டு பேராசை மிகுதியா கவே, வன்னியர் சாதியில் ஏகபோக ஆதிக்கம் பெறவும், வாரிசைப் புகுத்தவும் முடிவு செய்தார். அவரது ''போர்க்குணம்'', தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், வன்னிய சாதிக்குள்ளாகவே அவரது சர்வாதிகாரத்தை ஏற்க மறுக்கும் போட்டியாளர்களுக்கும் எதி ராகத் திரும்பியது. இவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்துவதற்கென்றே தனது நெருங்கிய உறவினரான காடு வெட்டி குருவை வன்னிய சங்கத் தலைவ ராக்கி, அதிரடிக் குண்டர் படையும் உருவாக் கியுள்ளார், இராமதாசு. வடமாவட்டங் களில் தனது ஏகபோக சாதி ஆதிக்கத்துக்குத் தடையாக விடுதலைச் சிறுத்தைகள் என்ற தாழ்த்தப்பட்டவர் அமைப்புதான் தடையாக இருப்பதாகக் கருதி, அச்சாதி யினர் மீது சாதிவெறி பிடித்த வன்னியர்கள் தாக்குதல்கள் நடத்துவதை ஊக்குவிக் கிறார்.

பாண்டிச்சேரியில் உள்ள அபிஷேகப்பாக்கம், முழுக்க முழுக்கத் தாழ்த்தப் பட்ட மக்கள் வாழும் கிராமம். அங்கே அரசியல் கட்சிகள் எதுவும் கொடியேற் றுவதை கிராம மக்கள் கூட்டாகத் தடை செய்துள் ளனர். வேண்டுமென்றே தடையை மீறி அங்கே கொடி யேற்றுவதற்கு அடியாட்படையுடன் போய் ஆத்திரமூட்டும் வேலையில் இறங்கியது பா.ம.க. அப்போது தன்னைக் கொலை செய்ய முயன்றதாக ஆவேசமாகப் பேசிய இராமதாசு, தமிழகவட மாவட்டங்களிலும், பாண்டியிலும் கலவரங்கள் நடத்தும்படி தூண்டினார்.

அடுத்தநாளே பாண்டியிலும் தமிழ்நாட் டிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பேருந்துகள் நொறுக்கப்பட்டன. மூன்று பேருந்துகள் கொளுத்தப்பட்டன. இரண்டு காலனிகள் கொளுத்தப்பட்டதில் ஒரு தாழ்த்தப்பட்ட முதியவர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட் டார். அரசு பேருந்து மீது கடலூரில் நடந்த கல்வீச்சில் ஒரு பெண் கொல்லப்பட்டார்.

தன்னைக் கல்லால் அடித்தே கொலை செய்ய முயன்றதாகவும், தாழ்த்தப்பட்ட வர்கள் மீது போலீசு நடவடிக்கை எடுப்ப தில்லை என்றும் குற்றஞ்சாட்டுகிறார், இராம தாசு. ஆனால், காடு வெட்டியில் இருந்து திண்டிவனம் நோக்கி வன்னியர் சங்கக் கொடியுடன் பதிவு எண் இல்லாமல் விரைந்து கொண்டிருந்த ஜீப்பை போலீசார் மடக்கியபோது, ஒன்பது வீச்சரி வாள்கள், உருட்டுக் கட்டைகளுடன் 12 ஆட்களும் பிடிபட்டிருக்கிறார்கள்.

இதுதான் இன்றைய தமிழ் நாட்டின் நிலை. வீச்சரிவாள்கள், உருட்டுக் கட்டைகள், வயர்லஸ் கருவி களுடன் டாடாசுமோ, ஜீப் வண்டிகளில் மாஃபியா கிரிமினல் கும்பல்களைப் போல குறுக்கு நெடுக்கும் பறக்கிறார்கள் சாதிவெறிக் குண்டர்கள். தெருவில் இறங்கியதும் வெறிக் கூச்சல் போட்டு, அரிவாள்களையும் உருட்டுக் கட்டைக ளையும் சுழற்றுகிறார்கள்; பயபீதியில் ஓடி ஒளியாதவர்களை அடித்து நொறுக் குகிறார்கள்; எதிரிகளை வெட்டுகி றார்கள். வயர்லஸ், செல்ஃபோன்களில் தகவல்கள் வந்ததும் வேறு இடத்துக்குப் பறக்கிறார்கள். போலீசு சூழ்ந்து

வீச்சரிவாள், உருட்டுக் கட்டைகளுடன் பிடிபட்ட வன்னிய சாதி இளைஞர்கள்: சாதிவெறிக் குண்டர்களின் பிடியில் தமிழகமா?



படிப்பகம்

www.padippakam.com

கொண்டால், அவர்களையும் மிரட்டுகிறார்கள். அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, சாதித் தலைவர்களும் இதே படை புடை சூழத்தான் வந்து போகிறார்கள்.

கூட்டணிக் கட்சியானாலும், தன் கட்சியானாலும் கலவரங்களில் ஈடுபடுபவர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் அடைத்து வருவதாக கருணாநிதி அறிக்கை விடுக்கிறார். கலவரம் செய்பவர்கள் ஏவிவிடப்படும் அம்புகள்தாம். அதற்குக் காரணமான இராமதாசு, காடுவெட்டி குரு, அழகிரி போன்றவர்களை என்ன செய்தார்? போலீசு நிலையத்திற்குள் புகுந்து கைது செய்யப்பட்டவர்களைத் தானே மீட்டு வரும் அழகிரிக்கு சலாம் போட்டு வழி அனுப்புகின்றனர், அதிகாரிகள்.

> ''நந்தன் வழி'' சில மாதங்களுக்கு முன்பு பா.ம.க. தொண்டர்களைப் பேட்டி கண்டு, அவர்களின் அரசியல் தெளிவு கண்டு மெய்சிலிர்த்துப் போய் எழுதியிருந்தது . ஆனால் ஈரோட்டுப் பெரியாரின் வாரிசெனப் பீற்றிக் கொள்ளும் இராமதாசையே தெய்வமாக்கி, அவர் சொல்லையே தெய்வவாக்காக்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக வன்னிய சங்கத் தலைவர் காடு வெட்டி குரு வெறிக் கூச்சலிட்டுச் சொல்கிறார்: "இப்போது, அந்தத் தெய்வவாக்கை மீற முடியாமல்தான் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டிருக்கிறோம். இல்லாவிட்டால், மாதக்கணக்கில் தமிழ்நாடே ஸ்தம்பித்துப் போயிருக்கும்.''

சாதி சங்கம் வைத்து, அதையே அரசியல் கட்சியாக வளர்த்து, மைய அரசில் அதிகாரப் பங்கு பெறும் அளவு இராமதாசு வளர்ந்துவிட்டது, பிற சாதித் தலைவர்களுக்கும் தெம்பூட்டுவதாகிவிட்டது. குறிப்பாக, ஜெயலலிதாவின் அ.தி.மு.க. முக்குலத்தோர் கட்சியாக மாறிவிட்ட நிலையில், அவரால் ஓரங்கட்டப்பட்ட முன்னாள் அதிமுக பிரமுகர்கள், தாம் குவித்து வைத்திருக்கும் கோடி கோடியான கருப்புப் பணத்தை வைத்து ஆளுக்கொரு சாதிக் கட்சிகள் உருவாக்கித் துவங்கி விட்டனர்.

அ.தி.மு.க. முன்னாள் மந்திரி கு.ப. கிருஷ்ணன், முத்தரையர் சாதித் தலைவராகக் கூறிக் கொண்டு "தமிழர் பூமி" என்ற கட்சி துவங்கி, மாநாடு - பேரணி நடத்தி விட்டார். அக்கட்சியின் முன்னாள் எம்.பி. ஏ.சி. சண்முகமும், எம்.ஜி.ஆர். சினிமா சிரிப்பு நடிகர் ஐசரிவேலனின் மகனான ஐசரி கணேசனும் இணைந்து அனைத்து முதலியார் பேரவை துவங்கி, பல மாநாடுகள் - பேரணிகளுக்குப் பிறகு, ''புதிய நீதிக் கட்சி'' என்று கட்சியையும் நிறுவிவிட்டனர். அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் கண்ணப்பனும், மூப்பனாரின் நெருங்கிய நண்பரும் இந்தியன் வங்கி ஊழல் தலைவர் கோபாலகிருஷ்ணனும் இணைந்து யாதவ சாதிக்கான ''மக்கள் தமிழ் தேசம் கட்சி''யை நிறுவியுள்ளனர்.

ஏற்கனவே, முக்குலத்தோருக்கென அ.தி.மு.க. இருக்கும் அதேசமயம், மீதியுள்ள கட்சி சாராத முக்குலத்தோரையும் அணி திரட்டுவதற்கு ''மூவேந்தர் முன்னேற்றக் கழகம்'' என்ற கட்சியை மதுரை சேதுராமன் தொடங்கி நடத்தி வருகிறார். தெலுங்கு பேசும் பல பிரிவினருக்குமாக ''தெலுங்கு திராவிடர் கட்சி''யை, சில ஆலை - பேருந்து முதலாளிகள் துவங்கி, நடத்தி வருகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களது இரு உட்பிரிவுகள் பெயரால் கிருஷ்ணசாமியும், திருமாவள

தொடர்ச்சி 17-ஆம் பக்கம்

# ஆட்சியாளர்களைப் பணிய வைத்த விடாப்பிடியான போராட்டம்

உசிலம்பட்டி வட்டம், அய்யனார் குளம் கிராமத்தில் உள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளியில் தேவையான அளவுக்கு ஆசிரியர்களை நியமித்து முறையாக நிர்வகிக்கக் கோரி, இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் முன்னணி கடந்த ஆகஸ்டு மாதத்தில் மக்களைத் திரட்டி பள்ளிக்கூடத்தைப் பூட்டும் போராட்டத்தை நடத்தியது. (பார்க்க: புதிய ஜனநாயகம் செப். 16-30 இதழ்) அதைத் தொடர்ந்து ஆட்சியாளர்கள் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தி, விரைவில் உரிய அளவுக்கு ஆசிரியர்களை நியமிப்பதாக வாக்குறுதி அளித்தனர். ஆனாலும் வாக்குறுதியின்படி செப்டம்பரில் ஆசிரியர்களை நியமிக்காமல் ஏய்த்து வந்தனர். இதை அம்பலப்படுத்தி கிராம மக்களிடம் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்த வி.வி.மு. ஆசிரியர் நியமனத்தோடு கூடுதல் பேருந்து வசதி, பொதுத் தொலைபேசி இணைப்பு மற்றும் அடிப்படை வசதிகளைக் கோரி செப்டம்பர் 6-ந் தேதியன்று பேருந்து மறியல் போராட்டத்தை அறிவித்தனர்.

இதனால் பீதியடைந்த வட்டாட்சியர், போராட்டத்துக்கு முதல் நாளன்று நேரில் வந்து 15 நாட்கள் அவகாசம் தருமாறு கோரி சமரசப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் வந்தால்தான் பேச்சு வார்த்தைக்கு வர முடியும் என்று வி.வி.மு. உறுதியாக நின்றதும் திரும்பிச் சென்று விட்டார். பிறகு, இப்பகுதி போலீசு துணை ஆய்வாளர் வந்து, போராட்ட நாளன்று மூக்கையா தேவர் குருபூசை நடப்பதால், ஒரு வாரம் கழித்துப் போராட்டம் நடத்துங்கள் என்று நைச்சியமாகப் பேசிப் பார்த்தார். மக்கள் போராட்டத்தைவிட, சாதியப் பிழைப்புவாதிகள் நடத்தும் மூக்கையா தேவர் குருபூசை எங்களுக்கு முக்கியமல்ல என்று வி.வி.மு. பதிலடி கொடுத்து, மக்கள் பிரச்சினையில் ஆட்சியாளர்கள் காட்டும் அலட்சியத்தை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்து, திட்டமிட்டபடி போராட்டம் நடக்கும் என அறிவித்தது.

செப்டம்பர் 6-ஆம் நாளன்று வி.வி.மு. தலைமையில் பேருந்து மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது. அதிர்ச்சியடைந்த தாசில்தாரும் போலீசாரும் கிராமத்துக்கு ஓடோடி வந்து கோரிக்கைகளைக் கூடிய விரைவில் நிறைவேற்றுவதாகவும் போராட்டத்தைக் கைவிடுமாறும் கெஞ்சிப் பார்த்தனர். அவர்களது பசப்பல்களை நம்ப மக்கள் தயாராக இல்லை. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் வந்து வாக்குறுதி அளிக்காமல் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்று மக்களும் உறுதியாக நின்றனர். பின்னர் மாலை 5 மணிக்கு இந்த அடையாளப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, மீண்டும் அடுத்த கட்டப் போராட்டத்தைத் தொடர்வது என கிராம மக்கள் தீர்மானித்தபடி அன்றைய போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இப்போராட்டத்தைத் தொடர்ந்து தற்போது பள்ளிக்குத் தேவையான அளவுக்கு நான்கு ஆசிரியர்களை நியமித்துள்ளனர். வி.வி.மு. தலைமையில் கிராம மக்கள் தொடர்ந்து போராடியதன் விளைவாகவே ஆட்சியாளர்கள் அசைந்து கொடுத்துக் கோரிக்கையை நிறைவேற்றியுள்ளனர்.

ஆட்சியாளர்களின், அதிகார வர்க்கத்தின் உண்மை முகத்தைப் புரிந்து கொள்ளவும், தனியார்மய - தாராளமயக் கொள்கையால் கிராமப்புற மக்களின் உரிமைகளும் அடிப்படை வசதிகளும் புறக்கணிக்கப்படும் அவலத்தையும் விவசாயிகள் அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்ளவும் இந்தப் போராட்டமும் அதையொட்டிய பிரச்சாரமும் உதவியாக அமைந்தது.

— விவசாயிகள் விடுதலை முன்னணி,
உசிலம்பட்டி வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# பெட்ரோலிய எரிபொருட்கள் விலை உயர்வு:

# உலகச் சந்தையைக் காட்டி மீண்டும் பகற் கொள்ளை

அனைத்துலகச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்திருப்பதைக் காட்டி, பா.ஜ.க. கூட்டணி அரசு பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயுவின் விலையைக் கடந்த ஓராண்டிற்குள் இரண்டாம் முறையாக உயர்த்தியுள்ளது. நகர்ப்புறத்து ஏழைத் தொழிலாளர்களும், கிராமப்புறத்து விவசாயக் கூலிகளும் சமைக்கவும், விளக்கு எரிக்கவும் பயன்படுத்திவரும் மண்ணெண்ணெயின் விலை 49 சதவீதமும், (ரூ. 5.70லிருந்து ரூ. 8.51) சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை முப்பத்தாறு ரூபாயும் (ரூ. 202.40-லிருந்து ரூ. 238.60) அதிகரித்துள்ளன; டீசலின் விலை 18 சதவீதமும், பெட்ரோலின் விலை 8 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளன.

"டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் சர்வதேசச் சந்தை விலையை விட மலிவாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு இவற்றுக்கு மானியம் வழங்கி வருகிறது; கச்சா எண்ணெய் விலை உயர்ந்த பிறகும் இப்பொருட்களைப் பழைய விலையிலேயே விற்றால், அரசின் மானியச் செலவு அதிகரித்து, 24,000 கோடி ரூபாய் அளவிற்குப் பற்றாக்குறை ஏற்படும். எனவே, பற்றாக்குறையைத் தவிர்க்க இந்த விலையேற்றம் அவசியமானது" என்று பா.ஜ.க. கூட்டணி அரசும், தாராளமயத்தை ஆதரிப்போரும் இந்த விலையேற்றத்தை நியாயப்படுத்தி வருகின்றனர்.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் மட்டுமல்ல, இதற்கு முன்பிருந்த ஐக்கிய முன்னணி ஆட்சியிலும், அதன் முன்பிருந்த காங்கிரசு ஆட்சியிலும் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்த்தப்பட்ட பொழுதெல்லாம் "கச்சா எண்ணெய் விலை உயர்வும், மானியச் செலவும்"தான் காரணங்களாகக் கூறப்பட்டன.

டீசலுக்கும், மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் அரசு தனது கஜானாவில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் கோடி ரூபாய்களை மானியமாக ஒதுக்கி வருவதாகக் கூறப்படுவது கடைந்தெடுத்த பொய். உண்மையில், மைய அரசு தனது 'மானிய'ச் செலவிற்கு, ஏழை - நடுத்தர மக்களின் தலை மீதுதான் கைவைத்து வருகிறது. மைய அரசின் இந்த மோசடி வள்ளல்தன்மையைப் புரிந்து கொள்ளுவதற்கு முன், அனைத்துலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வின் பின்னணியையும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த விலை உயர்வு, இந்தியா உள்ளிட்டு பல்வேறு நாடுகளின் அரசுகளுக்கும், எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தனியார் - பன்னாட்டு நிறுவனங்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் தங்கச் சுரங்கமாய் அமைந்துவிட்டது.

* * *

1998-ஆம் ஆண்டு தொடக்கத்தில் பத்து அமெரிக்க டாலராக இருந்த ஒரு பீப்பாய் (கிட்டதட்ட 650.9 லிட்டர்) கச்சா எண்ணெயின் விலை, கடந்த இரண்டாண்டுகளில் படிப்படியாக உயர்ந்து, கடந்த மாதம் முப்பத்தைந்து அமெரிக்க டாலரை எட்டியது. உலக வங்கி உள்ளிட்ட அனைத்துச் சர்வதேச அமைப்புகளும், பொருளாதார நிபுணர்களும் இந்த விலை உயர்வுக்கு உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும், கச்சா எண்ணெயின் பற்றாக்குறையினையும் காரணமாகக் கூறுகின்றனர். அதாவது, வளர்ச்சி நிலையிலுள்ள உலகப் பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்றவாறு, கச்சா எண்ணெயின் உற்பத்தி அதிகரிக்கவில்லை; உலகச் சந்தையில், கச்சா எண்ணெயின் வரத்தைவிட, தேவை அதிகமாக இருப்பதுதான் இந்த விலை உயர்வுக்குக் காரணம் என்பது அவர்களின் வாதம்.

இவர்களின் வாதப்படி பார்த்தால், உலகத் தேவைக்கு ஏற்றவாறு கச்சா எண்ணெயின் உற்பத்தியை அதிகரித்திருந்தால், விலை வீழ்ந்திருக்கும் என்பது பாமரனின் அறிவுக்குக் கூட எட்டக்கூடிய தீர்வு. ஆனால், உலகச் சந்தையில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வரும் ஏகாதிபத்திய நாடுகளும், ஏழை நாடுகளும் தங்களின் நாடுகளில் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்த அக்கறை காட்டினவே தவிர, எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கக் கோரவில்லை. ஏனென்றால், இதற்கான விடை, கச்சா எண்ணெய் உற்பத்தி/விநியோகம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதிலும், இந்த விலை உயர்வால் யாரெல்லாம் எப்படியெல்லாம் ஆதாயமடைகிறார்கள் என்பதிலும்தான் அடங்கியுள்ளது.

## எண்ணெய் வள நாடுகளும், ஏகாதிபத்திய நிறுவனங்களும்

உலகின் கச்சா எண்ணெய்த் தேவையில் 40 சதவீதத்தை, பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்புதான் (OPEC) நிறைவு செய்கிறது. இக்கூட்டமைப்பிற்கு வெளியே கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கியமானவை, அமெரிக்கா, ரசியா மற்றும் இங்கிலாந்து. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்சு உள்ளிட்டுப் பல்வேறு நாடுகளிலும் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டாலும், அது உள்நாட்டின் தேவைக்கே போதுமானதாக இல்லை. எனவே, ஏகாதிபத்தியங்களையும் உள்ளிட்டு உலகின் பெரும்பாலான நாடுகள் தங்களின் கச்சா எண்ணெய்த் தேவைக்கு பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்

பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரியைக் குறைக்கக் கோரி பிரான்சு நாட்டில் "டாக்ஸி" ஓட்டுநர்கள் நடத்திய சாலை மறியல்.



www.padippakam.com

பைதான் நம்பியுள்ளன.

இப்பிரச்சினையின் பொழுது இக்கூட்டமைப்பு, "தங்களின் உற்பத்தி இலக்கைவிடக் கூடுதலாக நாளொன்று எட்டு இலட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்யப்படும்; இந்தக் கூடுதல் உற்பத்தியும் ஆறு மாதங்கள் மட்டுமே நீடிக்கும்'' என அறிவித்தது. ஆனாலும், இந்தக் கூடுதல் உற்பத்தி எவ்விதத்திலும் கச்சா எண்ணெயின் விலையை வீழ்த்திவிடவில்லை. இக்கூட்டமைப்பிற்கு வெளியே கச்சா எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் நாடுகளோ, தங்களின் உற்பத்தியை அதிகரிப்பது பற்றி வாயே திறக்கவில்லை.

தனியார்மயம் - தாராளமயத்தின் மூலம் உலக நாடுகளின் உற்பத்தியையும், ஏற்றுமதி வர்த்தகத்தையும் தங்களின் விருப்பப்படி ஆட்டிப் படைத்துவரும் ஏகாதிபத்தியங்கள், இந்தப் பிரச்சினையின் பொழுது, பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளை, உற்பத்தியை அதிகரிக்கக் கோரி எவ்வித நிர்ப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. உலக வர்த்தகத்தைக் கண்காணிக்கும் போலீசுகாரனாக வலம் வரும் உலக வர்த்தகக் கழகமும் இப்பிரச்சினை பற்றி வாய் திறக்கவில்லை. இத்தனைக்கும், பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பில் உறுப்பு நாடுகளாக இருக்கும் சௌதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத், ஐக்கிய அரபு நாடுகள், வெனிசுலா, நைஜீரியா, அபுதாபி, கதார், அல்ஜீரியா, மெக்சிகோ, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் அனைத்தும் அரைக் காலனி அல்லது நவகாலனி நாடுகள்தான்.

ஏகாதிபத்தியங்களின் மௌனம் வர்த்தகச் சுதந்திரத்தைக் காட்டுகிறது என்று யாராவது சொன்னால், அதைவிட மோசடித்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அரசியல் சுதந்திரத்தையே மதிக்காத, ஏகாதிபத்தியங்கள், அந்நாடுகளின் வர்த்தகச் சுதந்திரத்தை விட்டு வைத்து விடுமா என்ன? மாறாக, கச்சா எண்ணெயின் விலை உயர்வோடு, ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த எண்ணெய் நிறுவனங்களின் இலாப வெறியும் பின்னிப் பிணைந்து கிடப்பதுதான் மேற்குலக நாடுகளின், உலக வர்த்தகக் கழகத்தின் மௌனத்திற்குக் காரணம்.

அரபு நாடுகளில் உள்ள எண்ணெய் வயல்கள் நேரடியாகப் பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில் இல்லாமல் ஷேக்குகளுக்கும், அந்நாடுகளின் அரசுகளுக்கும் சொந்தமாக இருந்தாலும், கச்சா எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்பத்தை அந்நாடுகளுக்கு மேற்குலகைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகங்கள்தான் வழங்குகின்றன. அதேசமயம், ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் எண்ணெய் வயல்கள் இங்கிலாந்தைச் சேர்ந்த "ஷெல்'' என்ற நிறுவனத்தின் பிடியிலும், இந்தோனேஷிய எண்ணெய் வயல்கள் "கால்டெக்ஸ்'' என்ற அமெரிக்க நிறுவனத்தின் பிடியிலும் உள்ளன. சுருக்கமாகச் சொன்னால், உலகின் கச்சா எண்ணெய் உற்பத்தியிலும், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலிலும், பெட்ரோலியப் பொருட்கள் விநியோகத்திலும் மேற்குலக ஏகாதிபத்திய நிறுவனங்களின் பங்கு அசாதாரணமானது. உலகின் முதல் ஐம்பது தேசங்கடந்த தொழிற் கழகங்களை எடுத்துக் கொண்டால், அதில் 18 நிறுவனங்கள் கச்சா எண்ணெய் உற்பத்தி/சுத்திகரிப்பு/விநியோகத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த 18-இல், 9 நிறுவனங்கள் அமெரிக்காவையும், 3 நிறுவனங்கள் இங்கிலாந்தையும், இரண்டு பிரான்சையும், ஒன்று இத்தாலியையும் சேர்ந்தவை.



சமையல் எரிவாயு விற்பனையில் அரசிற்கு இலாபத்திற்கு மேல் இலாபம் கிடைப்பதால்தான், கேட்டவுடன் எரிவாயு இணைப்புக் கொடுக்கும் 'சேவை' துவங்கப்பட்டுள்ளது.

1970-களில் இதைவிடத் தீவிரமான எண்ணெய் நெருக்கடி ஏற்பட்ட பொழுது, உலகிலேயே அதிக அளவு எண்ணெய் வளம் கொண்ட சௌதி அரேபியா 1974-ஆம் ஆண்டு ஈட்டிய வருமானம் 1700 கோடி அமெரிக்க டாலர்கள்; அதே பொழுதில், அமெரிக்காவின் தேசங்கடந்த எண்ணெய்த் தொழிற்கழகமான எக்சானின் வருமானம், அந்த ஆண்டின் பாதியிலேயே 2130 கோடி அமெரிக்கா டாலர்களைத் தாண்டியது. இதிலிருந்தே, எண்ணெய்த் தொழிலின் மீது தேசங் கடந்த தொழிற் கழகங்களுக்கு இருக்கும் ஆதிக்கத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இத்தேசங்கடந்த எண்ணெய் தொழிற் கழகங்கள் தங்களின் முதலீட்டுக்குக் கனிசமான இலாபமடைய, ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் பதினெட்டு டாலருக்கு விற்க வேண்டும் என எதிர்பார்க்கின்றன. ஆனால், 1997-ஆம் ஆண்டு தென் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு, கச்சா எண்ணெயின் விலையை இருபது டாலரில் இருந்து பத்து டாலராகச் சரித்துவிட்டது. இச்சரிவில் இருந்து மீள்வதற்கு உற்பத்தியைக் குறைக்கத் தொடங்கிய இந்நிறுவனங்கள், இந்த ஆண்டின் துவக்கத்தில், புதிதாக எண்ணெய் வயல்களைத் தோண்டவும், எண்ணெய் உற்பத்திக்கும் போடவிருந்த மூலதனத்தில் 20 சதவீதத்தைக் குறைத்துக் கொண்டன. இப்படி தேசங்கடந்த தொழிற்கழகங்களின் இலாபத்திற்காக, கச்சா 'எண்ணெய் உற்பத்தியில் செயற்கையாக உருவாக்கப்பட்ட முடக்கம், எண்ணெய் விலை உயர்ந்ததற்கு ஒரு காரணம்.

இந்த விலையேற்றத்திற்கான இன்னொரு காரணத்தை, பங்குச் சந்தை சூதாட்டத்தால் இந்தியாவின் ரூபாய், ஐரோப்பாவின் யூரோ உள்ளிட்டுப் பல்வேறு நாட்டு நாணயங்களும் சரிந்து கிடப்பதில் காண வேண்டும். 1970-80-களில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றுக்கு முப்பத்தைந்து டாலராக அதிகரித்த பொழுது கூட, உள்நாட்டில் இப்படிபட்ட விலையேற்றத்தை இந்திய மக்கள் சந்தித்ததில்லை. இப்பொழுது பெட்ரோலியப் பொருட்களின் விலை விண்ணைத் தொடுமளவுக்கு உயர்ந்திருக்கிறதென்றால், ஓர் அமெரிக்க டாலருக்குநிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ 46.50-க்கு சரிந்துக் கிடப்பது முக்கியமான காரணமாகும். உலக எண்ணெய் வர்த்தகம் டாலரின் மதிப்பில் நடைபெறுவதால், பல்வேறு நாடுகளின் நாணய மதிப்புகளில் ஏற்பட்டுள்ள சரிவு, கச்சா எண்ணெயின் விலையைச்செயற்கையாக ஊதிப் பெருக்கி விட்டது.

இந்த விலையேற்றத்தால் அரபு ஷேக்குகளிடம் குவியும் கோடிக்கனக்கான அமெரிக்க டாலர்கள, மீண்டும் அமெரிக்க அரசின் பத்திரங்களிலும், அந்நாட்டின் பங்குச் சந்தையிலும் கொண்டு வந்து கொட்டப்படும்...

படிப்பகம்

www.padippakam.com

செய்யும் நாடுகளுக்குத் தேவையான ஆயு
தங்களும், ஆடம்பரப் பொருட்களும்
அமெரிக்காவில் இருந்து இறக்குமதி
செய்யப்படும். செயற்கையான முறையில்
ஊதிப் பெருக்க வைக்கப்பட்டிருக்கும்
அமெரிக்க பொருளாதாரத்திற்கு, தனது
பற்றாக்குறைகளை ஈடுகட்டிக் கொள்ள,
இந்த "பெட்ரோ டாலர்" அவசியமாகிறது.

இப்படி, எண்ணெய் வயல்/ஆலை அதி
பர்கள், பங்குச் சந்தை முதலாளிகள், ஆயுத
வியாபாரிகள் எனப் பலதரப்பட்ட முதலாளி
களின் இலாப வேட்டைக்கு இந்த விலை
யேற்றம் சாதகமாக இருப்பதால்தான், அமெ
ரிக்கா உள்ளிட்டு மேற்குலக ஏகாதிபத்தி
யங்கள் அனைத்தும் இந்த விலையேற்றத்
திற்கு எதிராகச் சுண்டு விரலைக் கூட அசைக்
கவில்லை. அதேசமயம், தாராளமயத்தின்
ஆதரவாளர்கள் இதையெல்லாம் மூடிம
றைத்துவிட்டு, "தேவையை விட வரத்து
குறைவாக உள்ளது" எனத் தூய சந்தை
விதியால் இந்த விலையேற்றத்தை நியாயப்
படுத்துவது கடைந்தெடுத்த
பித்தலாட்டமாகும்.

### பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரியும், மானியச் செலவும்

பெட்ரோலியப் பொருட்
களின் விலையேற்றத்தால் மக்க
ளிடம் ஏற்பட்டிருக்கும்
ஆத்திரம், ஐரோப்பிய நாடுக
ளில்தான் பெரும் போராட்ட
மாக வெடித்தது. பிரான்சில்
தொடங்கிய இப்போராட்டம்,
சரவெடியில் நெருப்புப் பற்றிப்
படர்வது போல, பிரிட்டன்,
ஜெர்மனி, பெல்ஜியம்,
ஸ்பெயின், இத்தாலி,
நெதர்லாண்ட்ஸ், சுவீடன்,
நார்வே, போலந்து என ஐரோப்
பிய கண்டத்தின் நாலா
திக்கிலும் பரவியது. லாரி ஓட்டுநர்கள், விவ
சாயிகள், நடுத்தர வர்க்கத்தினர் எனப் பல
தரப்பட்ட மக்களும் விலையேற்றத்திற்கு
எதிரான போராட்டத்தில் பங்கெடுத்துக்
கொண்டனர்.

ஐரோப்பாவில் நடந்த இப்போராட்டம்,
கச்சா எண்ணெய் விலை உயர்வுக்குத் தாரா
ளமயத்தின் ஆதரவாளர்கள் கூறி வரும்
அண்டப்புளுகை வெளிப்படையாகவே
கேள்விக்குள்ளாக்கியது. ஐரோப்பிய மக்கள்
பெட்ரோலியப் பொருட்கள் மீது வரிக்கு
மேல் வரி போட்டு கொழுத்து தங்கள் நாட்டு
அரசாங்கங்களை எதிர்த்துப் போராடினார்
களே தவிர, "உற்பத்தியைப் பெருக்கு"
எனக் கோரிப் போராடவில்லை. பெட்ரோ
லியப் பொருட்களின் விலை விஷம் போல்
ஏறுவதைத் தடுக்க, அப்பொருட்களின் மீது
விதிக்கப்படும் வரியைக் குறை என்பதே
அவர்களின் கோரிக்கையாக இருந்தது.

ஐரோப்பிய அரசுகளுக்கு மட்டுமல்ல,
கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும்
அனைத்து நாடுகளின் அரசாங்கங்க
ளுக்கும், பெட்ரோலியப் பொருட்களின்
மீது விதிக்கப்படும் வரி, பொன் முட்டை
யிடும் வாத்தைப் போலவே உள்ளது.
இந்திய அரசு, பெட்ரோலியப் பொருட்
களின் விற்பனையின் மூலம் மக்களிடமி
ருந்து பிடுங்கிக் கொள்ளும் வரி வருமா
னத்தில் ஒரு சிறு பகுதியைத் தான் மானிய
மாகக் கொடுக்கிறதேயொழிய, இதற்கென்று
தனியாக நிதி ஒதுக்குவது கிடையாது.

தமிழகத்தில் ஒரு லிட்டர் டீசல், விலை
யேற்றத்திற்கு முன்பு ரூ. 15.24-க்கு விற்கப்
பட்டது. இதில் ஒரு லிட்டர் டீசலின் அடிப்
படை விலை ரூ. 6.60; இதன் மீது மைய
அரசு விதிக்கும் கலால் மற்றும் சுங்கவரிகள்
ரூ. 4.25; தமிழக அரசு விதிக்கும் விற்பனை
வரி மற்றும் இதர செலவுகள் ரூ. 4.39 மைய
அரசு ஒரு லிட்டர் டீசலுக்கு மூன்று ரூபாய்
மானியமாகத் தருவதாகக் கூறுகிறது. அதா
வது, ரூ. 9.60-க்கு விற்க வேண்டிய டீசலை,
மானியம் கொடுத்து ரூ. 6.60-க்குக் குறை
வாக விற்பதாகக் கூறுகிறது. உண்மையில்,
ஒரு புறம் மூன்று ரூபாய் மானிய உதவி
அளிப்பதாகக் கூறிவிட்டு, மறுபுறம் வரி
போட்டு எட்டு ரூபாய் கொள்ளையடிப்ப
துதான் நடக்கிறது. பக்கத்துப் பிரயாணிக்கு
பிஸ்கெட் கொடுத்துத் திருடும் ரயில்
கொள்ளையனைப் போல மைய, மாநில அர
சுகள் நடத்தி வரும் இந்தப் பகற்கொள்ளை
யைத்தான் மானிய உதவி என்று ஓட்டுக்
கட்சிகளும், ஆளுங் கும்பலும் பீற்றிக்
கொள்கின்றன.

சமையல் எரிவாயுவின் அடக்கவிலை,
அதன் மீது விதிக்கப்படும் வரிகள் அனைத்
தையும் சேர்த்து, ஒரு சிலிண்டரை ரூ. 93-க்கு
அரசு நல்ல இலாபத்துடனே விற்க முடியும்.
ஆனால், கச்சா எண்ணெய் விலையேற்றத்
திற்கு முன்பு, ஒரு சிலிண்டர் ரூ. 202.40-க்கு
விற்கப்பட்டது. இதன்படி, அரசிற்கு ஒரு
சிலிண்டர் விற்பனையின் மூலம் கிட்டத்தட்ட
109 ரூபாய் இலாபத்திற்கு மேல் இலாப
மாகக் கிடைத்திருக்கிறது. "கேட்டவுடன்
சமையல் எரிவாயு கொடுக்கும் திட்டத்தை"
அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கியி
ருப்பதின் பின்னே மறைந்திருப்பது இந்த
இலாப வேட்டை தவிர வேறில்லை.
ஆனால், சமையல் எரிவாயு விற்பனையில்
கிடைக்கும் இந்தக் கொள்ளை இலாபத்தை
முழுங்கிவிட்டு, ஒரு சிலிண்டருக்கு ரூ. 163
மானியமாகக் கொடுப்பதாகப் புளுகுனிப்
பிரச்சாரம் நடத்தப்படுகிறது.

1996, 1997-ஆம் ஆண்டுகளில்
அனைத்துலகச் சந்தையில் கிட்டதட்ட இரு
பது டாலராக இருந்த கச்சா எண்ணெய்,
1998-இல் பத்து டாலராகச் சரிந்தது. அப்படி
விலை வீழ்ந்த சமயத்தில், இந்திய அரசு,
உள்நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின்
விலையைக் குறைக்கவேயில்லை. சர்வதேச
சந்தையில் கச்சா எண்ணெயின் விலை
வீழ்ந்த போதெல்லாம், மைய அரசு
பெட்ரோலியப் பொருட்கள் விற்பனையில்
தனக்குள்ள ஏகபோகத்தைப் பயன்படுத்திக்
கொண்டு, நாணயமற்ற
முறையில் இந்திய மக்களைச்
சுரண்டிக் கொழுத்திருக்கிறது.



பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு வசதியாக,
கச்சா எண்ணெய் உற்பத்தி இந்திய அரசால்
திட்டமிட்டுக் குறைக்கப்படுகிறது.

தற்போதைய விலை
உயர்வால், மைய அரசிற்கு
கலால் மற்றும் சுங்கத் தீர்வை
மூலம் கிடைக்கும் வருமானம்
மட்டும் 24,000 கோடி
ரூபாயில் இருந்து 41,000
கோடி ரூபாயாக அதிகரிக்க
வுள்ளது. 1990-ஆம் ஆண்டு
தொடங்கி 1997-ஆம்
ஆண்டு முடிய பெட்ரோ
லியப் பொருட்களின் மீது
விதிக்கப்பட்ட கலால் வரி,
சுங்கத் தீர்வை, விற்பனை வரி,
ராயல்டி உள்ளிட்ட பல்வேறு
வரி விதிப்புகளின் மூலம் அர
சுக்குக் கிடைத்துள்ள வரு
மானம் 1,68,902 கோடி
ரூபாய். இதுபோக, பெட்ரோலியப் பொருட்
களின் விற்பனையின் மூலம் கிடைக்கும்
இலாபம் தனி. இப்படி வருமானம்
கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும்
போது, பற்றாக்குறை எப்படி வர முடியும்?
அப்படியே 'பற்றாக்குறை' வந்தால் அதைச்
சமாளிக்க வேறு வழிகள் கிடையாதா
என்ன?

பெட்ரோலியப் பொருட்களைப் பயன்
படுத்தும் கார் உள்ளிட்ட பல்வேறு வகை
யான ஆடம்பர நுகர்ப் பொருட்களி
மீதான வரிவிதிப்பைக் கூட்டியிருக்கலாம்
ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசு கா
மற்றும் இரு சக்கர வாகனத் தயாரிப்பில் ஈ
பட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களை
பகைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அ
னால்தான், அடித்தட்டு மக்கள் பயன்
டுத்தும் மண்ணெண்ணெயின் விலையை
சதவீதம் உயர்த்திய அரசு, கார் மற்றும் இ
சக்கர வாகனங்களின் விற்பனை சரி

www.padippakam.com

விடக் கூடாது என்பதற்காக பெட்ரோலின் விலையை வெறும் 8 சதவீதம் உயர்த்தியுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெயின் அளவை அதிகரிப்பதின் மூலம்கூட இந்த சர்வதேச விலை உயர்வைச்சமாளிக்கலாம். ஆனால், இந்திய அரசோ, இந்தியப் பெட்ரோலியத் துறையில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு வசதியாக கச்சா எண்ணெய் உற்பத்தியைப் படிப்படியாகக் குறைத்து வருகிறது. குறிப்பாக, இந்திய எண்ணெய் வயல்களில் மூலதனமிட்டுள்ள ரிலையன்ஸ், வீடியோகான், என்ரான் போன்ற தனியார் நிறுவனங்களின் இலாபம் எள் முனையும் குறைந்துவிடக் கூடாது என்பதற்காகவே, இத்தனியார் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் கச்சா எண்ணெயைச்சர்வதேச விலைக்கு வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அரசு நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் உற்பத்தி செய்யும் கச்சா எண்ணெய், சர்வதேச விலையில் சரிபாதி விலைக்கே பொதுத் துறை பெட்ரோலிய நிறுவனங்களால் வாங்கப்பட்டு வருகிறது என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான், இத்தனியார் நிறுவனங்களுக்குக் கிடைக்கப் போகும் இலாபத்தின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், உலக வங்கியின் நிர்ப்பந்தம் காரணமாக அடுத்த ஆண்டில் (2001-இல்) பெட்ரோலியப் பொருட்களுக்குக் கொடுக்கப்படும் 'மானியம்' முழுவதையும் நிறுத்திவிடவும் இந்திய அரசு முடிவெடுத்துவிட்டது.

'மானியம் கொடுப்பதை' நிறுத்தி விட்டால், பற்றாக்குறை பல்லவி பாடுவதும் நின்று போக வேண்டும். ஆனால், அப்படி நடக்கப் போவதில்லை. ஏனென்றால், பெட்ரோலியப் பொருட்கள் விற்பனையில் மட்டுமல்ல, மைய அரசு போடும் பட்ஜெட்டிலும் பற்றாக்குறை விழுவதற்குக் காரணமே, பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும், உள்நாட்டு தரகு முதலாளிகளுக்கும் வழங்கப்படும் வரிச் சலுகைகள்தான். மக்களிடமிருந்து கொள்ளையிடப்படும் வரி வருமானம் முழுவதும் அரசின் செலவுக்கும், இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்யவும்தான் பயன்படுத்தப்படுகிறது. இதன்படி பார்த்தால், ஆளும் கும்பல் கூறுவதைப் போல, அரசு தரும் மானியத்தில் மக்கள் பிழைத்துக் கிடக்கவில்லை; மாறாக, மக்கள் தரும் மானியத்தில்தான் ஆளும் கும்பல் கொழுத்துத் திரிகிறது.

● செல்வம்




# வாசகர் கடிதம்

★ நீதி தேவதையின் கண்களைக் கட்டி வைத்துக் காலங்காலமாகத் தீர்ப்பு வழங்கி வருவதன் உண்மையான பொருளை செப்டம்பர் மாத புதிய ஜனநாயகம் வெட்ட வெளிச்சமாக்கியது. 'தந்திர'பாபு நாயுடுவின் மக்கள் விரோதக் கொள்கைக்கு எமது ஆந்திரச் சகோதரர்கள் மின் அதிர்ச்சி கொடுப்பதோடு நின்றுவிட மாட்டார்கள்; அடித்து வீழ்த்தவும் தயங்க மாட்டார்கள்.

— தர்மராஜ், திருச்சி.

★ இந்து மதவெறியர்களின் நரித்தனத்தையும் பிரித்தாளும் சூழ்ச்சியையும் திரைகிழித்துக் காட்டிவரும் புதிய ஜனநாயகத்தின் பணி நிகரற்றது; வெகு சிறப்பானது.

— சாமி, திருவண்ணாமலை.

★ மின் கட்டன உயர்வுக்கு எதிரான போராட்டம் ஆந்திர மக்களை எழுச்சி கொள்ள வைத்திருக்கிறது. இடதுசாரி சனநாயகப் புரட்சிகர இயக்கங்கள் மறுகாலனிய ஆதிக்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதைத் தலையங்கக் கட்டுரை தெளிவுபடுத்தியது.

— செம்மலர் மா. நடராசன்,
அறந்தாங்கி.

★ நாயுடு ஆட்சிக்கு ஆந்திர மக்கள் கொடுத்துவரும் பதிலடி, புதிய நம்பிக்கையைத் தருகிறது. ஆந்திர மக்கள் வழியில் நாமும் போராட வேண்டியுள்ளததை உணர்த்துவதாக தலையங்கக் கட்டுரை அமைந்திருத்தது.

— உமர் அலி, திருச்சி.

★ பொலிவியாவில் தண்ணீரை ஒரு ஆயுதமாகக் கொண்டு அந்நாட்டையும் மக்களையும் கொள்ளையடித்து வந்த அமெரிக்க நிறுவனத்தை விரட்டியடித்த பொலிவிய மக்களின் போராட்டம், ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. பன்னாட்டு ஏகபோக வேளாண் கம்பெனிகளின் கொள்ளைக்காக இந்திய விவசாயம் எப்படி பாழடிக்கப்படுகிறது என்பதைத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றிய கட்டுரை அருமையாக விளக்கியது. நன்கொடை கொள்ளைக்கு எதிராக வேதாரண்யம் வி.வி.மு. நடத்திய போராட்டமும், அடிப்படை வசதி கோரி ஈரோடு பு.மா.இ.மு. நடத்திய போராட்டமும் எமக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது.

— ச. மகாலிங்கம், அய்யனார்குளம்.

★ புதிய ஜனநாயகம் இதழின் அட்டைப்பட கேலிச்சித்திரம் சொல்லவரும் விஷயத்துக்கு ஏற்ப உயிரோட்டமாக அமையவில்லை. மேலும் கட்டுரைகள் படிக்கத் தூண்டும் நடையில், ஆர்வமூட்டும் வகையில் அமையவில்லை. இவற்றைக் கவனத்தில் கொண்டு புதிய வாசகர்களை ஈர்க்கும் வகையில் நமது இதழ் வெளி வர வேண்டும்.

— வாசகர் வட்டம், கோவை.

★ ஆந்திராவில் மின் கட்டன உயர்வை எதிர்த்து நடந்த போராட்டத்தில் மார்க்சிய - லெனினியக் குழுக்களின் பங்களிப்பை முதலாளித்துவ பத்திரிகைகள் மூடிமறைத்து விட்ட நிலையில், உண்மைகளைத் தலையங்கக் கட்டுரை விளக்கி, போராட்ட உணர்வூட்டியது. போலி கம்யூனிச 'மார்க்சிஸ்டு' கட்சியின் புரட்டல்வாத சந்தர்ப்பவாதப் பாதையானது எவ்வாறு புரட்சிக்கு எதிரானது என்பதை விளக்கி நமது இதழில் கட்டுரை வர வேண்டுமென நீண்ட நாட்களாக எண்ணியிருந்தேன். "முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்." என்ற கட்டுரை மூலம் அதை நிறைவேற்றியுள்ளீர்கள். இக்கட்டுரைக்குப் புதிய வாசகர்களிடம் கூடுதலான வரவேற்பு இருக்கும் என்றே நம்புகிறேன்.

— ஆ.சு. முத்து, விக்கிரம சிங்கபுரம்.

★ மனிதனின் அத்தியாவசியப் பொருட்களோடு, இயற்கை அளித்த கொடையாகிய தண்ணீரையும் கைப்பற்றிக் கொண்டு கட்டண உயர்வை அறிவிக்கும் ஏகாதிபத்தியங்கள் அடுத்துக் காற்றையும் கைப்பற்றிக் கொள்ளக் கிளம்பும் என்பதையும், மக்களின் போராட்டங்கள் இதை நிச்சயம் வீழ்த்தும் என்பதையும் பொலிவியாவின் போராட்ட அனுபவம் நிரூபிக்கிறது. ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாக வர்ணிக்கப்படும் நீதித்துறையின் யோக்கியதை மக்கள் போராட்டங்களின் போது கிழிபட்டு, இதுவும் ஆளும் வர்க்கங்களின் ஒடுக்குமுறைக்கான கருவிதான் என்று நிருபணமாகிறது. "நீதிமன்றத்தின் பாசிசக் கெடுபிடிகள்" என்ற கட்டுரை இந்த உண்மையை உணர்த்தியது.

— தொழிலாளர் [illegible]

படிப்பகம்

www.padippakam.com

# யார் இந்து?

## குருவாயூர் நம்பூதிரிகளின் வக்கிர வியாக்கியானம்

கேரளத்தின் பிரபலமான குருவாயூ ரப்பன் கோயிலில், கேரள காங்கிரசுக் கட்சித் தலைவர் வயலார் ரவி தனது மகனுக்குத் திரு மணம் செய்ததையடுத்து, கோயில் நிர்வாகம் மணமக்கள் நின்ற இடத்தில் மந்திரம் ஓதி தண்ணீர் விட்டுக் கழுவி தீட்டுக் கழித்துத் தனது பார்ப்பன வெறியைக் கக்கி யுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரான வயலார் ரவி, கேரள காங்கிரசுக் கட்சியின் மூத்த தலை வர்களில் ஒருவர். அவர் தனது மகன் கிருஷ் ணனுக்குக் கடந்த செப்டம்பரில் குருவாயூர் கோயிலில் திருமணத்தை நடத்தினார். வயலார் ரவி பிற்பட்ட ஈழவச் சாதியைச் சேர்ந்தவர். எனவே ஈழவச் சாதி முறைப்படி - இந்த மதச் சடங்குகளோடு வைதீக முறை யிலேயே இத்திருமணம் நடந்தது. கோயி லுக்குச் சொந்தமான மண்டபத்தில் இத்திரு மணம் நடந்து முடிந்த பின்னர், மணமக்கள் துலாபாரம் ஏறி - தமது எடைக்கு எடை நாணயங்களை குருவாயூரப்பனுக்குக் காணிக்கை செலுத்திவிட்டு, சந்நிதியில் ஆண்டவனை வழிபட்டு விட்டுப் புறப்பட் டார்கள். அவர்கள் வெளியேறியதும் தலைமைப் பூசாரியான திவாகரன் நம்பூதிரி, மணமக்கள் நின்ற இடத்தில் மந்திரம் ஓதி தண்ணீர் விட்டுக் கழுவி தீட்டுக் கழிப்புச் சடங்கை நடத்தியுள்ளார்.

காரணம், வயலார் ரவியின் மனைவி மெர்சி கிறித்துவர். எனவே ரவியின் மகன் கிருஷ்ணன் இந்து அல்ல என்கிறார் தலைமைப் பூசாரி. "கோயில் விதிகளின்படி, இந்து அல்லாத ஒருவர் கோயிலில் நுழையக் கூடாது; சில ஆண்டுக ளுக்குமுன்பு பாடகர் ஜேசுதாஸ் கூட குருவாயூர் கோயிலில் நுழைய அனு மதிக்கப்படவில்லை. இந்து அல்லாத வரான கிருஷ்ணன், கோயிலில் நுழைந்து விட்டதாலேயே "புண்ணி யாசனம்" என்ற தீட்டுக் கழிக்கும் சடங்குநடத்தப்பட்டது. இந்து தர்மப் படியும் கோயில் விதிகளின்படியும் இதில் தவறேதும் இல்லை" என்கிறார், பார்ப்பன தலைமைப் பூசாரி.

"எனது மகன் இந்துதான் என்ப தற்குப் பள்ளிக்கூட சான்றுகளே உள்ளன. மேலும் திரு மணச் சடங்குகளும் இந்து தர்மப்படியே நடந்துள்ளன. திருமண நிகழ்ச்சி, துலாபார காணிக்கை, அர்ச்சனை செய்து வழிபாடு முதலானவற்றுக்கு உரிய கட்டணம் செலுத் தியதைப் பெற்றுக் கொண்ட கோயில் நிர்வா கிகள், எனது மகன் இந்து அல்ல என்று அறி விக்கவில்லை. கட்டணத்தை ஏற்க மறுக்கவு மில்லை. திருமண நிகழ்ச்சி முடிந்த பிறகு, இந்து அல்ல என்று கூறி தீட்டுக் கழித்து எங்களை இழிவுபடுத்துகிறார்கள். எனது மகன் இந்து அல்ல என்பதற்காக மட்டு மல்ல; நாங்கள் பிற்பட்ட ஈழவச் சாதியினர் என்பதாலேயே எங்களை இழிவுபடுத்தியுள் ளனர்" என்று புலம்புகிறார் வயலார் ரவி.

இதைத் தொடர்ந்து, குருவாயூர் கோயில் நிர்வாகத்தின் பார்ப்பன ஆதிக்க வெறியை எதிர்த்து ஈழவச் சாதியினரும், தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் கண்டன ஊர்வலங்களை நடத்தியுள்ளனர். பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், கல்வியாளர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் ஒரு வேடிக்கை என்னவென்றால், கோயில் அறங்காவலர் குழுவில் பெரும்பான்மையினராக இருப் பது போலி கம்யூனிஸ்டுகளின் இடதுசாரி ஜனநாயக முன்னணியினர்தான். ஆனாலும் அவர்கள் இந்தக் கொடுஞ் செயலைத் தடுக் கவில்லை. எதிர்த்து வாய் திறக்கவுமில்லை. கோயில் நிர்வாகக் குழு தலைவரும் ஜனதா தளக் கட்சிப் பிரமுகருமான வேணுகோபால குருப், "தலைமைப் பூசாரிதான் சடங்குகள் மற்றும் விதிகள் பற்றி முடிவு செய்யும் அதி காரம் கொண்டவர்; எங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று தனது கையாலா காத்தனத்தை வெளிப்படையாகவே ஒப்புக் கொள்கிறார்.

"இந்த வழக்கம் சரியா - தவறா என்று வாதம் செய்யலாம். என்றாலும் அப்படி யொரு வழக்கம் கடைபிடிக்கப்பட்டு வரும் நிலையில் அதை மதித்து நடப்பதே முறை யானது... அங்கு கடைபிடிக்கப்படும் நடை முறைகளை அனுசரிப்பதே சரியானது" என்று குருவாயூர் கோயிலின் இந்து சனாதன வெறியை நியாயப்படுத்தி எழுதுகிறது பார்ப்பன 'துக்ளக்' ஏடு.

எல்லா மதங்களுக்கும் முன்பாகவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரு வானதுதான் இந்து மதம் என்று இந்து சனா தனிகள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். கிறித்துவ மதம் தோன்றி ஈராயிரம் ஆண்டு கள்தான் ஆகின்றன. அப்படியிருக்க, பிற மதத்தினர் இந்து கோயிலில் நுழையக் கூடாது என்று பிற மதங்கள் தோன்றுவதற்கு முன்பாகவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இப்படியொரு விதியை இந்து மதம் எப்படி வகுத்திருக்க முடியும்? ஒருக் காலும் அது சாத்தியமில்லை. பிற மதங்கள் தோன்றிய பிறகு பார்ப்பன சனாதனிகளால் இடையில் சேர்க்கப்பட்டுத் திணிக்கப்பட்டு வருவதுதான் இந்த விதி. ஆனால் இதுவும் பாரம்பரிய பழக்கம், அதை அனுசரிப்ப துதான் சரியானது என்றால் மூளையுள்ள எவரும் அதை ஏற்க மாட்டார்கள்.

★☆★

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு கொச்சி - திருவாங்கூர் தேவஸ்தான நிர்வா கிகள் தொடர்பான ஒரு வழக்கில், "கடவுள் மீதும் விக்கிரக வழிபாட்டிலும் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே இந்து; இந்துக்க ளிடம் மட்டுமே கோயில் நிர்வாகம் ஒப்ப டைக்கப்பட வேண்டும். நாத்திகர்கள் கையில் கோயில் நிர்வாகத்தை ஒப்ப டைத்தால் அது சீர்குலைந்து விடும்" என்று கேரள உயர்நீதி மன்றம இந்து சனாதன முறையில் தீர்ப்பளித்துள்ளது.

கிறித்துவ - இசுலாமிய மதங் களில் உட்பிரிவுகளும் பூசல்களும் இருந்தாலும் பைபிள் அல்லது குரானை ஏற்பது அம்மதங்களின் அடிப்படையாக உள்ளது. ஆனால் இந்துக்களுக்கு அப்படியொரு நூல் எதுவும் கிடையாது. சனாதன தர்மமே இந்து மதமாக அங்கீகரிக்கப்படுகிறது வேதங்களை ஏற்பவன் இந்து என்றா - வேதங்களில் இந்து என் வார்த்தையே கிடையாது. வேதங்க பார்ப்பனர்களின் அதிகாரத்தை வலியுறுத்துகின்றன. அதை ஏற்க மறு பவனை - கடவுள் நம்பிக்கை உள்ள னாக இருந்தாலும் 'நாத்திகன்' என் வரையறுக்கின்றன.

வயலார் ரவியுடன் அவரது மனைவி மெர்சி.



படிப்பகம்

www.padippakam.com

"நான் கடவுளை நம்புகிறேன்; விக்கிரக வழிபாட்டையும் நம்புகிறேன்; சனாதன தர்மத்தையும் பார்ப்பன அதிகாரத்தையும் ஏற்கிறேன்; மார்க்சியத்தையும் ஏற்கிறேன்" என்று கூறிக் கொண்டு போலி கம்யூனிஸ்டுகள் கோயில் நிர்வாகக் குழுவில் கொலுவீற்றிருக்கிறார்கள். அவர்களோடு கூட்டணி கட்டிக் கொண்டு சமூக நீதி ஓட்டுக் கட்சிகளும் கோயில் நிர்வாகப் பதவிகளைப் பிடித்துள்ளன. கோயிலின் சடங்கு - விதிமுறைகளைத் தீர்மானிக்க பார்ப்பன தலைமைப் பூசாரிக்குத்தான் அதிகாரம் என்றால், சலுகைகளையும் சன்மானங்களையும் பொறுக்கித் தின்பதற்குத்தான் இந்தப் பதவிகளா?

'இந்து' மார்க்சிஸ்டுகள் மற்றும் 'சமூக நீதி' பிழைப்புவாதிகளின் துரோகத்தனத்தால், குருவாயூர் கோயிலில் பார்ப்பன வெறியர்கள் கொட்டமடிப்பதும், பிற மதத்தினரையும் பிற்பட்ட-தாழ்த்தப்பட்ட சாதியினரையும் இழிவுபடுத்துவதும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலத்திலேயே இந்த அளவுக்குத் தீண்டாமையும் பார்ப்பன ஆதிக்கமும் நிலவுகிறது என்றால், இதர ஓட்டுக் கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.



குருவாயூர்க் கோயிலின் பார்ப்பன வெறியை எதிர்த்துத் தாழ்த்தப்பட்டோர் - பிற்பட்டோர் அமைப்புகள் நடத்திய கண்டன ஊர்வலம்.

இந்து கோயிலில் ஈக்களும் கொசுக்களும் பெருச்சாளிகளும் நுழையலாம்; அதற்குத் தடையில்லை; அதனால் தீட்டுமில்லை. ஆனால் மானமும் அறிவும் கொண்ட மனிதர்கள் - பிற மதத்தினரும் தாழ்த்தப்பட்டோரும் மட்டும் நுழையக் கூடாது; அதனால் புனிதம் கெட்டுத் தீட்டாகிவிடும் என்பதுதான் இந்து சனாதனதர்மம். இந்து 'மார்க்சிஸ்டு' துரோகிகளும் சமூகநீதி பிழைப்புவாதிகளும் பதவி சுகத்துக்காக இந்த அவமானத்தைச் சுமந்து கொண்டு திரியலாம்; இந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டு நானும் இந்துதான் என்று வயலார் ரவிகள் புலம்பலாம். ஆனால் சுயமரியாதை உணர்வு கொண்ட தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதியினர் இனியும் இந்த அவமானத்தைச் சுமக்க முடியாது; சகித்துக் கொண்டிருக்கவும் கூடாது.

● குமார்

# "உலகமயமாக்கலுக்கு அடிபணியாதே! தொழிற்சங்கச் சட்டத்தைத் திருத்தாதே!"

உலக வர்த்தகக் கழகத்தின் (WTO) கட்டளைக்கு அடிபணிந்து தனியார்மய - தாராளமய - உலகமயமாக்கலைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் பா.ஜ.க. அரசு, இதற்கேற்ப தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தியமைக்க இரண்டாவது தேசியத் தொழிலாளர் ஆணையத்தை அமைத்துள்ளது. இது தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் பாசிச நடவடிக்கையாகும் என்பதைத் தொழிலாளர்கள் மத்தியில் தெருமுனைக் கூட்டங்கள், அரங்கக் கூட்டம், சைக்கிள் பேரணி மூலம் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது.

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் வேட்டைக் காடாக நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப இச்சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுவதையும், இதனால் தொழிற்சங்க உரிமைகள் பறிபோகும் அபாயத்தையும் விளக்கி தொழிலாளர் நிறைந்த அம்பத்தூர் வட்டாரத்தில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொழிலாளர்கள் சங்கமாகச் சேரும் உரிமையைப் பறிப்பது, சங்க அங்கீகாரத்துக்குப் புதிய விதிகளைத் திணித்து கருங்காலி சங்கங்களை உறுதிப்படுத்துவது, நிரந்தரத் தொழிலாளர் முறையை ஒழித்து ஒப்பந்தத் தொழிலாளர் முறையைத் திணிப்பது, குடியிருப்பு, மருத்துவ வசதி முதலான சலுகைகளை வெட்டுவது முதலான பாசிச நோக்கங்களுடனேயே ஜனநாயக விரோதமான முறையில் இச்சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன என்பதையும், ஓட்டுக் கட்சிகளும் அவற்றின் தொழிற்சங்கங்களும் எதிர்ப்பேயின்றி முடங்கிக் கிடப்பதை அம்பலப்படுத்தியும் நடந்த இப்பிரச்சார இயக்கத்தை நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வரவேற்று ஆதரித்தனர்.

தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்படுவதற்கு எதிராக பு.ஜ.தொ.மு. நடத்தி வரும் தொடர் ஆர்ப்பாட்டம்.



இதைத் தொடர்ந்து செப்டம்பர் 17-ந் தேதியன்று அம்பத்தூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கிய சைக்கிள் பேரணி, தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளின் வழியே சென்று முக்கிய சந்திப்புகளில் தெருமுனைக் கூட்டங்களுடன் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாக, செப்டம்ர் 26-ந் தேதியன்று நடந்த அரங்கக் கூட்டத்தில் பு.ஜ.தொ.மு. பொருளாளர் தோழர் விஜயகுமார் சிறப்புரை ஆற்றினார். தொழிலாளர்களும் பிற புரட்சிகர அமைப்பினரும் திரளாக வந்து இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இத்தொடர் பிரச்சாரமும் புரட்சிகர அரசியலும் தொழிலாளர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

தகவல்:
புதிய ஜனநாயகத்
தொழிலாளர் முன்னணி

www.padippakam.com

# வாஜ்பாயின் அமெரிக்கப் பயணம்

# கழுதையைக் குதிரையாக்கும் முயற்சி

"தனது அமெரிக்கப் பயணத்தின் ஒரு பகுதியாக பிரதமர் வாஜ்பாய் ஐ.நா. மன்றத்திலும் ஆசிய சங்கத்திலும் அமெரிக்க நாடாளுமன்றத்திலும் ஆற்றிய உரைகள் - உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்தியுள்ளது. பாகிஸ்தானின் கபட வேடத்தைக் கிழித்து உறுதியுடன் எச்சரித்தார்; ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பினர் பதவியை இந்தியா பெறுவதற்கு உரிமையுடன் வாதாடினார்; அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் பற்றி பொறுப்புடனும் அக்கறையுடனும் இந்தியாவின் நிலையை விளக்கினார்; மத அடிப்படைவாதத்தைக் கொண்டு தலைவிரித்தாடும் தீவிரவாதத்தைக் கடுமையாகச் சாடினார்; பொறுப்புள்ள ஜனநாயக நாடாக இந்தியாவைச் சித்தரித்துப் பெருமைப்படுத்தினார்; மொத்தத்தில் பிரதமரின் அமெரிக்கப் பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி!" என்று பார்ப்பன 'தேசிய'ப் பத்திரிகைகளும் அரசின் செய்தி ஊடகங்களும் கடந்த செப்டம்பர் மாதத்தில் வரிந்து கட்டிக் கொண்டு வாஜ்பாயை விளம்பரப்படுத்தி துதிபாடின.

பழுத்த அனுபவத்தின் காரணமாக பேச்சில் சாதுரியம், அறிவுத்திறன் பளிச்சிடும் மேன்மை, உறுதியும் கண்டிப்பும் உரிமையும் கலந்து தனது நிலையைத் தெளிவுபடுத்தும் நாவன்மை - என்று எல்லா பிரச்சினைகளையும் தீர்க்கவல்ல சர்வரோக நிவாரணியாக பிரதமர் வாஜ்பாய் சித்தரிக்கப்பட்டார். இந்தப் பயணத்தையொட்டி, தடபுடல் விருந்து - கேளிக்கை - பரிசுகளுடன் ஊர் சுற்றிக் காண்பித்ததற்கு, செஞ்சோற்றுக் கடன் தீர்க்க முதலாளித்துவப் பத்திரிகைகள் வகை வகையான வண்ணப் படங்களுடன் வாஜ்பாய் புராணம் பாடின.

எல்லாம் ஒரு பெரிய ராஜ தந்திரியின் அரசியல் பொன்மொழிகளாக அடுக்கப்பட்டன. ஒரு நாட்டுப்பற்று மிக்க நேர்மையான மனிதரின் லட்சியமிக்க எதிர்காலக் கனவுகளாகச் சித்தரிக்கப்பட்டன.

ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கிய கதையாக உள்நாட்டில் எவ்வளவுதான் ஊதிப் பெருக்கிக் காட்டினாலும், அமெரிக்காவின் காலை நக்கும் இன்னுமொரு அற்பமான சேவகன்தான் என்று இந்தப் பயணத்தின் மூலம் உலக அரங்கில் வாஜ்பாய் அம்பலப்பட்டுக் கிடக்கிறார். ஏற்கனவே எஞ்சியிருந்த இந்தியா மீதான உலக நாடுகளின் மதிப்பும் மரியாதையும் இந்தப் பயணத்தின் மூலம் இப்போது செல்லாக் காசாகிவிட்டது.

புத்தாயிரமாவது ஆண்டின் ஐ.நா. மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு இந்தியா சார்பில் உரையாற்ற அமெரிக்காவுக்குச் சென்றார் வாஜ்பாய். அவரைப் போலவே பல நாடுகளின் அரசுத் தலைவர்களும் பிரதமர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இத்தகைய கூட்டங்கள் - மாநாடுகளின்போது உலக நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துத் தமது நாட்டுடனான உறவை மேம்படுத்திக்கக் கொள்ள ஒவ்வொரு நாட்டுத் தலைவர்களும் விழைவது வழக்கம். ஆனால் வாஜ்பாய் இதிலும் முயற்சி செய்யாமல் தோல்வியையே சந்தித்தார். அவர் இந்தியாவுடனான உறவை மேம்படுத்த இரு நாட்டு அரசுத் தலைவர்களையே சந்தித்தார். அவை நமது அண்டை நாடுகளான நேபாளமும், வங்கதேசமும்தான்!

அதேசமயம், பாகிஸ்தான் அதிபரான முஷாரப், 43 நாடுகளின் அரசுத் தலைவர்களைச் சந்தித்து தமது நாட்டுடனான உறவை வலுப்படுத்திக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டார். அரசு தந்திர ரீதியாக இது பாகிஸ்தானுக்கு வெற்றியாகவும், இந்தியாவுக்குப் படுதோல்வியாகவும் அமைந்தது. ஆனாலும் வாஜ்பாயின் துதிபாடிகள், அவருக்கு மூட்டுவலி ஏற்பட்டதால் பிற நாடுகளின் தலைவர்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது என்று சப்பை கட்டு போட்டனர்.

உள்நாட்டில் ஊதிப் பெருக்கப்பட்ட வாஜ்பாயின் அமெரிக்க பயணம், அமெரிக்காவிலோ சீந்துவாரின்றிக் கிடந்தது.



ஐ.நா. மன்றக் கூட்டத்தில் வாஜ்பாய் பேசுவதற்கு இரு நாட்களுக்கு முன்னதாக பாக். அதிபர் முஷாரப் உரையாற்றினார். அவர் தனது உரையில் இந்தியாவைச் சமாதானத்தைப் புறக்கணிக்கும் நாடாகக் குற்றம் சாட்டினார். இந்தியாவுடன் சமாதானப் பேச்சு வார்த்தைக்குத் தாம் தயாராக இருப்பதாகவும், ஆனால் இந்தியா தொடர்ந்து தட்டிக் கழித்துப் பதற்ற நிலை நீடிக்கவே முயற்சிப்பதாகவும் சாடினார். காஷ்மீரைக் கிழக்கு திமோருடன் ஒப்பிட்டு, உலக நாடுகள் தலையிட்டு காஷ்மீரை விடுவிக்க வேண்டும் என்று கோரினார்

வாஜ்பாயோ, பாகிஸ்தானைப் பயங்கரவா நாடாக அறிவித்துத் தன

படி

www.padippakam.com

மைப்படுத்த வேண்டும் என்று வாதிட்டார். காஷ்மீரில் படுகொலைகள் தொடரக் கூடாது என்று மனிதாபிமானத்துடன் உருகினார். எல்லைக்கு அப்பாலிருந்து பயங்கரவாத சீர்குலைவு சதி வேலைகளில் ஈடுபடுவ தாகப் பாகிஸ்தான் மீது பாய்ந்தார். இந்தியா எப்போதும் அமைதியையும் சமாதானத் தையும் நேசிக்கும் ஜனநாயக நாடு என்று உருகினார். வாஜ்பாய் இப்படி முஷாரப் புக்குப் பதிலளிக்கும் வகையில் சக்களத்திச் சண்டை போட்டதைக் கண்டு உலக நாடுகள் முகம் சுளித்தன. ஐ.நா. மன்றக் கூட்டத்தின் நோக்கத்தை விட்டு அவர் பாகிஸ்தானைச் சாடுவதை நோக்கமாகக் கொண்டு உரையாற்றுவதைக் கண்டு சலிப்படைந்தன. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகச் சித்தரித்துக் கொள்ளும் இந்தியா, காஷ்மீர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வை முன்வைத்து தெற்காசியாவில் பதற்ற நிலையைத் தணிக்க ஆக்கபூர்வமான திட்டத்துடன் முன்வரும் என்றே உலக நாடுகள் எதிர்பார்த்தன. ஆனால் கீறல் விழுந்த இசைத்தட்டு போல, பாகிஸ் தானைச் சாடுவதைத் தவிர வேறெந்தத் தீர்வையும் வாஜ்பாய் முன்வைக்காததால், உலக நாடுகளிடம் ஆதரவைத் திரட்ட முடி யாமல் தனிமைப்பட்டுப் போனார். இது அரசு தந்திர ரீதியாக உலக நாடுகளின் ஆத ரவைப் பெறுவதில் இந்தியாவுக்குப் பெருத்த பின்னடைவு என்றே மேலை நாட்டுப் பத்திரிகைகள் சித்தரிக்கின்றன. வாஜ்பாய் உரை நிகழ்த்திய போது ஐ.நா. மன்ற மாநாட்டுப் பிரதிநிதிகளில் 15%-க்கும் குறைவானவர்களே அரங்கில் இருந்தனர். அந்த அளவுக்குத்தான் இந்தியா மீது உலக நாடுகளின் மதிப்பும் மரியாதையும் இருந் தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்க நாளேடுகளிலோ, தொலைக்காட்சிகளிலோ வாஜ்பாயின் வருகை பற்றி எந்தத் தகவலும் வெளிவரவில்லை. எந்தவொரு நாளேட் டிலும் ஒரு வரிகூட செய்தியில்லை. ஐ.நா. மன்றக் கூட்டம் பற்றிய செய்திகள் மட்டு மல்ல; அதன் பிறகு அமெரிக்க நாடாளு மன்றக் கூட்டுக் கூட்டத்தில் வாஜ்பாய் ஆற்றிய உரை பற்றியும் அமெரிக்கப் பத்தி ரிகைகளிலோ, தொலைக்காட்சிகளிலோ ஒரு வார்த்தை கூட இல்லை. அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டத்தில் வாஜ்பாய் உரை யாற்றியபோது, மொத்த அவையில் 25% பேர் அளவுக்குத்தான் சிறிது நேரம் அமர்ந் திருந்தனர். நாடாளுமன்றச் செயல்பாடு பற்றி உயர்கல்வி கற்கும் மாணவர்கள்தான் இதில் பெரும்பான்மையினராக இருந்த னரே தவிர, அமெரிக்க நாடாளுமன்ற உறுப் பினர்கள் விரல்விட்டு எண்ணும் அளவுக்கே இருந்தனர். பின்னர், அமெரிக்க அதிபர் கிளிண்டனும் வாஜ்பாயும் கூட்டாக பத்திரி கையாளர்களைச் சந்திப்பதற்கு இந்தியத் தூதரக அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தை அமெரிக்க அதிகாரிகள் ரத்து செய்து விட்டனர். ஒரேயொரு நாளேட்டில்,




வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் கிளிண்டன் மகள் செலேசாவுடன் கைகு லுக்கும் படம் வெளிவந்தது. இப்படத் துக்குக் கீழே "யாரோ ஒரு இந்தியர் செலே சாவுடன் கைகுலுக்குகிறார்" என்று அடிக்கு றிப்பு இருந்தது.

எவ்வளவுதான் பாகிஸ்தானைச் சாடி உலக அரங்கில் தனிமைப்படுத்த இந்தியா முயன்றாலும், அமெரிக்கா தனது நம்பக மான தெற்காசிய எடுபிடியான பாகிஸ் தானைக் கைவிட்டு விடத் தயாராக இல்லை. அமெரிக்க அரசுத் துணைச் செயலரான கார்ல் இன்டர்புர்த், "வாஜ்பாயின் அமெ ரிக்கப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்பட்டாலும், இது பாகிஸ்தா னுக்கு இழப்பு என்று கருத முடியாது. எந்த வகையிலும் அமெரிக்கா பாகிஸ்தானை ஓரங்கட்டி விடாது" என்று பாக். அதிபர் முஷாரப் பேசியதையே மீண்டும் குறிப்பிட் டுள்ளார். தனது மேலாதிக்க நோக்கங்க ளுக்கு இசைவாகவும் நம்பகமாகவும் நீண்ட காலமாக தெற்காசியப் பிராந்தியத்தில் விசு வாச எடுபிடியாகவும் உள்ள பாகிஸ் தானைப் புறக்கணித்துவிட்டு இந்தி யாவைப் புதிய எடுபிடியாக ஏற்க அமெ ரிக்கா தயாராக இல்லை என்பதையே இது நிரூபித்துக் காட்டுகிறது.

இருப்பினும், அமெரிக்க அரசு காஷ்மீர் பிரச்சினையை, "இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையிலான முக்கியமான விவகாரம்" என்றும் "இதில் அமெரிக்கா ஆக்கபூர்வ மான பாத்திரமாற்றும்" என்றும் குறிப்பிட்ட தையே ஊதிப் பெருக்கி, இந்தியாவின் நிலையை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று வாஜ்பாய் துதிபாடிகள் கூத்தாடுகின்றனர்.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந் தத்தில் கையெழுத்திடுமாறு இந்தியாவை அமெரிக்கா மிரட்டி வரும் வேளையில், அமெரிக்காவை எதிர்த்து வாஜ்பாய் வாயே திறக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாது என்று மறுக்கவுமில்லை. மாறாக, "உங்களது அக்கறையை இந்தியா பெரிதும் மதிக்கிறது; உங்கள் முயற்சிக்கு எதிரான நடவடிக்கையில் நாங்கள் ஒரு போதும் ஈடுபட மாட்டோம். எங்களது பாது காப்பு நலனைப் பற்றி நீங்கள் அக்கறை கொள்வீர்கள் என்றே நம்புகிறோம்" என்று தனது சரணாகதியைக் கௌவரமாக வெளிப் படுத்தினார். அதாவது, இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட விரைவில் ஏற்பாடு செய்வோம் என்பதே வாஜ்பாய் உரையின் சாரம். வரப்போகும் நாடாளுமன்ற குளிர் காலக் கூட்டத் தொடரில் இதுபற்றி பொதுக் கருத்தை ஏற்படுத்த ஏற்கனவே பா.ஜ.க. அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வரு கிறது. பொதுக் கருத்தை எட்டியதும், இந்தி யாவின் எஞ்சிய சுயாதிபத்திய உரிமைக ளையும் அமெரிக்காவின் காலடியில் வைத்துவிட்டு இந்த ஒப்பந்தத்தில் கையெ ழுத்துப் போட்டு விடுவோம் என்பதுதான் வாஜ்பாயின் நிலைப்பாடு. ஆனால் இதைத்தான் திரித்துப் புரட்டி அணு ஆயுதப் பரவல் குறித்து கவலையும் அக்கறையும் கொண்டு பொறுப்புடனும் துணிவுடனும் பேசியதாகக் கதையளக்கின்றனர்.

தம்மீது அமெரிக்க வல்லரசு பொருளா தாரத் தடைகளை விதித்து அச்சுறுத்திய போதிலும் கூட, சிறிய நாடான கியூபா அமெரிக்காவின் ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கிறது. அமெரிக்காவின் அணு ஆயுத ஏவுகணைத் திட்டத்தை சீனா, ரஷ்யா உள்ளிட்டு உலகின் பல நாடுகள் எதிர்த்தன. வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் கூட்ட மைப்பை (நேட்டோ) விரிவாக்கி வரும் அமெரிக்கா, உலக சமாதானத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளதை எதிர்த்து குரல் கொடுத்தன. ஆனால் இந்திய அரசின்

www.padippakam.com

பி.,தமரான வாஜ்பாய், அமெரிக்காவுக்கு எதிராக சிறு முணுமுணுப்புக் கூடச் செய்யாமல் காந்தீயக் குரங்காகவே இருந்தார்.

அதேசமயம் "மின்துறை, காப்பீடு துறை, வங்கித் துறை, தொலைத் தொடர்புத் துறை முதலானவற்றில் இந்தியாவில் தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் முழு வீச்சில் செயல்படுத்தப்படுகின்றன. கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுவிட்டன. நீங்கள் மூலதனமிட மிகச் சிறந்த நாடாக இந்தியா உள்ளது" என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் அறைகூவி அழைத்தார். வருமாண்டில் 5000 கோடி டாலரும், அடுத்த மூன்றாண்டுகளில் 15,000 கோடி டாலர் அளவுக்கும் அமெரிக்க முதலீட்டை எதிர் பார்ப்பதாக எசமான விசுவாசத்துடன் கூறினார். அமெரிக்க மூலதனத்தைக் குவித்து நாட்டை அடிமையாக்கும் இந்த அயோக்கியத்தனத்தைத்தான் இந்திய - அமெரிக்க உறவில் புதிய முன்னேற்றம் என்று பிரமையூட்டுகின்றனர்.

இப்படி இந்தியாவின் எஞ்சிய சுயாதிபத்திய உரிமையையும் ஏகாதிபத்தியங்களின் காலடியில் வைப்பதுதான் பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கையாகிவிட்டது. அண்மையில் ரசிய வல்லரசின் அதிபர் புடின் இந்தியாவுக்கு வருகை தருவதையொட்டி, புருலியா ஆயுதக் கடத்தல் குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டுச்சிறையிடப்பட்டிருந்த 5 ருஷ்ய மாபியா குண்டர்களும் அவசரமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏகாதிபத்திய வல்லரசுகளின் அடிமையாக இப்படி அம்பலப்பட்டுக் கிடப்பது போதாது என்று அண்மையில், ஆப்பிரிக்காவின் சஹாராவி அரபு ஜனநாயகக் குடியரசின் அங்கீகாரத்தையும் இந்தியா ரத்து செய்து ஆப்பிரிக்க நாடுகளிடம் தனிமைப் பட்டுப் போய் கிடக்கிறது.

மொத்தத்தில், உலக அரங்கில் இந்தியாவுக்கு ஏற்கனவே இருந்து வந்த கொஞ்ச நஞ்ச மதிப்பும் மரியாதையும் பா.ஜ.க. அரசின் கேடுகெட்ட வெளியுறவுக் கொள்கைகளால் இப்போது முற்றாக தகர்ந்துபோய்விட்டது. வாஜ்பாயின் அமெரிக்கப் பயணத்தால் இது இன்னுமொருபடி முன்னேறி, அற்பப் புழுவைப் பார்க்குமளவுக்குக் கேவலமான நிலையை எட்டிவிட்டது. ஆனாலும் தனது அமெரிக்கப் பயணத்தால் இதுவரை கண்டிராத வகையில் உலக நாடுகளுடனான உறவில் வாஜ்பாய் ஏதோ சாதித்துவிட்டதாக நம்பச் சொல்கின்றனர்.

கோயபல்சு பாணியில் தொடர்ந்து பிரச்சாரம் செய்தால் கழுதையைக் குதிரையாக்கி விடலாம் என்று பாசிஸ்டுகள் கனவு காண்கின்றனர். ஆனால் அவர்களின் பகற்கனவு ஒருபோதும் நனவாகிவிட முடியாது.

● மனோகரன்

# பறிபோகும் கல்விச் சலுகைகள் பொங்கியெழும் தமிழக மாணவர்கள்

உலக வங்கியின் உத்தரவுக்கு அடிபணிந்து, புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் கல்வித் துறையையும் தனியார்மயமாக்கும் முயற்சியில் செயல்பட்டு வருகிறது மத்திய மாநில அரசுகள். அதனையொட்டி, கல்விக் கட்டண உயர்வை அறிவித்தும், மானியங்களை ரத்து செய்தும் மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையைப் பறிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

ஏற்கனவே அரசு கல்லூரி விடுதிகளில் சொத்து எதுவும் இல்லாத கூலி ஏழைகளின் வீட்டுப் பிள்ளைகள் தங்கி படிக்கும் வகையில் கல்வி கடனுதவி, கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. சென்ற ஆண்டு பல கல்லூரிகளில் இத்தொகைகள் தரப்படவில்லை. தற்போது நிரந்தரமாக அந்தக் கடனுதவி, கல்வி உதவித் தொகைகளை ரத்துச் செய்யும் ஆணையைப் பிறப்பித்துள்ளது அரசு. அவ்வாணையில் கடனுதவிக்கு ரூ. 10,000 சொத்து மதிப்பு காட்ட வேண்டும் எனவும் இல்லையேல் இரு அரசு ஊழியர்கள் ஜாமீன் கொடுக்க வேண்டுமெனவும் கல்வி உதவி தொகைக்கு ரூ. 300 டெபாசிட் கட்ட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

தினக்கூலி பிழைப்பு நடத்தும் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களால் எப்படி ரூ. 10,000 சொத்து மதிப்பும், ஜாமீனும் கொடுக்க முடியும்? கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணத்திற்கே வீட்டுச் சாமான்களை அடகு வைத்தும், வட்டிக்குக் கடன் பெற்றும் சமாளிக்கும் நிலையில் எப்படி கல்வி உதவித் தொகைக்கு ரூ. 300 டெபாசிட் கட்ட முடியும்? இதையெல்லாம் கணக்கில் கொள்ளாத கல்லூரி நிர்வாகம் சொத்துக் கணக்கோ, ஜாமீனோ தராத மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேற்றி விட்டனர். இது மட்டுமில்லாமல் சோறு போட்டுக் கழுத்தையறுப்பது போல் இது நாள்வரை தங்கியதற்கும், உண்டதற்கும் பணம் கட்டாவிட்டால் தேர்வு எழுத விடமாட்டோம் எனவும் அறிவித்து விட்டனர்.

இது குறித்து மாணவர்கள் தன்னெழுச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பல முறை சந்தித்துப் பேசியும் பலனில்லை. முறையான தகவல்கூட தர மறுத்து விட்டனர் அதிகாரிகள். பேரணி, தர்ணா என அமைதியான முறையில் போராடிய மாணவர்கள் இந்திய மாணவர் சங்கம் சார்பாக ஒருநாள் அடையாள உண்ணாவிரதமும் இருந்தனர். எந்தப் பலனும் இல்லை.

பிரச்சனை தீராத நிலையில், பிரச்சனையின் காரணம் குறித்து புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி மாணவர்களிடையே பிரச்சாரம் செய்து வந்ததாலும், அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் போராட்டமே இதற்கு தீர்வு தரும் என மாணவர்கள் அனுபவத்தில் உணர்ந்ததாலும் சாலை மறியல் போராட்டம் செய்ய முடிவு செய்தனர். திருச்சி, தஞ்சை, நாகை என மூன்று மாவட்டங்களிலும் போராட்டம் பரவ பு.மா.இ.மு. உதவி செய்தது.

ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மைய போராட்டக் குழு அமைக்கப்பட்டது. திட்டமிட்டபடி 26.09.2000 அன்று முசிறி, திருச்சி, தஞ்சை, கும்பகோணம், கொட்டையூர், பொறையூர் என அனைத்து இடங்களிலும் மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். சென்னையிலும் அதே தேதியில் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் தன்னெழுச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திடீர் சாலை மறியலால் அதிர்ச்சிக்குள்ளான காவல்துறை அனைத்து இடங்களிலும் போராட்டத்தை முறியடிக்கும் நோக்கத்தோடு "கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபடக் கூடாது. உங்கள் மீது வழக்குத் தொடுத்தால் வாழ்க்கையே பாழாகி விடும்" என மிரட்டியது. அதற்கு மாணவர்கள் "எங்களுடைய வாழ்க்கை ஏற்கனவே அரசாணையால் பறிக்கப்பட்டு விட்டது. அதை மீட்டெடுக்க நாங்கள் இறுதி வரை போராடுவோம். எக்காரணம் கொண்டும் பின்வாங்க மாட்டோம்" என உறுதிபட முழங்கினர்.

தொடக்கத்திலிருந்தே மாணவர்களிடம் பிளவை உண்டாக்கும் நோக்கத்தோடு செயல்பட்ட இந்திய மாணவர் சங்கம் 'மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கும்' என்று ஆளும் வர்க்கத்தின் குரலையே பிரதிபலித்துப் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்தது. மாணவர்களின் வீரமிக்க போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தனிமைப்பட்டது. மாணவர்களின் போர்குணத்தாலும், பொது

www.padippakam.com

மக்கள் ஆதரவு தந்தாலும் மூக்கறுபட்டு நின்றது காவல்துறை.

போராட்டத்தில் ஈடுபட்டதற்காக முசிறி, தஞ்சை, கும்பகோணம், பொறையார் பகுதிகளில் மொத்தமாக சுமார் 750 மாணவர்கள் கைதாயினர். கைதுக்குப் பிறகும், பிரச்சனையைத் தீர்க்கும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக மைய போராட்டக் குழு அறிவித்தது. இதனால் பீதியடைந்த காவல்துறை அதிகாரிகளை வைத்து சமரச பேச்சு வார்த்தைக்கு மையப் போராட்டக் குழுவை ஓயாமல் அழைத்தது. 'கடனுதவி அளிப்பதால் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது' என்று மழுப்பலாக பதிலளித்த அதிகாரிகளிடம் "அரசு அதிகாரிகள் அரசியல்வாதிகளின் ஆடம்பர செலவாலும், அன்னிய பகாசுர கம்பெனிகளுக்கு அளிக்கும் மானியத்தாலும் ஏற்படாத பொருளாதார நெருக்கடி மாணவர்களுக்கு அளிக்கும் கடனுதவியால் மட்டும் ஏற்படுகிறதா?" என எதிர் கேள்வி கேட்டு வாயை அடைத்தனர்.



தி.மு.க. அரசால் பறிக்கப்பட்ட கல்விச் சலுகைகளை மீட்டெடுப்பதற்காகத் தமிழக மாணவர்கள் நடத்திய சாலை மறியல்.

இரவு இரண்டுமணி வரை பேச்சு வார்த்தை நடத்திய அதிகாரிகளிடம், மாவட்ட ஆட்சியரிடம் பேச்சு வார்த்தை நடத்த எழுத்துப்பூர்வமான வாக்குறுதி பெற்ற பிறகு மைய போராட்டக் குழு போராட்டத்தை வாபஸ் பெற்றது. பேச்சு வார்த்தையில் அரசாணையை நீக்குவது பற்றிய பரிந்துரை பரிசீலனையில் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அப்படி இல்லாத பட்சத்தில் குறுகிய காலத்தில் மாநிலம் தழுவிய அளவில் மிக கடுமையான போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் மாணவர்கள் எச்சரிக்கை செய்தனர்.

மாணவர்களுக்கு அரசியல் வேண்டாம், போராட்டம் வேண்டாம் எனஎவ்வளவுதான் ஆளும் வர்க்கம் பிரச்சாரம் செய்தாலும் சமூக அரசியல் நிலைமைகள் தவிர்க்க முடியாமல் அவர்களைப் போராட்டக் களத்திற்கு அழைத்து வந்திருக்கிறது. அவர்களுக்கு இப்போராட்டம் உற்சாகத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. அரசியலிலிருந்து திட்டமிட்டு விலக்கப்பட்ட மாணவர்கள் தங்களது பிரச்சனை அரசியல் பிரச்சனைதான்; அரசியலைக் கற்காமல், புரட்சிகர அமைப்புகளில் அணி திரளாமல் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முடியாது என்று அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டுள்ளனர்.

**தகவல்:**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
**திருச்சி, தஞ்சை, நாகை மாவட்டங்கள்.**

---

**7-ஆம் பக்கத் தொடர்ச்சி**

வனும் தவிர, ஜான்பாண்டியன், வை. பாலசுந்தரம், செ.கு. தமிழரசன், இளைய பெருமாள் போன்று பலரும் குழுக்குழுவாக இயங்குகின்றனர். உடையார், வேளாளக் கவுண்டர், நாடார் போன்ற ஒரு சில சாதிகள்தாம் இன்னமும் தனிச் சாதிக் கட்சிகள் அமைக்கவில்லை. சிலர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். என்றாலும், இச்சாதிகளின் சங்கங்களே அரசியல் செல்வாக்குடையவைகளாக உள்ளன.

இராமதாசு, சேதுராமன் போன்ற சாதி வெறியர்கள் சிலரும், கன்னப்பன், கு.ப. கிருஷ்ணன், ஏ.சி. சன்முகம் போன்ற கருப்புப் பண - கள்ளப்பண முதலைகள் சிலரும்தான் சுயநலத்துக்காக சாதிக் கட்சிகள் தொடங்கி நடத்துகிறார்கள்; அந்தந்த சாதி மக்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை என்று ஒதுக்கிவிட முடியாது.

"பல்வேறு அரசியல் கட்சிகளில் பிரிந்து கிடப்பதால்தான் நம் சாதியினர் முன்னேற முடியவில்லை. ஒரே கட்சி - சாதிக் கட்சியில் ஐக்கியமாகி நமது சக்தியைக் காட்டினால் அரசியல் கட்சிகள் ஓடிவரும், அதிகாரத்திலும் பங்கு பெறலாம்; நமது இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகள் பெருகும்; முன்னேறலாம்" என்கிற சாதித் தலைவர்களின் வாதத்தை நம்பி, கணிசமான சாதி மக்கள் மாநாடு - பேரணிகளுக்குத் திரளுவதைக் காண முடிகிறது. டாடா சுமோ - ஜீப், வயர்லெஸ் - செல்போன் சகிதமாக சுற்றி வந்து அதிகாரம் செய்யும் வாழ்க்கையை அனுபவிப்பதற்காக சாதிக் கட்சிகளில் சேர இளைஞர்களும் ஓரளவு தயாராக உள்ளனர். சாதிக் கட்சிகளைப் பகைத்துக் கொண்டு தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்று கருதும் ஓட்டுக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களுடன் பேரம் பேசி, அந்தந்த சாதி ஓட்டு வங்கியை விலைக்கு வாங்கி விடலாம் என்று கணக்குப் போடுகின்றனர்.

இந்த நிலை எங்கே போகும்? இராமதாசு, வாழப்பாடியைப் போல கோடி கோடியாகப் பணத்தைக் குவித்துக் கொண்ட தலைவர்கள் துரோகம் செய்வதிலும், ஒருவருக்கு எதிராக மற்றவர் சதி செய்வதிலும், குழுச் சண்டையாகி வெட்டிக் கொள்வதிலும், சாதியின் பெயரால் மீண்டும், மீண்டும் மக்கள் பலியிடப்படுவதிலும்தான் முடியும். சாதி அரசியல் சமூக நீதிக்கு வழி வகுக்காது; சாதிப் படுகொலைகளுக்கே இட்டுச் செல்லும்.

● ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com



# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

1964-ஆம் ஆண்டுதான் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி இரண்டாக - அதிகார பூர்வமாகப் பிளவுபட்டது. இவ்விரண்டு பிரிவுகளில் ஒன்றை இ. கம்யூனிஸ்டு என்றும், மற்றதை வ. கம்யூனிஸ்டு என்றும் ஆதித்தன் குடும்பப் பத்திரிக்கைகளான தினத்தந்தி முதலியன எழுத ஆரம்பித்தன. அதாவது "இடது" கம்யூனிஸ்டுகள், "வலது" கம்யூனிஸ்டுகள் என்பதன் சுருக்கம்தான் அவை. இப்படித்தான் தமிழ் நாட்டில் அக்கட்சிகள் அறியப்பட்டு வருகின்றன.

உண்மையில், "இடது", "வலது" என்று பாகுபடுத்துமாறு இரண்டு கட்சிகளுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு எதுவும் கிடையாது. இரண்டு கட்சிகளின் தேர்தல் உத்திகளிலும் மத்திய, மாநில அரசுகளில் எப்போது பங்கேற்கலாம் என்பதிலும், வெவ்வேறு அரசியல் கட்சிகள் குறித்து மதிப்பீடு செய்து கூட்டுச் சேருவதிலும் மட்டுமே அவ்வப்போது அவை மாறுபடுவது உண்டு. மற்றபடி வேறு எந்த மாறுபாடும் கிடையாது.

எனவேதான் 1980-ஆம் ஆண்டிலிருந்து இரண்டு கட்சிகளும் ஐக்கியப்படுவதற்கான முயற்சிகளைத் துவக்கி, ஆமை வேகத்தில் அம்முயற்சி நடக்கிறது. ஐக்கியத்துக்கான முயற்சியின் ஒரு பகுதியாக இரண்டு கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டுக் கமிட்டியும் போட்டுள்ளன. ஆனால், அத்தி பூத்தாற் போன்று அக்கமிட்டி கூடுகிறது. கூடினாலும் உருப்படியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாது கலைகிறது. இப்போதைக்கு ஐக்கியப்பட்ட இயக்கங்களை நடத்துவது என்று இரண்டு கட்சிகளும் முடிவு மேற்கொண்டுள்ளன. அதுவும் முன்னேற்றகரமாக நடப்பதில்லை. தனித்தனி "இயக்கங்கள்", "போராட்டங்கள்" தாம் அதிகம் நடத்துகின்றன.

ஐக்கியத்துக்கான முயற்சியில் அதிக ஆர்வம் காட்டுகிறது சி.பி.ஐ. கட்சி; ஐக்கியத்துக்கான வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாகவும் கூறி வருகிறது. ஆனால், சி.பி.(எம்) இதில் போதிய அக்கறை காட்டுவதில்லை என்று சி.பி.ஐ குற்றம் சாட்டுகிறது. இக்குற்றச்சாட்டை உறுதி செய்வது போலவே சி.பி.(எம்) நடந்து கொள்கிறது. இரண்டு கட்சிகளும் ஐக்கியப்படுவதற்கான வாய்ப்புக் குறைவாக இருக்கிறது; இரண்டுக்கும் இடையில் அடிப்படையிலான வேறுபாடுகள் உள்ளன என்பதுபோல தமது அணிகளுக்குத் தொடர்ந்து, சி.பி.(எம்) கட்சி போதிக்கிறது. இந்திய ஆளும் வர்க்கங்கள் பற்றிய கணிப்பிலேயே அந்த வேறுபாடு தொடங்குகிறது என்பதுதான் சி.பி.(எம்) கட்சியின் வாதம்.

"இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த காங்கிரசின் தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசிய முதலாளிகள்தான் இந்திய ஆளும் வர்க்கமாக உள்ளனர். சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலான சோசலிச முகாம் ஏகாதிபத்திய முகாமைவிட வெல்ல முடியாத பெரிய சக்தியாக வளர்ந்துவிட்டது. சோசலிசத்தின் வலிமையை உணர்ந்து கொண்ட தேசிய முதலாளிகள், அதன் உதவியுடன் மட்டுமே இந்தியாவில் சுயசார்பு தேசியப் பொருளாதாரத்தைக் கட்டி அமைக்க முடியும் என்று நம்புகிறார்கள். ஆகவே, காங்கிரசின் தலைமையிலான தேசிய முதலாளிகள் இந்த முற்போக்கு நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தேசிய முதலாளிகள், விவசாயிகள், தொழிலாளர்களின் கூட்டுத் தலைமையிலான தேசியக் கூட்டணி அமைத்து, முதலாளித்துவமற்ற பாதையின் மூலமாக சோசலிசத்தை நோக்கி நாடாளுமன்ற - சமாதான அரசியல் வழியாக முன்னேறுவதுதான் இந்தியப் புரட்சி யுத்த தந்திரமாக இருக்க முடியும்" - இதுதான் சி.பி.ஐ. கட்சி 1960-இல் வகுத்துக் கொண்ட திட்டம்.

"ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தாலும் அதன் பிறகு காங்கிரசின் தலைமையில் அமைந்த அரசு ஏகபோக பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிகள் - நிலப்பிரபுக்களை ஆளும் வர்க்கங்களாகக் கொண்ட அரசாகும். இந்தியப் புரட்சி சாதிக்க வேண்டிய நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு விவசாய சீர்திருத்த கடமையை இந்தப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களால் நிறைவேற்ற முடியாது. ஆகவே, தொழிலாள வர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயகக் கூட்டணி அமைத்து விவசாயப் புரட்சியைச் சாதிக்க வேண்டும். அதற்காக மக்கள் ஜனநாயக அரசை நிறுவ வேண்டும். இந்தியப் புரட்சியில் இன்றும் நிறைவேறாத கடமைகளைச் சாதிப்பதற்கான மக்கள் ஜனநாயகப் புரட்சியை அமைதி வழியில் செய்திடவே சி.பி.(எம்) கட்சி விரும்புகிறது. ஆனால், இதற்கு ஆளும் வர்க்கங்கள் அனுமதிக்க மாட்டா; மக்களின் விருப்பங்களை வன்முறை மூலம் ஒடுக்குவதையே ஆளும் வர்க்கங்கள் செய்யும் என்பதை இது வரையிலான உலகப் புரட்சி அனுபவங்கள் காட்டுகின்றன. ஆகவே, இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, எத்தகைய நிலைமைகளுக்கும் தயாராக இருப்போம்" - இதுதான் சி.பி.(எம்) கட்சி 1964-இல் வகுத்துக் கொண்ட திட்டம்.

ஆளும் வர்க்கங்கள் பற்றிய மதிப்பீடு, கூட்டுச் சேர்க்க வேண்டிய வர்க்கங்கள் பற்றிய வரையறுப்பு ஆகியவற்றில் இரண்டு கட்சிகளின் திட்டங்களுக்கிடையே மாறுபாடு இருக்கின்றன. என்றாலும் இரண்டு கட்சிகளுமே தமது "புரட்சிகர" நோக்கங்களை அமைதி வழியில் சாதிக்கப் போவதாக அதாவது நாடாளுமன்றப் பாதை வழியாகப் போய் "புரட்சி" செய்வதாகக் கூறிக் கொண்டன. இதனால், பிற தேர்தல் அரசியல் கட்சிகள் பற்றிய மதிப்பீடு, தேர்தல் வியூகம் அமைப்பது, தேர்தல் உத்திகள் வகுப்பது தேர்தல்களில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் அதிக இடங்களைப் பெறுவது, கூட்டணி அரசமைப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தின. இந்த விவகாரங்களில் குறிப்பாக காங்கிரசுடன் எத்தகைய உறவு வைத்துக் கொள்வது என்பதில் 1978 வரை இரண்டு கட்சிகளிடையே நிறைய வேறுபாடுகள் இருந்தன.

ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கத் தரகு வேலை பார்த்த சி.பி.எம்.-இன் பொதுச் செயலாளர் சுர்ஜித் (வலமிருந்து ஆறாவது) அம்முன்னணித் தலைவர்களுடன்.





படிப்பகம்

www.padippakam.com

காலனிய ஆட்சிக் காலத்தில், காங்கிரசுக்குள் புகுந்தும், வெளியிலிருந்து வேண்டிக் கொண்டும், முற்போக்குத் தீர்மானங்களை நிறைவேற்ற வைத்து விடுதலைப் போராட்டத்தை நடத்த வைப்பது என்ற உத்தியை ஒன்றுபட்ட கம்யூனிஸ்டு கட்சி மேற்கொண்டது. அதேபோன்று, இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரசு மூலமாக முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு முதலாளித்துவமற்ற பாதையில் "புரட்சி"யைச் சாதிப்பதற்கு சி.பி.ஐ. முயன்றது. சோவியத் ஒன்றியத்துடன் இராணுவ ஒப்பந்தம் போட்டுக் கொண்டது, நேருவின் வழியில் பல அரசுத் துறைத் தொழில்களைத் துவங்கியது, வங்கிகள் உட்பட தனியார் தொழில்துறை தேசியமயமாக்கியது, மன்னர் மானிய ஒழிப்பு போன்றவை சோசலிச நடவடிக்கைகள் என்று சி.பி.ஐ. சித்தரித்தது. இந்திரா காந்தி தனது எதேச்சதிகார, பரம்பரை ஆட்சியைக் காத்துக் கொள்வதற்காக காங்கிரசைப் பிளந்து, "பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக அவசர நிலைப் பிரகடனம்", "சி.ஐ.ஏ. சதி" என்ற பூச்சாண்டி காட்டுவது உட்பட எல்லாவற்றையும் முற்போக்கு என்று சொல்லி சி.பி.ஐ. ஆதரித்தது.

இதிலிருந்து சி.பி.(எம்)-ன் அணுகுமுறை மாறுபட்டிருந்தாலும், காங்கிரசை பெரு முதலாளிகள் தலைமையிலான பிற்போக்கு முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சி என்று கணித்த போதும், அக்கட்சிக்கு முற்றிலும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆரம்பம் முதலே சந்தர்ப்பவாத நிலைப்பாட்டையே சி.பி.(எம்) மேற்கொண்டது. இந்திராகாந்தி ஆட்சியிலும் கட்சியிலும் தனது ஏகபோக சர்வாதிகாரப் பிடியை நிறுவுவதற்காக காங்கிரசைப் பிளந்தபோது, அது மொரார்ஜி, அதுல்யா கோஷ், சஞ்சீவிரெட்டி போன்ற பிற்போக்குச் சக்திகளுக்கு எதிரான நடவடிக்கை என்று சி.பி.(எம்) வரவேற்றது. மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகள் தேசவுடமை, போன்றவற்றை முற்போக்கு நடவடிக்கைகளாக சித்தரித்தது. சோவியத் ஒன்றியத்துடன் இராணுவ ஒப்பந்தம்; தொழில் கூட்டு, வங்க தேசப் போர், அணுகுண்டு சோதனை ஆகியவற்றை ஏகாதிபத்திய எதிர்ப்பாகக் கண்டது. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குப் பிற்போக்கு சக்திகளிடமிருந்து ஆபத்து என்று சொல்லி சிறுபான்மையாக இருந்த இந்திரா ஆட்சியையும், அரசுத் தலைவர் தேர்தலில் வி.வி. கிரியையும் சி.பி.(எம்) ஆதரித்தது. இப்படிக் காங்கிரசு ஆதரவு நிலையெடுத்த போதெல்லாம், அக்கட்சி முற்றிலும் பிற்போக்காளர்களைக் கொண்டதல்ல, காங்கிரசிலும் ஒரு முற்போக்கான பிரிவு உள்ளது என்று சொல்லித் தனது சந்தர்ப்பவாத நிலையை சி.பி.(எம்) நியாயப்படுத்தியது.

காங்கிரசில் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டதும் இந்திரா தலைமையிலான கும்பல் நாடு முழுவதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. குறிப்பாக, "மேற்கு வங்கத்தில் சி.பி.(எம்) அணிகளுக்கு எதிராக அரை பாசிசத்தை ஏவி, தேர்தல் முறைகேடுகள் நடத்தி ஆட்சியைப் பிடித்தது" என்று சி.பி.(எம்) கட்சியே குற்றஞ் சாட்டியது. வரண்முறையற்ற இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டது. இதற்கு எதிராக ஜெயப்பிரகாஷ் நாராயணன் - மொரார்ஜி தலைமையிலான போராட்டங்கள் வெடித்தன. இது, சி.ஐ.ஏ. தூண்டுதலால் பிற்போக்குச் சக்திகள் நடத்தும் சதி என்று இந்திரா காங்கிரசும், சி.பி.ஐ.-க் கட்சியும் சித்தரித்தன. இக்கருத்தை ஏற்ற சி.பி.(எம்), எதிர்க் கட்சிகளின் போராட்டங்களில் இருந்து ஒதுங்கி நின்றது. இந்திரா காங்கிரசு அவசர நிலை ஆட்சியைப் பிரகடனப்படுத்தி எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரையும் கைது செய்தபோது, இரண்டு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களைத் தொடவே இல்லை. சி.பி.ஐ.தான் காங்கிரசுடன் நெருக்கமான உறவு கொண்டு அவசரநிலை பிரகடனம் சி.ஐ.ஏ. - பாசிச சதிக்கு எதிரானது என்று வரவேற்றது. எதிர்க் கட்சிகளின் போராட்டங்களில் இருந்து ஒதுங்கி நின்று நடுநிலை வகித்தது என்பதால் சி.பி.(எம்) கட்சியை இந்திரா காங்கிரசு எதிரியாகக் கருதவில்லை.

அவசரநிலைப் பிரகடனத்தால் செயலிழந்து போயிருந்த சி.பி.(எம்) தானும் அதை எதிர்த்துப் போராடியதாகக் காட்டிக் கொண்டு, அதன் பிறகு வந்த தேர்தல்களில் எதிர்க் கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டு ஆதாயம் அடைந்தது. காங்கிரசுடன் கூட்டு வைத்துக் கொண்ட சி.பி.ஐ. படுதோல்வி கண்டது. அவசரநிலை ஆதரவு சரியானது, தேர்தல் தோல்வி தற்காலிகமானது என்று சொன்ன டாங்கே - கல்யாண சுந்தரம் தலைமையில் ஒரு பிரிவாகவும், அதை எதிர்த்த ராஜேஸ்வரராவ் - இந்திரஜித் குப்தா தலைமையில் ஒரு பிரிவாகவும் சி.பி.ஐ. பிளவுபட்டது. இதுவே அதிகாரபூர்வ சி.பி.ஐ. ஆகியது; அவசர நிலை ஆதரவு தவறென்று சுயவிமர்சனம் மேற்று, காங்கிரசு எதிர்ப்பு நிலையெடுத்தது.

1978-க்குப் பிறகு சி.பி.ஐ. காங்கிரசு எதிர்ப்பு நிலையெடுத்த பிறகு, குறிப்பாக சி.பி.ஐ.யைக் காங்கிரசின் தொங்கு சதையாக மாற்றிய டாங்கே - கல்யாண சுந்தரம் கும்பல் வெளியேறிய பிறகு நடைமுறையில் சி.பி.ஐ. - சி.பி.(எம்) ஆகிய கட்சிகளுக்கிடையிலான வேறுபாடு முற்றாக மறைந்து போனது. 1981 தேர்தல்களில் இந்திரா காங்கிரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது கூட, தேர்தல்களில் வெற்றிபெற அதிக வாய்ப்பிருந்தபோது கூட சி.பி.ஐ. காங்கிரசு எதிர்ப்பு நிலையெடுத்தது. கேரளாவில் சி.பி.ஐ. தலைமையிலான காங்கிரசு கூட்டணியைக் கூட முறித்துக் கொண்டு ஆட்சி வாய்ப்பையும் நிராகரித்தது.

காங்கிரசுடனான சி.பி.ஐ.-யின் கடந்த கால உறவைக் குத்திக்காட்டி அக்கட்சி இன்னமும் வலது திரிபுவாதக் கட்சியாகவும், அதைவிட தான் புரட்சிக் கட்சி என்பதாகவும் சித்தரித்து வருகிறது சி.பி.(எம்). அதேசமயம், பழைய சி.பி.ஐ-யைப் போலவே நாடாளுமன்ற சகதிக்குள் ஆழமாக மூழ்கிப் போகும் யுத்த தந்திர ரீதியிலான முடிவொன்றை சி.பி.(எம்) தனது



ஐக்கிய முன்னணி ஆட்சியின் பொழுது பிரதமராக எண்ணிய ஜோதிபாசுவின் நப்பாசையில் மண் அள்ளிப் போட்ட சி.பி.எம்.-இன் மத்திய கமிட்டியின் முடிவை, "அது இமாலயத் தவறு" எனப் பகிரங்கமாகவே விமர்சித்து, கட்சிக் கட்டுப்பாட்டிற்குச் சவால் விட்டது ஜோதிபாசு - சுர்ஜித் கோஷ்டி.


படிப்பகம்

www.padippakam.com

பட்டிண்டா மாநாட்டில் மேற்கொண்டது. இந்த பட்டிண்டா மாநாடு வரை சுந்தரய்யா பாதை எனப்படும் "புரட்சி" வழியில் சி.பி.(எம்) சென்றதாகவும், அதன்பிறகு நம்பூதிரிபாடு - ஜோதி பாசுவின் திரிபு வாதப் பாதையில் சரிந்து விட்டதாகவும் இப்போதும் அக்கட்சியில் இருந்து கொண்டு புரட்சிச் சவடால் அடிக்கும் ஒரு கும்பல் வாதிடுவதுண்டு.

அது என்ன சுந்தரய்யா பாதை, நம்பூதிரிபாடு - ஜோதிபாசு பாதை? பின்தங்கிய, ஏற்ற தாழ்வான வளர்ச்சியுடைய இந்தியா, சீனா போன்ற காலனிய, அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுகள் பின்பற்றுவதற்காக மாவோ வகுத்தளித்த நீண்டகால மக்கள் யுத்தப் பாதை சீனப்பாதை; ஓரளவு வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும், தொழிற் சங்கம் மற்றும் அரசியல் போராட்டங்கள் மூலம் நீண்டகாலத் தயாரிப்புக்குப் பிறகு நாடு தழுவிய ஆயுதந் தாங்கிய பேரெழுச்சி மூலம் அதிகாரத்தைப் பிடிக்கும் லெனின் வகுத்தளித்த பாதை ரஷ்யப் பாதை.

சீனப்பாதையின் படி, கிராமப் பிரதேசங்களில் பிரதானமாக விவசாயிகளைத் திரட்டி, கொரில்லாப் போராட்டங்கள் மூலம் விடுதலைப் பிரதேசங்களை நிறுவி, விரிவுபடுத்தி அலை அலையாக முன்னேறி நகரங்களைச் சுற்றி வளைத்துக் கைப்பற்ற வேண்டும். ரஷ்யப் பாதையின்படி, நகரபுறங்களில் பிரதானமாகத் தொழிலாளர்களைத் திரட்டி, பல அரசியல் போராட்டங்கள் நடத்தி போதிய பலம் பெற்ற பிறகு ஆயுதந்தாங்கிய பேரெழுச்சி நடத்தி அதிகாரத்தை நிறுவி கிராமப் புறங்களுக்கு விரிவுபடுத்தி நாடு முழுவதையும் கைப்பற்ற வேண்டும்.



மதச்சார்பின்மை என்ற பெயரில் ஊழல் மகாராணி ஜெயாவோடும், காங்கிரசோடும் கூட்டணி கட்டிக் கொண்டிருக்கிறது சி.பி.எம்.

1947 அதிகார மாற்றத்தின் போது சுந்தரய்யா தலைமையில் ஆந்திரக் கம்யூனிஸ்டுகள் சீனப்பாதையைப் பின்பற்றி விவசாயிகளின் கொரில்லாப் படையைக் கட்டி நூற்றுக் கணக்கான தெலுங்கான கிராமங்களைக் கைப்பற்றினர். அனைத்திந்தியக் கட்சித் தலைமையின் துரோகத்தால் அந்த இயக்கம் ஒடுக்கப்பட்டது. அதேசமயம், பின்னாளில் சி.பி.(எம்) தலைவரான பி.டி. ரணதிவே தலைமையில் ரஷ்யப் பாதையைப் பின்பற்றுவதாகக் கூறி நகர்ப்புற ஆயுதந்தாங்கிய எழுச்சியில் குதித்த கம்யூனிஸ்டுகளின் முயற்சி கருவிலேயே அழிக்கப்பட்டது. நேரு - பட்டேலின் அரசால் பல ஆயிரம் கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

இவ்விரு கசப்பான அனுபவங்களை முன்னிறுத்தியும் அப்போது கட்சியில் நிலவிய நெருக்கடி, முரண்பாடுகளைத் தவிர்க்கவும் "கொள்கை அறிக்கை" என ஒன்று முன் வைத்து நிறைவேற்றப்பட்டது. "இந்தியப் புரட்சிஎன்பது சீனப்பாதையிலும் இருக்காது; ரஷ்யப் பாதையாகவும் இருக்காது. இந்தியப் பாதையையே மேற்கொள்ளும்" என்பதுதான் அதன் உட்கருத்து. 1964 கட்சித் திட்டத்திலும், இப்போது புதுப்பிக்கும் கட்சித் திட்டத்திலுமாக, 35 ஆண்டுகளாக, இதையே தனது "புரட்சிப் பாதை"யாக சி.பி.(எம்) கூறி வருகிறது. அது என்ன இந்தியப் பாதை? சி.பி.(எம்)மின் தலைவர்களுக்கோ, அணிகளுக்கோ கூட புரியாத பாதைதான் இந்த இந்தியப் பாதை!

இதையே கூட பருண்மையாக்கி - விவரமாக வகுத்துக் கொண்டு அமலாக்குவதற்குப் பதிலாக, 1978 வரை சுந்தரய்யா பாதையையும், அதன் பிறகு நம்பூதிரிபாடு - ஜோதிபாசு பாதையையும் பின்பற்றுகிறது சி.பி.(எம்). கேரளம், தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிசா, மேற்குவங்கம் என்று நாட்டின் தெற்கு, கிழக்கு மாநிலங்களில் தொடர்ச்சியான பிரதேசங்களில், கவனம் செலுத்தி கட்சியின் செல்வாக்கை வளர்த்து கிராமங்களில் விவசாயிகளின் கொரில்லாப் போராட்டத்தையும், நகரங்களில் தொழிலாளர்களின் பேரெழுச்சியையும் இணைத்து நடத்துவதுதான் சுந்தரய்யா பாதையாம்! சி.பி.(எம்) ஒரு "புரட்சிக் கட்சி" என்று பரப்புபவர்கள் கொடுக்கும் விளக்கம் இது! 1969-70-களில் அக்கட்சி நடத்திய நிலப் பறி இயக்கத்தை - பண்ணையார் மற்றும் புறம்போக்கு - கோவில் நிலங்களில் கொடி நட்டுக் கைதான இயக்கத்தை இதற்கு உதாரணமாகக் கூறுகிறார்கள். ஆனால் கட்சி ஆரம்பித்த 15 ஆண்டுகளாக கேரளா, மேற்கு வங்கம் திரிபுராவில் கூட்டணி ஆட்சி அமைப்பதிலும் சட்டமன்ற, நாடாளுமன்ற எண்ணிக்கையைக் கூட்டுவதிலும்தான் கட்சி கவனம் செலுத்தியது. கூட்டணி அரசுகளில் பங்கேற்பதன் மூலம் மக்களுக்கு இடைக்கால நிவாரணங்களைப் பெற்றுத்தர வேண்டும் என்று கூறும் 1964 திட்டத்தின் ஒரு பத்தியை இதற்குச் சாதகமாக தலைமை பயன்படுத்திக் கொண்டது.

1978 பட்டிண்டா மாநாட்டில், சுந்தரய்யா பாதை நிராகரிக்கப்பட்டு, நம்பூதிரிபாடு - ஜோதிபாசு பாதை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது இந்தி பேசும் மாநிலங்களில் கவனம் செலுத்தி கட்சியின் செல்வாக்கை வளர்த்து காங்கிரசுக்கு மாற்றுச் சக்தியாக உருவெடுப்பது நாடாளுமன்றத்தில் கூடுதலான இடங்களைப் பிடிப்பது என்பதுதான் அந்தப் பாதை. நாடாளுமன்றத்தில் கூடுதலான இடங்களைப் பிடித்து என்ன செய்வது, மேற்கு வங்கம், கேரளாவைப் போல மத்தியில் ஒரு கூட்டணி அரசமைப்பது இதன் நோக்கமா? இல்லையா? என்று அப்போது முடிவெடுக்கவில்லை. இந்தப் பாதையை எதிர்த்த சுந்தரய்யா தனிமைப்படுத்தப்பட்டு, நம்பூதிரிபாடு கட்சிப் பொதுச் செயலாளர் ஆனார்.

அடுத்த பத்தாண்டுகள் முயற்சித்தும் இந்தி பேசும் மாநிலங்களில் சி.பி.எம். கட்சியினால் காலூன்ற முடியவில்லை. இராஜீவ் காந்திக்கு எதிராக இலஞ்ச - ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, காங்கிரசில் இருந்து வெளியேறிய வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளமும், அயோத்தி பாபரி மசூதி - ராமன் கோவில் பிரச்சினையைக் கிளப்பிய பாரதீய ஜனதாவும் காங்கிரசுக்கு எதிரான இரண்டு பெரிய கட்சிகளாக இந்தி பேசும் மாநிலங்களில் வளர்ந்தன.

சி.பி.(எம்) - சி.பி.ஐ. அடங்கிய இடதுசாரி கூட்டணி மற்றும் பாரதீய ஜனதா ஆகிய இரண்டு பிரிவுகளுடனும் வி.பி. சிங்கின் ஜனதாதளம் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டது. இந்தக் கூட்டு வெற்றி பெற்று வி.பி. சிங் தலைமையில் தேசிய முன்னணி ஆட்சி அமைந்தது. இதற்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்த இடதுசாரிக் கூட்டணியும், பாரதீய ஜனதாவும் ஜனதா தளத்தைத் தம்பக்கம் இழுக்க முயற்சித்தன. பாரதீய ஜனதாவின் செல்வாக்கில் இருந்து ஜனதா தளத்துக்கு இழுத்து மூன்றாவது அணியை உருவாக்குவது, அதில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக வளர்வது என்று இடதுசாரி கூட்டணி முயன்றது. மண்டல் பரிந்துரை அமலாக்கம், அயோத்தி பாபரி மசூதி - ராமன் கோவில் பிரச்சினை ஆகியவற்றில் தேசிய முன்னணியுடன் முரண்பட்டு அதன் ஆட்சியை பாரதீய ஜனதா கவிழ்த்தபோது இடதுசாரி கூட்ட


படிப்பகம்

www.padippakam.com

ணியின் இந்த மூன்றாவது அணி கனவு பலித்துவிடும் போல் தோன்றியது.

வி.பி. சிங் - முலயம் சிங் - லல்லு பிரசாத் ஆகியோரை மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குச் சக்தியாக முன்னிறுத்தி இடது சாரி - ஜனநாயகக் கூட்டணி அமைத்து மத்திய ஆட்சியை நிறுவும் முயற்சியில் சி.பி.ஐ. - சி.பி.(எம்) முயன்றன. ஆனால் இந்த மூன்று தலைவர்களும் தனித்தனியாக பிரிந்து போய் ஜனதா தளமே பல கூறுகளாகிப் போனபோது மூன்றாவது அணி அமைக்கும் கனவு பொய்த்துப் போனது.

மத்தியில் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசின் சிறுபான்மை ஆட்சி நிறுவப்பட்டது. அது இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உலகமயம் - தனியார்மயம் - தாராளமயம் ஆகிய மக்கள் விரோத ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசு ஆதரவு, நாட்டை மறுகாலனியாக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைகளை அமலாக்கியது. ராவின் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளைக் கொண்டு கொள்ளாமல் விட்ட இடதுசாரிக் கூட்டணியினர், ஆரம்பத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்த "பாரத் பந்த்" போன்ற சில போராட்டங்களை நடத்தியது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு அவற்றையும் கைவிட்டு முடங்கிப் போனது.

நரசிம்மராவ் ஆட்சியைக் கவிழ்ப்பதில் பாரதீய ஜனதா உட்பட எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து இடதுசாரிக் கூட்டணி ஆர்வம் காட்டியது. ஆனால் அதற்கு மாற்று ஏற்பாட்டைக் கண்டறிவதில் தோல்வியுற்றது. உடைந்து சிதறிப் போன ஜனதா தளத்தை ஐக்கியப்படுத்த வேண்டும் என்று திரும்பத்திரும்ப கோரிக்கை விட்டது. வேகமாக வளர்ந்து வந்த பாரதீய ஜனதாவுக்கும் காங்கிரசுக்கும் எதிராக மூன்றாவது அணி முயற்சியில் இறங்கியது. காங்கிரசையும் பாரதீய ஜனதாவையும் ஆளும் வர்க்கக் கட்சிகள் என்று வர்க்க ஆய்வு செய்து மதிப்பிட்ட இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளும் ஐக்கியப்படுத்த முயன்ற ஜனதா தளத்தின் வர்க்கத் தன்மைபற்றி வாய்மூடிக் கொண்டன.

1996 தேர்தல்களின் முடிவு தொங்கு நிலை பாராளுமன்றத்தை உருவாக்கிய போது, ஜனதாதளம், சமாஜவாதி, ராஷ்டிரிய ஜனதா, அசாம் கணபரிசத், தி.மு.க., தெலுங்கு தேசம் அடங்கிய ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு சி.பி.ஐ. - சி.பி.(எம்) கட்சிகள் கடும் முயற்சியில் ஈடுபட்டன. அப்போது அமைந்த தேவகவுடா ஆட்சியைக் காப்பது, அது கவிழ்ந்த பிறகு குஜ்ரால் ஆட்சி அமைவது, அதைக் காப்பது என்ற வேலையைத் தனது பிரதானப்பணியாக இரு கம்யூனிஸ்டுக் கட்சிகள் மேற்கொண்டன. சி.பி.(எம்) கட்சியின் பொதுச் செயலாளர் அரிகிசன் சிங் சுர்ஜித் முழுநேர அரசியல் தரகராக மாறினார்.

மக்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவதற்காக மாநிலங்களில் ஆட்சி அமைக்கலாம், பங்கேற்கலாம் என்று சி.பி.(எம்) திட்டம் ஏற்கிறது. ஆனால், மத்தியில் ஆட்சி அமைப்பது, கூட்டணி அரசில் பங்கேற்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மத்தியில் வி.பி. சிங்கின் தேசிய முன்னணி ஆட்சி அமைந்தபோது இந்தப் பிரச்சினை எழுந்தது. அப்போது தாமே தீர்மானகரமான சக்தியாக இல்லாதவரை வெளியிலிருந்து ஆதரிப்பது என்று இடது சாரிக் கூட்டணிக் கட்சிகள் நிலையெடுத்தன. ஆட்சியில் பங்கும் பொறுப்பும் ஏற்பதில் இருந்து நழுவிக் கொண்டு, அதேசமயம் வெளியிலிருந்து நிர்பந்திக்கும் இக்கட்சிகளின் அணுகுமுறை செய்தி ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டது.

தேவகௌடா, குஜ்ரால் தலைமையிலான அமைச்சரவைகளில் சி.பி.ஐ.யின் இரண்டு பேர் இணைந்தனர். அதிலும் முக்கியமாக உள்துறை (போலீசு பிற) அமைச்சர் பதவி கிட்டியது. அமைச்சரவையில் பங்கேற்கும்படி மட்டுமல்ல, சி.பி.(எம்)ன் ஜோதிபாசுவுக்குப் பிரதமர் பதவி தரவும் ஐக்கிய முன்னணி முன்வந்தது. ஜோதிபாசுவும் ஆசைப்பட்டார், சுர்ஜித்தும் ஆதரித்தார். ஆனால், சி.பி.(எம்)-ன் மத்தியக் கமிட்டி அதை நிராகரித்துவிட்டது.

ஆனால் ஜோதிபாசு - சுர்ஜித் தலைமை இந்த ஆசையைக் கைவிடவில்லை. தான் பிரதமராகவும் வாய்ப்பை நழுவவிட்டது இமாலயத் தவறாகும் என்று ஜோதிபாசுவே பகிரங்கமாகப் பத்திரிக்கை பேட்டியளித்தார். அது அவரது தனிப்பட்ட கருத்துதான் என்று எயச்சூரி - காரத் தலைமை பகிரங்கமாகவே அறிவித்தது. சி.பிஎம். - வரலாற்றில் இவ்வாறு நடப்பது கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாதது. இதுபோல மாறுபட்ட கருத்துத் தெரிவித்ததற்காக மூத்த தலைவரும் முன்னாள் திரிபுரா முதல்வருமான நிருபன் சக்ரவர்த்தி மீதே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், ஜோதி பாசு - சுர்ஜித் தலைமை மீது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

உண்மையில் சி.பி.(எம்) கட்சி தீராத குழப்பத்தில் சிக்கிக் கொண்டதையே இது காட்டுகிறது. குஜ்ரால் அரசு கவிழ்க்கப்பட்ட போது, மூன்றாவது அணியை உருவாக்கிட அக்கட்சி கடும் முயற்சியில் ஈடுபட்டது. அந்த முயற்சி பலிக்காது என்பது உறுதியானவுடன், சோனியா தலைமையில் ஆட்சி அமைவதற்காக கடும் உழைப்பில் இறங்கியது. பாரதீய ஜனதா தலைமையிலான அரசு அமைந்த பிறகு அதைக் கவிழ்ப்பதற்கான தீவிர முயற்சியில் இறங்கியது.

ஜெயலலிதாவின் தயவால் வாஜ்பாயி அரசைக் கவிழ்த்த பிறகு வயோதிக வயதிலும் சுழன்று சுழன்று அரசியல் தரகு வேலை பார்த்தார் சுர்ஜித். கூட்டணி அரசு அமைப்பதற்கு சோனியா காங்கிரசு மறுத்துவிடவே ஜெயலலிதா - முலயம் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைப் பிடிக்க முயன்றனர். அதைத் தடுத்து சோனியா காங்கிரசு ஆட்சி அமைத்திடப் பாடாதபாடுபட்டார் சுர்ஜித்.

எல்லா முயற்சியும் தோற்றுப்போய் இடைத்தேர்தலே தவிர்க்க முடியாத நிலை வந்தது. மூன்றாவது அணி அமைக்கும் சி.பி.(எம்) கனவு முற்றாகத் தோல்வி கண்டது. ஜோதிபாசு தலைமையில் மத்திய ஆட்சி அமைவதை சி.பி.(எம்) மத்தியக் கமிட்டி ஏற்கும் நிலை உருவானது. ஆனால் அதற்குள்ளாகவே பா.ஜ.க. தலைமையிலான தேசிய முன்னணி பெரும்பான்மை பெற்றது.

இனி, மூன்றாவது அணிக்கான வாய்ப்பே இல்லை என்று சி.பி.(எம்) தலைமையே ஒப்புக் கொண்டது. ஆனால் இந்த நீண்ட அரசியல் பயணத்தின் முடிவில் சி.பி.(எம்) கட்சி எங்கே நிற்கிறது என்ற பரிசீலனை அக்கட்சிக்கு உண்மையில் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

★ சி.பி.(எம்) கட்சி உதயமானபோது எடுத்த அரசியல் நிலைப்பாட்டிற்கு நேரெதிரான இடத்தில் இப்போது அது நிற்கிறது. தேசிய முதலாளிகளின் பிரதிநிதியாகிய காங்கிரசு இந்திய தேசிய ஜனநாயகப் புரட்சியில் முற்போக்குப் பாத்திரமாற்ற முடியும் என்பது சி.பி.ஐ.இன் நிலைப்பாடு. இதைத்தான் தவறு என்றும், சி.பி.ஐ.க்கும் தனக்கும் இடையிலான அடிப்படைத் திட்ட வேறுபாடு என்றும், இன்னமும் சி.பி.ஐ.யுடன் ஐக்கியப்படுவதற்குத் தடையாக இருப்பது இதுவே என்றும் சி.பி.(எம்) கூறி வருகிறது. பெருமுதலாளிகள் தலைமையிலான முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சியான காங்கிரசு எதிர்ப்புதான் இந்திய மக்கள் ஜனநாயகப் புரட்சியின் கடமை என்று தனது பிறப்புத் திட்டத்தில் அறிவித்துள்ளது. இப்படிக் காங்கிரசை எதிர்த்து அரசியல் பயணம் துவங்கிய சி.பி.(எம்) கட்சி காங்கிரசு ஆட்சி அமைய வேண்டும் என்பதற்காக பிரச்சாரம் செய்வது மட்டுமல்ல, பிற அரசியல் கட்சிகளிடம் மாறி மாறித் தூது போய்க் கொண்டிருக்கிறது.

★ இந்தி பேசும் மாநிலங்களில் கவனம் செலுத்தி கட்சியின் செல்வாக்கை வளர்ப்பது; அதன் மூலம் நாடாளுமன்றத்தில் தீர்மானகரமான சக்தியாக உருவாவது என்கிற நம்பூதிரிபாடு - ஜோதிபாசு பாதையும் படுதோல்வி கண்டது. சி.பி.(எம்) மற்றும் இடசாரிக் கூட்டணிக் கட்சிகள் மொத்தமாக சேர்த்தே கடந்த 20-25 ஆண்டுகளில் 10 நாடாளுமன்ற எம்.பி.களைக் கூட இந்தி பேசும் மாநிலங்களில் வெற்றி பெறச் செய்ய முடியவில்லை. இந்தக் காலத் தேர்தல் முடிவுகளை அலசிப்பார்க்கும் போது இடதுசாரிக் கூட்டணி 45 எம்.பி.க்களுக்கு மேலோ, சி.பி.(எம்) மட்டும் 35 எம்.பிக்களுக்கு மேலோ நாடாளுமன்றத்தில் இடம் பிடிக்கவே முடியாது என்ற தேக்க நிலையில் சிக்கிக் கொண்டு விட்டதைக் காண முடியும். மேற்கு வங்கம், கேரளா திரிபுராவுக்கு


படிப்பகம்

www.padippakam.com

வெளியே, முலயம் சிங், லல்லு யாதவ், ஜெயலலிதா அல்லது கருணாநிதி சந்திரபாபு போன்றவர்களுடன் கூட்டணி அமைவதைப் பொருத்துத்தான் ஓரிரு எம்.பிக்களைப் பெற முடியும். இந்த நிலையில், ஜோதிபாசு பிரதமராவது இருக்கட்டும், நாடாளுமன்றத்தில் எண்ணிக்கையைக் கூட்ட முடியும் என்பது கூட பகற்கனவே! இடதுசாரிக் கூட்டணி மற்றும் சி.பி.எம். கட்சியின் கடந்த ஏழு பொதுத் தேர்தல் "சாதனை"களைக் காணும் எவரும் அவை ஒரு அரசியல் முட்டுச் சந்தில் சிக்கிக் கொண்டிருப்பதாகவே கருத முடியும். இந்த முட்டுச் சந்தில் இருந்து வெளிவருவதற்கான வழியறியாது அக்கட்சிகள் தவித்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்த நிலை!

— தொடரும்

## தலையங்கம் தொடர்ச்சி

விதித்துத் தனி நீதிமன்றம் அளித்த தீர்ப்பே இறுதியானதல்ல, இன்னமும் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்று மேல் முறையீடு செய்து வழக்கைத் தகர்ப்போம்" என்று கொக்கரிக்கின்றனர், ஜெயா-சசி, மற்றும் ராவ்-பூட்டா சிங் விசுவாசிகள். குற்றங்கள் புரிந்து, வழக்குத் தொடுத்து இவ்வளவு காலம் ஆனது மட்டுமல்ல, "இனிமேலும் இழுத்தடிப்போம்", "எங்களை ஒன்றும் ஆட்டவும் முடியாது. அசைக்கவும் முடியாது" என்று திமிரோடு பேசுகின்றனர்.

தண்டிக்கப்பட்ட கிரிமினல்களுக்கு இவ்வளவு திமிரும் துணிவும் எப்படி வருகிறது. குற்றம் புரிந்தவர்களுக்குக் கவசமாக, அவர்களால் ஆதாயம் அடையும் ஒரு பெரும் பொறுக்கி அரசியல் கூட்டம் உள்ளது. குற்றஞ்சாட்டும் வாதிகளைத் தவிர, அனைத்து அரசியல் கட்சிகளுமே துணை நிற்கின்றன. நல்லக்கண்ணு, சங்கரைய்யா, மூப்பனார்-வீரமணி ஆகிய ஜெயாவின் இன்னாள் அரசியல் கூட்டாளிகளின் அதே வாதத்தைதான் பா.ஜ.க., வைக்கோ, இராமதாசு முதலிய அன்னாள் அரசியல் கூட்டாளிகளும் முன்பு பேசினர்.

குற்றஞ்சாட்டும் கருணாநிதியே அதற்கான தார்மீக உரிமையற்றவராகி நிற்கிறார். பேருந்து எரிப்பில் பிடித்து வைக்கப்பட்ட கைதிகளை போலீசு நிலையத்துக்குள் புகுந்து மீட்டு வரும் மு.க. அழகிரியின் கிரிமினல் செயலுக்கு நடவடிக்கை எடுக்க முடியாத கருணாநிதிக்கு, பிறரைக் குறை கூற என்ன தார்மீக உரிமை இருக்கிறது? ஆகவேதான், கிரிமினல் குற்றவாளிகள், அதிலும் அரசியல் கிரிமினல் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு அறவே அற்றுப் போய்விட்டது. சட்டத்தின் மீதும் நீதியின் மீதும் அப்பாவி மக்களுக்குப் பிரமையூட்டுவதற்காகத்தான் தண்டனைத் தீர்ப்புகள் வருகின்றன.

# விவசாயம்
# உணவுக்கா? வணிகத்துக்கா?

*- ஒரு விவசாயியின் பார்வையில் கோவை விவசாயக் கண்காட்சி*

எனது நண்பர் ஒருவர் விவசாய பட்டப் படிப்பு படித்தவர். நான் அவரிடம் பழைய விவசாயமெல்லாம் அழிந்து வருவது பற்றியும் அதனால் விவசாயிகள் படும் துன்பதுயரங்கள் பற்றியும் பேசும்போதெல்லாம் அவர் மறக்காமல் சொல்வது ஒன்றுதான். அதாவது "நாம நெனைக்கிற மாதிரி இல்ல தம்பி. இப்போ நெறைய மாற்றம் வந்துக்கிட்டிருக்கு. இதையெல்லாம் நான் கண்டுக்கிற மாட்டேன்னா நட்டம் நமக்குத்தான். இதப்பத்தி நான் வாயில சொன்னா நீ நம்ப மாட்டே, நேர்ல பாத்தாதான் உனக்குப் புரியும்" என்பார்.

கண்ட புத்தகத்தையும் படிச்சிட்டு, அப்பாவிகளிடம் அதைச் சொல்லி பயமுறுத்தும் படிப்பாளிகளின் வேலை இது என்றுதான் நினைத்துக் கொள்வேன். ஆனால் ஆகஸ்டு-29 முதல் செப்டம்பர் 2-ம் தேதி வரை கோவையில் நடந்த சர்வதேச வேளாண்மை கண்காட்சியை (அக்ரி எக்ஸ்போ) நேரில் பார்த்த பிறகுதான் நண்பர் சொன்னதன் அர்த்தம் புரிந்தது.

விவசாயக் கண்காட்சிதானே என்ற நினைப்பில் வெள்ளை வேட்டி சட்டையுடன் நுழைவாயிலை நெருங்கியதுமே நம்மை உள்ளே விடுவார்களா என்ற பயம் வந்துவிட்டது. ஒரு குருட்டு தைரியத்துடனும், சற்று தயக்கத்துடனும் வாசலை நெருங்கியதும் 20 ரூபாயைக் கட்டணமாக வாங்கிக் கொண்டு உர்ரென்று முகத்துடன் வழிவிட்டனர்.

வளாகத்தினுள்ளே ஒழுங்கான வரிசையில் ஏராளமான கடைகள், பார்வையாளர்களுக்குப் பொருட்களை இயக்கி காட்டவும், சந்தேகங்களை விளக்கவும் ஆங்கிலம் பேசும் இளம் ஆண் - பெண் ஊழியர்கள் சிலரும் இருந்தனர். விசாரித்ததில் இவர்கள் எல்லாமே அசல் தமிழ்நாட்டுக்காரர்கள் என்று தெரிந்தது. ஆங்கிலம் தெரியாத ஜென்மங்களுக்காக சில நிறுவனங்கள் தமிழில் நோட்டீசு போட்டுக் கொடுத்தனர்.

அரை ஹெச்.பி. திறனில் 40 அடி ஆழத்தில் உள்ள தண்ணீரை உறிஞ்சும் பம்பு செட்டுகள், எல்லாவகை பயிர்களுக்கும் சொட்டுநீர் பாசனமளிக்கும் கருவிகள், கரண்டு குறைந்தாலோ அல்லது கிணற்றில் தண்ணீர் வற்றிவிட்டாலோ தானாகவே நின்று விடும் ஸ்டார்டர்கள், குறைந்த அளவு மின்சாரத்திலும் தானாகவே இயங்கி தண்ணீர் இறைக்கும் பம்புகள் - எல்லாம் பார்க்கவே ஆச்சரியமாக இருந்தது. பக்கத்திலிருந்த ஒரு விவசாயி "எல்லாம் நல்லாதானுங்க இருக்கு. கரண்டு ஒழுங்கா வந்தாதானுங்க இது வேலை செய்யும். கரண்டுக்கு மீட்டர் போட்டுட்டானுகன்னா இதுகள வாங்கி எழவு என்ன பண்றதுங்கோ?" என்றவுடன் என் மயக்கம் தெளிந்தது.

இவை தவிர ஒரு மணி நேரத்தில் 2000 கிலோ அரிசியிலிருந்து கல், குருணை, கருப்பு அரிசிகளைப் பிரித்தெடுக்கும் ஜெர்மன் கருவி (விலை ரூ. 18 லட்சம்) ஒரே நாளில் 4 ஏக்கர் கரும்பை வெட்டி தோகை பிரித்து அடுக்கும் கருவி (விலை ரூ. 1.25 கோடி) காபி, டீ, பிஸ்கட், ரொட்டி போன்ற எல்லாவகை உணவுப் பொருட்களிலும் என்னென்ன சத்துப் பொருட்கள் எவ்வளவு உள்ளது என்பதை 10 வினாடிகளில் கண்டு பிடிக்கும் அமெரிக்க கருவி (சின்ன டி.வி. பெட்டி அளவுள்ள இதன் விலை 10 லட்சமாம்!); ஒரு செடியின் ஒருநாள் வளர்ச்சியைத் துல்லியமாக ஆராய்ந்து அது எவ்வளவு உயரம் வளரும்; வேர், தண்டு இலைகளில் என்ன மாற்றம் ஏற்படுகிறது? ஒரு செடிக்கு எத்தனை லிட்டர் தண்ணீர்? எத்தனை கிராம் உரம் வேண்டும்? ஆகிய விவரங்களைச் சொல்லும் நவீன கம்ப்யூட்டர் ஆகியவை எல்லாம் விவசாயிகள் பார்க்க முடியாத அதிசயங்கள்! வந்திருந்த ஒரு சில விவசாயிகள் சர்க்கஸில் சிங்கம் - புலிகளைப் பார்ப்பது போல் பார்த்து விட்டுப் போனார்கள். விவசாயக் கல்லூரி மாணவ மாணவிகளும் சூட்கேஸ் ஆசாமிகளும்தான் கருவிகளின் நுணுக்கம் பற்றி கேட்டுக் கொண்டிருந்தனர்.

இதையெல்லாம் பார்த்து மூச்சுவிடாமல் நகர்ந்து கொண்டிருந்த கூட்டம். ஓரிடத்தில் மட்டும் தேங்கி நின்று அந்த இடமே சந்தை கடையாகிப் போனது. அங்கே பணக்கார வீடுகளின் வாசல்படி, வராண்டா, மொட்டை மாடிகளில் வளர்க்கும் அலங்காரப் பூச்செடிகளை அழகாக அடுக்கி வைத்திருந்தனர். ஒரு ஏக்கத்தில் நானும் 'டேலியா' கிழங்கு என்ன விலை என்று கேட்டேன். 200 கிராம் பாக்கெட் ரூ 60-ஆம். ரேசன் அரிசி வாங்க காசு கேட்டு நேற்று முழுதும் நச்சரித்த பொண்டாட்டியின் நினைப்பு வந்தது நைசாக நழுவினேன்.

பக்கத்திலிருந்த ஸ்பிக் கம்பெனி கடையிலும் பெரிய கூட்டம். உரம் வாங்க இவ்வளவு பேரா என ஆச்சரியத்துடன் உள்ளே போய் பார்த்தால் 6 இன்ச் உயர வாழைக் கன்றுகள் (ஒரு கன்றின் விலை 12 ரூபாய்), அரை அடி உயர விதை கரும்பு, விதை


படிப்பகம்

www.padippakam.com

யில்லா கொய்யா கன்றுகள், வெளிநாட்டுப் பூச்செடிகளின் நாற்று களை வைத்திருந்தனர். விசாரித்தால் இது அவுங்க கம்பெனியோட விவசாய உயிர்தொழில் நுட்ப பிரிவு திசு வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்த நோய் தாக்காத பயிர்களாம்! தக்காளி விதை வாங்கவே கமிசன் கடைக்காரனிடம் கையேந்தும் விவசாயிகள் இதை வாங்க முடியுமா? என்று நான் யோசிக்கும் போதே அங்கிருந்தவர் "ஒரு ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய் செலவு ஆகும். பெரிய விவசாயிகளுக்குத்தான் இது கட்டுப்படியாகும்" என்று நெத்தியடி அடித்தார்.




மான்சாண்டோ விதை நிறுவனத்தை எதிர்த்துக் கர்நாடக விவசாயிகள் பெங்களூரில் நடத்திய கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட பிரான்சு நாட்டு விவசாயி ஜோஸ் போவ் "மான்சாண்டோ நாயே, திரும்பிப் போ" என்ற முழக்க அட்டையைத் தூக்கிக் காட்டுகிறார். மான்சாண்டோ போன்ற பன்னாட்டு விதை நிறுவனங்கள் உலக விவசாயத்திற்கே அச்சுறுத்தலாக இருப்பதன் அத்தாட்சி இது.

தகவல் தொழில்நுட்ப புரட்சி இந்தியாவின் கடைக்கோடி கிராமத்துக்கும் பரவி வருவதாக ஆங்கிலத்தில் பேசுகின்றனர்.

ஆனால், எங்கள் ஊரில் தக்காளி விலை குறைந்து விட்டதால் வீதியில் கொட்டிய தக்காளியை அளவுக்கு அதிகமாக தின்ற 2 கழுதைகள் வயிறு ஊதி செத்து விட்டது. கழுதைக்குச் சொந்தக்காரர் நட்ட ஈடு கேட்டு விவசாயியை விரட்டிக் கொண்டிருக்கிறார்.

பண்பாட்டு அறிவியல் மையம் என்ற பெயரில் பெட்டிக்கடை அளவிருந்த அறையில், அழிந்து போன நம் பாரம்பரிய நெல் ரகங்களில் 58 ரகங்களைத் தேடிப் பிடித்து பார்வைக்கு வைத்திருந்தார்கள். 'இன்றைய் நெல் ரகத்தை விட 2 குவிண்டால் தான் குறைவாக விளையும்; ஆனால் ருசியும் சத்தும் நிறைந்தது. முழங்கால் உயரம் வளருவதால் ஏராளமான கால்நடை தீவனம் கிடைக்கும், நோய் எதிர்ப்புச் சக்தியுள்ளது. உரம், மருந்து செலவு ஏற்படாது' என்று பழைய நெல் ரகங்களின் பெருமைகளை ஒவ்வொன்றாக அங்கிருந்தவர் சொல்ல சொல்ல இவ்வளவு அருமையான ரகங்களைப் படுபாவிகள் அழிச்சிட்டாங்களேன்னு கோபம்தான் வந்தது.

கண்காட்சி கட்டிடத்துக்கு வெளியே தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் சினிமா மாதிரி பிரமாண்டமா செட் போட்டிருந்தது. அதற்குள்ளே, கட்டாந்தரையிலும் 1 மணி நேரத்தில் 25 குழி தோண்டும் கருவி, உழுது கொண்டே பார் போடும் கருவி, சோளம், கம்பு முதல் நெல் வரை நடும் கருவி, நெல், பருத்தி பயிருக்குள்ளும் சேதமில்லாம களை எடுக்கும் கருவி, 1 நாளில் 5 ஏக்கர் கரும்பை வெட்டி, தோகை உரித்து அடுக்கிவிடும் கருவி, மா, தென்னை மர உச்சியில் மருந்தடிக்கும் கருவி, உழவு முதல் அறுவடை வரை எல்லா வேலைகளையும் செய்வதற்கு மிசின்கள் தயாராக இருந்தது. இதைப் பார்த்த கோவை மாவட்ட விவசாயி ஒருவர் "ஓகோ மிசினு களையுங்கூட எடுக்குதுங்களா, எல்லாமே விவசாயிகள கொல்றதுக்குத் தானுங்க கண்டுபிடிக்கிறானுக, விவசாயிகள வாழவைக்க ஒண்ணையும் காணோம்!" என எல்லா விவசாயிகளும் ஒருமித்த குரலாய் கூறினார்.

சுமார் 1 ஏக்கர் பரப்பில் செயற்கையாக மண்ணைக் கொட்டி அதில் மக்காச்சோளம், பருத்தி, நெல் வயல்களை உருவாக்கி, அதன் அருகிலேயே ஓலை கொட்டாய்க்குள் தலைச்சேரி ஆடுகளும், ஜெர்சி பசுக்களும் விட்டிருந்தனர். ஒரு மூலையில் அழகான சிறு குளம். அதோடு ஒட்டியிருந்த மரப் பெட்டிக்குள் முயல்களும், கோழிகளும் இரை தின்ன கீழே விழும் இவற்றின் எச்சங்களைத் தின்று குளத்து நீருக்குள் மீன் குஞ்சுகள் நெளிந்தோடியது.

பசுமையும் குளிர்ச்சியும் நிறைந்த செயற்கையான இந்தக் கிராம சூழ்நிலையில், தங்களின் பூர்வீக கிராம சொத்துக்களையும், உறவுகளையும் இழந்து, நகரத்தில் பிழைப்பை ஓட்டி வரும் நாகரிக மனிதர்கள், மறந்து போன அந்த கால நினைவுகளை மெல்ல அசைபோட்டபடி ஒருவித ஏக்கத்துடன் நடந்து போனார்கள்.

பக்கத்தில், மெல்லிய தார்ப்பாயில் மூடிய 3 குடிசைகள் வரிசையாக இருந்தன. உள்ளே போனதும் கொடைக்கானல், ஊட்டி போல சில்லென்று குளிரடித்தது. சுற்றிலும் விநோதமான பூச்செடிகள், காய்கறி செடிகள்! இவையெல்லாம் வெளிநாட்டு வகைகளாம்! குளிர்ச்சியான சூழலில்தான் வளருமாம்! இதை விளைய வைத்து வெளிநாட்டில் விற்றால் கோடிகோடியா சம்பாதிக்கலாமாம்! இது பற்றின விழிப்புணர்வை விவசாயிகளிடம் உருவாக்கவே இந்த 'மாதிரி பண்ணையைய்' வைத்திருக்கிறார்களாம்.

விவசாயத்தின் பெயரால் நடக்கும் இந்தக் கண்காட்சி கஞ்சிக்கில்லாமல் கிடக்கும் விவசாயிகளை கம்ப்யூட்டர் விவசாயம் செய்ய சொல்கிறது. வேடிக்கை பார்க்க வந்த நகரத்துக் கனவான்களோ

ஒருசில விவசாயிகளைத் தவிர, கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, காளான் வளர்ப்பு, மலர்ப் பண்ணை, அரிசி ஆலை போன்ற பெரும் நிறுவன உரிமையாளர்கள் வந்திருந்தார்கள். நவீன கருவிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ளவும், இடைத்தரகர்களைத் தவிர்த்துவிட்டு உற்பத்தி செய்யும் கம்பெனிகளிடமே நேரடியாக பேரம்பேசி பொருள்கள் வாங்கவும் இந்தக் கண்காட்சி அவர்களுக்குப் பயன்பட்டது. கண்காட்சியின் நோக்கமும் அதுதானே!

மேலும் இது போன்ற கண்காட்சிகளை நடத்துவது இன்று தனித்தொழிலாக வளர்ந்து வருகிறது. கோவை அக்ரி இன்டக்சில் 10 x 10 அளவுள்ள ஒரு ஸ்டாலுக்கு ஒருநாள் வாடகை ரூ. 10,000 வீதம் 5 நாட்கள் 300 கடைகளுக்கு ரூ. 1.50 கோடி ரூபாய் வசூலித்துள்ளனர். தவிர, நுழைவுக் கட்டணம் மூலம் கிடைக்கும் வருமானம் வேறு.

இந்தக் கண்காட்சி, சேற்றில் கால் வைக்காமலேயே கோடி கோடியாய் விவசாயத் துறையில் கொள்ளையடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பர வியாபார உத்தி மட்டுமல்ல; உணவு உற்பத்தி செய்வதன் மூலம் வாழ்க்கையின் ஆதாரமாக விவசாயம் இருந்ததுபோய் இலாபம் தரும் பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமாக மாறி விட்டதை அறிவிப்பதே இக்கண்காட்சி. மற்றபடி விவசாயத் தொழிலுக்கும், விவசாயிக்கும் உள்ள நெருக்கடிகளைத் தீர்க்க இக்கண்காட்சியில் எதுவுமில்லை.

தகவல் உதவி: மாறன்,
வி.வி.மு. உத்தமபாளையம் வட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



## உலக வங்கி - ஐ.எம்.எப்.க்கு எதிராக தீவிரமாகிவரும் போராட்டங்கள்

கடந்த செப்டம்பர் இறுதியில் உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் ஆண்டுக் கூட்டம் செக் நாட்டின் தலைநகர் பிரேக்கில் நடந்தபோது, இந்நிறுவனங்களுக்கு எதிரான போராட்டங்களால் அந்நாடே குலுங்கியது. பல்வேறு நாடுகளிலிருந்து இடதுசாரிகள், தொழிற்சங்க முன்னோடிகள், சுற்றுச்சூழல் வாதிகள், மனித உரிமை இயக்கத்தினர் என 20,000 பேருக்கு மேல் திரண்டு உலகமயமாக்கலுக்கும் உலக வங்கி - ஐ.எம்.எப்.புக்கு எதிராகவும் நடத்திய ஆர்ப்பாட்டங்களால், ஆண்டிறுதிக் கூட்டத்தை முழுமையாக நடத்த முடியாமல் அவசர அவசரமாக முடித்துள்ளனர். ஆண்டுக் கூட்டத்தின் தொடக்க நாளான செப்டம்பர் 23-ந் தேதியன்று நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது போலீசார் நடத்திய தாக்குதல், முதலாளித்துவ ஜனநாயகத்தின் முகத்திரையைக் கிழித்தெறிந்துள்ளது.

செக்கோஸ்லாவியா என்ற போலி சோசலிச நாட்டை செக், ஸ்லோவாகியா என்று இரு நாடுகளாக உடைத்தது, ஏகாதிபத்தியம். இதை இரத்தம் சிந்தாத அமைதியான 'வெல்வெட் புரட்சி' என்று ஏகாதிபத்திய வாதிகள் சித்தரித்தனர். இப்புரட்சிக்குத் தலைமை தாங்கி செக் நாட்டின் அதிபராகிய ஹேவல், தன்னை மாபெரும் ஜனநாயக வாதியாகப் பீற்றிக் கொண்டார். ஆனால் கண்டன எதிர்ப்பைக் கூட சகித்துக் கொள்ள முடியாமல் இப்போராட்டத்தைக் கடுமையாக ஒடுக்கியுள்ளார். ஆர்ப்பாட்டக்காரர்கள் செக் நாட்டுக்குள் நுழைய விடாமல் செக் - ஜெர்மனி - ஆஸ்திரியா - போலந்து எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். மேலும் பிரேக் நகரில் ஊர்வலங்களுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதையும் மீறி ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது தண்ணீரைப் பீய்ச்சியடித்து கண்ணீர்ப் புகை குண்டும் வீசப்பட்டது.




மக்களை மரணக் குழியில் தள்ளிவரும் உலக வங்கி, ஐ.எம்.எஃப்., அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் ஆகிய கொடும்பாவிகளுடன் ஆர்ப்பாட்டம்.

பொருளாதார உலகமயமாக்கலுக்கு எதிரான முன்முயற்சி (செக் மொழியில் "இன்பெக்") என்னும் தன்னார்வ அமைப்பு இப்போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தியது. ஏழை நாடுகளின் கடன் சுமை, நுகர்பொருள் கலாச்சாரம், சுற்றுச்சூழல் பாதிப்பு, உலகவங்கி கொள்ளை முதலானவற்றை எதிர்க்கும் பல்வேறு அமைப்புகள் தனியாகவும் கூட்டாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. வெண் சிலுவை ஏந்தி ஆர்ப்பாட்டம் முதல் முகமூடியணிந்த ஆர்ப்பாட்டங்கள் வரை பல வடிவங்களில் இவை நடந்தன. 1970-களில் வியட்நாம் போர் எதிர்ப்புப் போராட்டங்களுக்குப் பிறகு, இத்தகைய போராட்டங்களில்தான் இளைஞர்கள் பெருமளவில் திரண்டுள்ளனர் என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே ஒப்புக் கொள்கின்றன.

1998 ஜெனீவாவில் உலக வர்த்தக் கழகத்தின் கூட்டத்தின்போது உலகமயமாக்கலுக்கு எதிராகத் தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள், அடுத்தடுத்து இத்தகைய கூட்டங்கள் நடக்கும் போதெல்லாம் முன்னைவிட அளவிலும் வீரியத்திலும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அனைத்துலகப் பாட்டாளி வர்க்கம் இவற்றை ஒருங்கிணைந்த பார்வையில், திசை விலகும் போக்குகளை முறியடித்து, உலகமயமாக்கலுக்கு எதிராக அணிதிரட்ட வேண்டியதே இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.

## அடிப்படைக் கல்வி பெறும் உரிமை: அதிர்ச்சியூட்டும் உண்மைகள்

பத்தாண்டுகளுக்கு முன்பு - 1990 மார்ச் 15-ந் தேதியன்று தாய்லாந்து நாட்டின் ஜோம்டியன் நகரில் கூடிய 155 நாடுகளின் அரசுகள், கல்வி பெறும் அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துவது; இதை அனைத்துலக மனிதகுலக் கடமையாகக் கருதி செயல்படுத்துவது என்று பிரகடனப்படுத்தின. 2000 ஆண்டுகளுக்குள் 80% குழந்தைகளின் ஆரம்பக் கல்வி பெறும் உரிமையை நிறைவேற்றுவது, 2005-க்குள் ஆரம்ப - தொடக்கக் கல்வி நிலையங்களில் ஆண் - பெண் குழந்தைகளுக்கிடையிலான இடைவெளியைக் குறைத்து பெண் குழந்தைகளின் கல்வி பெறும் அடிப்படை உரிமையை நிறைவேற்றுவது என்றும் கூட்டறிக்கை வெளியிட்டன.

இந்த மாநாட்டுப் பிரகடனத்திற்குப் பிறகு, பத்தாண்டுகளுக்குப் பிறகு இன்றைய நிலை என்ன?

உலகம் முழுவதும் 12.5 கோடி இளங்குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. இவர்களில் பெரும்பாலோர் பெண் குழந்தைகள்.

ஆரம்பக் கல்வி பயிலும் 15 கோடி குழந்தைகள் 5-ஆம் வகுப்பை முடிப்பதில்லை. பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே நின்று விடுகின்றனர்.

87.2 கோடிப் பேர் அல்லது மக்கள் தொகையில் நால்வரில் ஒருவர் ஏழை நாடுகளில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர்.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு அடுத்தபடியாக ஆசிய நாட்டுக் குழந்தைகளே ஆரம்பக் கல்வியைக் கூட முடிக்க முடியாமல், பள்ளியிலிருந்து பாதியிலேயே விலகி விடுகின்றனர்.

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய அணு ஆயுத ஆற்றல் பெற்ற நாடுகளில் மட்டும் 4 கோடி குழந்தைகள் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே விலகி விடுகின்றனர். உலகெங்கும் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத குழந்தைகளின் எண்ணிக்கையில் இது மூன்றில் ஒரு பங்காகும்.

பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினக் குழந்தைகளே இவர்களில் பெரும்பான்மையினராவர். ஆரம்பக் கல்வி கூட

படிப்பகம்

www.padippakam.com



பெற முடியாமல் ஆண்டு தோறும் 10 இலட்சத்துக்கும் மேலான பெண் குழந்தைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

உலகில் ஆண் - பெண் குழந்தைகளின் படிப்பறிவு இடைவெளியில் இந்தியா முன்னணியில் உள்ள நாடாகும்.

இந்தியாவின் மொத்த மக்கட் தொகையில் மேல் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் உள்ள படிப்பறிவு ஏற்றத் தாழ்வு விகிதம் 15% முதல் 17% ஆக உள்ளது.

நகர்ப்புற கல்வி கற்றோரில் கேரள மாநிலம் முழுமை அடைந்துள்ள நிலையில், ராஜஸ்தானில் தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்பட்ட சாதிப் பெண்கள் இன்னமும் எழுதப் படிக்கக் கூடத் தெரியாமல், அடிப்படைக் கல்வி புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். இதேபோல் பீகார், ம.பி., உ.பி., மாநிலங்களின் நிலையும் மிக மோசமாக உள்ளது.

தனியார்மய - தாராளமயக் கொள்கைகளால் வறுமையும் வேலையின்மையும் தீவிரமாகிவிட்டதன் விளைவாக, ஒரு குழந்தைக்கு ஓராண்டுக்குச் சராசரியாக ரூ. 300 செலவிட்டுப் பள்ளிக்கு அனுப்ப இந்திய ஏழைகளால் இயலுவதில்லை. தொடர்ந்து இந்த நிலை நீடித்தால் அடுத்த பத்தாண்டுகளில் ஆசிய கண்டத்தில் எழுதப் படிக்கத் தெரியாதோர் எண்ணிக்கையில் இந்தியா முதலிடம் பெற்று விடும்.

## அமெரிக்காவின் வெற்றியா? ஜனநாயகத்தின் வெற்றியா?




"மிலோசெவிச்சே, வெளியேறு!" எனும் முழக்க அட்டைகளுடன் எதிர்த்தரப்பினர் யூகோஸ்லாவிய நாடாளுமன்றத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்: அமெரிக்காவுக்கே அறுவடை.

யூகோஸ்லாவியாவில் அண்மையில் நடந்த அதிபர் தேர்தலில் இனவெறி பிடித்த பாசிச சர்வாதிகாரி மிலோசெவிச் தோல்வியடைந்து நாட்டை விட்டே தப்பியோடிவிட்டார். எதிர்க்கட்சி கூட்டணித் தலைவரான வோஜிஸ்லாவ் கோஸ்டுனிகா, மக்கள் திரளின் வெற்றி ஆரவார ஆர்ப்பாட்டங்களுடன் அதிபராகப் பதவியேற்றுள்ளார். மிலோசெவிச்சின் தோல்வியானது, "செர்பிய மக்களின் ஜனநாயகப் போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி; இனி யுகோஸ்லாவிய கூட்டமைப்பில் அமைதியும் சமாதானமும் சுதந்திரமும் பூத்துக் குலுங்கும் புதிய சகாப்தம் தொடங்கிவிட்டது" என்று அமெரிக்கா மற்றும் மேற்கு ஏகாதிபத்தியங்கள் பெருத்த ஆரவாரம் செய்கின்றன.

1989-இல் அதிபராகப் பதவியேற்ற இனவெறி பிடித்த மிலோசெவிச், அல்பேனிய முஸ்லிம் சிறுபான்மையினர் வாழும் கொசோவா பிராந்தியத்தின் சுயாட்சி அதிகாரத்தைப் பறித்து, அவர்களது மொழி - பண்பாட்டை நசுக்கி அம்மக்களை வேட்டையாடி ஒடுக்கினார். கொசோவா பிராந்தியத்தின் தாது வளத்தையும் எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தையும் கைப்பற்றித் தக்க வைத்துக் கொள்ள ரசிய ஏகாதிபத்தியம் மிலோசெவிச்சை ஆதரித்தது. கொசோவா மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரிப்பதாக கூறிக் கொண்டு, கொசோவாவின் மூல வளங்களைக் கைப்பற்ற அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் நாய்ச் சண்டையில் இறங்கின. கொசோவாவின் சுயாட்சியோடு, அதைக் கண்காணிக்க அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" படைகளை அங்கு நிறுத்தும் பாரிசு ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து மிலோசெவிச் பாசிச இனவெறியைக் கட்டவிழ்த்து விட்டதும், "நேட்டோ" படைகள் யுகோஸ்லாவியா மீது கடந்த ஆண்டில் போர்த் தாக்குதலை நடத்தின. அதை எதிர்த்து யுகோஸ்லாவியா போரில் இறங்கியது. மிலோசெவிச் தன்னை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியாகச் சித்தரித்துக் கொண்டார். ஆனாலும், போரினால் ஏற்பட்ட இழப்பு, பொருளாதார நெருக்கடி முதலானவற்றால் கொசோவாவிற்கு மீண்டும் சுயாட்சி உரிமை வழங்க விரைவில் அரசியல் சட்டமியற்றுவதாக பின்வாங்கினார்.

இந்நிலையில், கடந்த செப்டம்பர் 24-ந் தேதியன்று நடந்த அதிபர் தேர்தலில் மிலோசெவிச் மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து 16 எதிர்க் கட்சிகள் கூட்டணி கட்டி, கோஸ்டுனிகாவை வேட்பாளராக நிறுத்தின. அமெரிக்காவும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கும் கோஸ்டுனிகாவை வெளிப்படையாக ஆதரித்து, தேர்தலில் அவர் வெற்றி பெற்றால் யூகோஸ்லாவியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதோடு நிதியுதவி செய்வதாகவும் பூதாகரமாகப் பிரச்சாரம் செய்தன. வதந்திகளை ஊதிப் பெருக்கி கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு, எதிர்த் தரப்பே வெற்றி பெறும் என்ற எண்ணத்தை மக்களிடம் வீச்சாகப் பிரச்சாரம் செய்தன.

அதிபர் தேர்தலில் முதல் சுற்றில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத போதிலும் கோஸ்டுனிகா முன்னணியில் இருந்தார். மிலோசெவிச் இரண்டாவது இடத்திலும் பிற வேட்பாளர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்ட நிலையிலும் இருந்தனர். தேர்தல் விதிகளின்படி, அடுத்த கட்டமாக வெற்றி பெற்ற முதலிரு வேட்பாளர்களுக்கிடையில் - அதாவது மிலோசெவிச் - கோஸ்டுனிகாவுக்கிடையில் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால் அமெரிக்காவின் ஆலோசனைப்படி, எதிர்த் தரப்பினர் இரண்டாவது சுற்றுத் தேர்தலை ஏற்க மறுத்து "மிலோசெவிச்க்கு எதிராக மக்கள் தீர்ப்பளித்து விட்டனர்; அவர் உடனே பதவி விலக வேண்டும்" என்று ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். மிலோசெவிச் ஆட்சி மீது மக்களின் அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்டு, கோஸ்டுனிகா வெற்றி பெற்றதாக ஆரவாரக் கொண்டாட்டங்களில் இறங்கினர். இரண்டாவது சுற்றுத் தேர்தலைப் புறக்கணித்து வெற்றி விழா கொண்டாடுமாறு அமெரிக்காவும் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் அறைகூவல் விடுத்தன. தோல்வியடைந்த மிலோசெவிச் தனது அதிகாரத்தையும், குண்டர் படைகளையும் கொண்டு எதிர்த்தரப்பைத் தாக்குவார் என்று பீதியூட்டின. இவற்றால் மேலும் உந்தப்பட்ட மக்கள் "மிலோசெவிச்சே வெளியேறு!" என்று நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். இந்த எதிர்ப்பு அலைக்கு முகம் கொடுக்க முடியாமல் மிலோசெவிச் தோல்வியை ஒப்புக் கொண்டு, பதவி விலகி நாட்டை விட்டு ஓடிவிட்டார்.

இத்தேர்தலில் மிலோசெவிச் தோல்வியடைந்து தப்பியோடும் வரை, அவரை சோசலிஸ்டு, ஏகாதிபத்திய எதிர்ப்பாளர், நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காத்தவர், மதவெறி - பிரிவினைவாத

www.padippakam.com




சக்திகளை ஒடுக்கி மக்களை ஐக்கியப்படுத்தியவர் என்று இந்தியாவில் 'மார்க்சிஸ்டு' கட்சியினர், இந்த இனவெறி பாசிஸ்டை வெட்கமின்றி ஆதரித்து நின்றனர்.

செர்பிய இனவெறி பாசிச சர்வாதிகாரி மிலோசெவிச்சின் வீழ்ச்சி, முக்கியமான அரசியல் திருப்புமுனை என்பது உண்மைதான். ஆனால் ஜனநாயகத்தின் காவலர்களாகப் பீற்றிக் கொள்ளும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், எவ்வளவு கீழ்த்தரமான முறையில் செயல்பட்டு ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கி, தமது விசுவாசியை வெற்றி பெறச் செய்துள்ளன என்பதை யூகோஸ்லாவிய தேர்தலே நிரூபித்துக் காட்டுகிறது. உலக நாடுகளின் தேர்தல்கள்கூட இனி அமெரிக்கத் தலையீடு இல்லாமல் நடக்காது என்பதையும் அபாய அறிவிப்பாக எச்சரிக்கிறது. வாயிற் புறமாக வெறி நாயை விரட்டிவிட்டு, கொல்லைப் புறமாக ஓநாயை நுழைய அனுமதித்துத் தனது தலைவிதியை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிட்ட யூகோஸ்லாவியா இருண்ட எதிர்காலத்தையே எதிர் நோக்கியுள்ளது.

## உலகவங்கி உத்தரவுப்படி ஏழைகளை ஒழிக்கும் நடவடிக்கை

மகாராஷ்டிர காங்கிரசுக் கூட்டணி அரசு, உலக வங்கி உத்தரவுப்படி வருமாண்டிலிருந்து இரு குழந்தைகளுக்கு மேல் பெற்ற குடும்பங்களை, 60-க்கும் மேற்பட்ட அரசு நல்வாழ்வுத் திட்டங்களிலிருந்து ஒதுக்கிவிடத் தீர்மானித்துள்ளது. அதாவது, வருமாண்டு மே மாதத்திலிருந்து இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் அனைவருக்கும் ரேஷன், மருத்துவம், கல்வி, நிவாரண உதவி, கடனுதவி உள்ளிட்ட அரசு நலத் திட்ட உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும். அரசு ஊழியர்கள் எனில் அரசுக் கடன், மானியம், ஊக்கத் தொகை, மருத்துவ மானியம் மற்றும் பிற சலுகைகள் அனைத்தும் வெட்டப்படும். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள மாட்டேன் என்று எழுத்துப்பூர்வ உறுதிமொழி தர வேண்டும். உறுதி மொழியை மீறினால் பதவி உயர்வு உள்ளிட்டு அனைத்தும் நிறுத்தப்படும். முதல் இரு குழந்தைகளுக்கு மட்டுமே அரசுப் பள்ளிகளில் இலவசக் கல்வி பெற உரிமையளிக்கப்படும். மூன்றாவது குழந்தைக்கு இலவசக் கல்வி பெறும் உரிமை பறிக்கப்படும். அது மட்டுமின்றி அக்குழந்தையைக் குடும்ப உறுப்பினராகக் குறிப்பிட்டு அதற்கேற்ப ரேஷனில் உணவுப் பொருட்களை வாங்க முடியாது. மேலும், இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் உள்ளூராட்சித் தேர்தலிலும் போட்டியிட முடியாது.



மும்பை நகரில் அவலத்தில் உழலும் ஏழைகளின் நடைபாதைக் குடியிருப்பு: உலகவங்கி உத்தரவுப்படி இனி இம்மக்களுக்கு ரேசன் அரிசியும் இலவசக் கல்வியும் மருத்துவ வசதியும் கிடைக்காது.

"சமூக நலத் திட்டங்களுக்கு அரசு நிதியைச் செலவிடுவதால் பற்றாக்குறையும் நெருக்கடியும் ஏற்படுகிறது; எனவே அவற்றை நிறுத்த வேண்டும்" என்று ஏற்கனவே உலக வங்கி உத்தரவிட்டுள்ளது. இதன்படி பல வண்ணங்களில் அட்டைகள் கொடுக்கப்பட்டு ரேஷன் கடைகளில் மலிவு விலையில் ஏழைகள் உணவுப் பொருட்களைப் பெறும் சலுகை படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி திருமணத்துக்கு முன்னும் பின்னும் பெண்களின் உடல் நலம், மகப்பேறு, குழந்தை நலம், பெண்களுக்கான கல்வி, சுகாதாரம், குடிநீர், மருத்துவம், வேலை வாய்ப்பு முதலான சமூக நலத் திட்டங்களையும் நிறுத்தி விடுமாறு உலக வங்கி கட்டளையிட்டு நிர்பந்தித்து வருகிறது. இதற்காக புதிய மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் ஏழைகளைத் தண்டிக்கக் கிளம்பியுள்ளது, மகாராஷ்டிர அரசு.

மும்பை நகரில் வெளி மாநிலங்களிலிருந்து பிழைப்புக்காகக் குடியேறும் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், கடந்த எட்டாண்டுகளாக சொந்தக் குடிசை இல்லாதவர்களுக்கு ரேஷன் அட்டை கிடையாது என்று மகாராஷ்டிர அரசு கெடுபிடி செய்து வருகிறது. நடைபாதைகளிலும், ரயில்வே இருப்புப் பாதை ஓரங்களிலும் குடிசை போடும் அவர்களை விரட்டி, குடிசைகளை இடிப்பதை ஒரு இயக்கமாகவே நடத்தி வருகிறது. கடந்த ஜனவரியிலிருந்து ரேஷன் பொருட்களின் விலையையும் உயர்த்தி, விநியோகத்தையும் குறைத்து விட்டது. ஒரு குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 5,000-க்கு மேலானால், தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு அடுப்பு, இருசக்கர மோட்டார் வாகனம் இருந்தால் அவர்கள் வறுமைக் கோட்டுக்கு மேலானவர்கள் என்று அறிவித்து, அதற்கேற்ப ரேஷன் அளவையும் குறைத்து விட்டது.

மும்பை நகரில் ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்ட மக்கள் சேரிப் பகுதிகளில் வாழ்கின்றனர். ஏறத்தாழ 50 இலட்சம் பேர் வாழும் தராவி சேரிப் பகுதியானது ஆசியாவின் மிகப்பெரிய சேரியாக வர்ணிக்கப்படுகிறது. ஆனால் ரேஷன் அலுவலகக் கணக்கின்படி 1977-இல் அங்கு 365 குடும்பங்கள்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள ஏழைகள்! கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கையும் 151 குடும்பங்களாகக் குறைந்து விட்டது. அதாவது, வறியவர்கள் குறைந்துவிட்டனர்! மும்பை மட்டுமின்றி பிற பெரு நகரங்களிலும் இதே நிலைதான். பூனே நகரின் மிகப்பெரிய கோத்ருட் சேரிப் பகுதியில் 3718 குடும்பங்களாக இருந்த ஏழைகள், கடந்த ஆண்டில் 2587 ஆகக் குறைந்து விட்டனர். அதேசமயம் பணக்கார மாநிலமான மகாராஷ்டிராவில் 18.5% ஆண் குழந்தைகளும் 22% பெண் குழந்தைகளும் சத்துணவின்மையால் 4 வயதுக்குள்ளாகவே மாண்டு போகின்றன. இந்த லட்சணத்தில் வறுமையை ஒழிக்க வக்கற்ற ஆட்சியாளர்கள் உலக வங்கி உத்தரவுப்படி, வறியவர்களையே ஒழித்துக் கட்டக் கிளம்பியுள்ளனர். ஏற்கனவே மகாராஷ்டிரா வழியில், பல வண்ண அட்டைகள் மூலம் ரேஷன் விநியோகத்தைப் படிப்படியாகக் குறைத்து விட்டது தமிழக அரசு. உலக வங்கி உத்தரவுப்படி, ரேஷன் கடைகளை மூடி வறியவர்களை ஒழித்துக் கட்ட இன்று மாராஷ்டிர அரசு கிளம்பிவிட்டது. அதன் வழியில், நாளை ஏழைகள் மீது தாக்குதலை ஏவ தமிழக ஆட்சியாளர்களும் தயாராகி வருகின்றனர்.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

வழிபாட்டு உரிமைக்காகத் தாழ்த்தப்பட்டோர் போராடினால், சட்டப்படியான அந்த உரிமையை நிலைநாட்டக் கூட தி.மு.க. அரசு உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டு உரிமையைப் பறிக்கும் மேல்சாதி வெறியர்களைக் கைது செய்வதுமில்லை. மாறாக, 'நடுநிலை' நாடகமாடி கோயிலை இழுத்துப் பூட்டி தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டு உரிமையைப் பறிப்பதே அதன் புதிய உத்தியாக உள்ளது. மேல்சாதி வெறியர்களுக்குச் சாதகமான இந்த உத்தியோடுதான் கண்டதேவி கோயில் தேர் வடம் பிடிக்கும் உரிமையையும் தாழ்த்தப்பட்டோருக்கு மறுத்து வழக்கு, சமாதானக் கமிட்டி என்று இழுத்தடித்து வருகிறது.

தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதியினரின் வழிபாட்டு உரிமைக்காகப் போராடி, "வைக்கம் போராட்ட வீரர்" என்று புகழப்பட்ட தந்தை பெரியார் பிறந்த மண்ணில் இன்னமும் தாழ்த்தப்பட்டோர் கோயிலில் நுழைய முடியவில்லை. பெரியாரின் வாரிசுகள் என்று பீற்றிக் கொள்ளும் திராவிடக் கட்சிகள் அனைத்தும் ஓட்டுக்காக சாதி வெறியர்களுடன் கைகோர்த்து நிற்கின்றன. மானங்கெட்ட தி.க. வீரமணியோ, பெரியாரின் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அரசியல் தரகனாகத் திரிகிறார். தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்காக அவதாரம் எடுத்துள்ளதாகக் கூறிக் கொள்ளும் அமைப்புகளும் இயக்கங்களும் தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணிகளின் பின்னே பதவி சுகத்துக்காக நாயாய் அலைந்து கொண்டிருக்கின்றன. இத்துரோகிகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தாமல் சாதி வெறியர்களை முறியடிக்க முடியாது; தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்டவும் முடியாது.

● சுப்பு

# 'மானமிகு தளபதி'யின் மானங்கெட்ட செயல்

கடந்த செப்டம்பர் 19-ம் நாளன்று மாலை, ஈரோடு நகரில் காந்தி சிலை அருகில் தி.க (வீரமணி)வினர் தந்தை பெரியாரின் 122-வது பிறந்த நாளையொட்டி பொதுக் கூட்டம் நடத்தினர். பெரியார் தேடி வைத்த பொதுச் சொத்தில் மஞ்சள் குளிக்கும் மானங்கெட்ட வீரமணி கும்பல், இன்று பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் காலடியில் விழுந்து கூட்டணி அரசியல் தரகனாக மாறி, பெரியாரைப் பூசையறைப் படமாக மாற்றி விட்டது. ஈரோடு நகரில் இயங்கி வரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, இத்துரோகக் கும்பலை அம்பலப்படுத்தி "வீரமணியிடமிருந்து பெரியாரை விடுதலை செய்வோம், வாரீர்!" என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு அன்று காலையிலிருந்தே மக்களிடம் பிரச்சாரம் செய்தது. தி.க. வீரமணி கும்பல், பெரியார் பொன்மொழிகள் பலகைத் திறப்பு விழா நடத்தும் பகுதிகளில், பு.மா.இ.மு.வினர் சைக்கிளில் ஊர்வலமாகச் சென்று இப்பிரசுரத்தை விநியோகித்து, பெரியார் பெயரில் பிழைப்பு நடத்தும் இத்துரோகக் கும்பலை மக்களுக்கு அடையாளம் காட்டினர்.

இதைக் கண்டு பீதியடைந்த வீரமணி கும்பல் போலீசுக்கு தகவல் கொடுத்துப் பிரச்சாரத்தை முடக்கிவிட கீழ்த்தரமாக இறங்கியது. அதைத் தொடர்ந்து நகரப் போலீசார் பு.மா.இ.மு.வினர் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த பகுதிக்கு வந்து சுற்றி வளைத்தனர். "தி.க. பொதுக் கூட்டம் முடியும் வரை நீங்கள் இந்த நோட்டீசை விநியோகிக்கக் கூடாது; மீறினால் உங்களைக் கைது செய்வோம்" என்று மிரட்டினர். பிரச்சார உரிமையைப் பறிப்பது ஜனநாயக விரோதச் செயல் என்று தோழர்கள் எதிர்த்து வாதிட்டதும், "இது மேலிடத்து உத்தரவு சார்! எங்களுக்குப் பிரச்சினை வராம பார்த்துக்குங்க சார்!" என்று போலீசார் கூறினர். எனவே, தோழர்கள் கலைந்து சென்று வேறு உத்தியுடன் பிரச்சாரத்தைத் தொடர்ந்தனர்.

அன்று மாலை தி.க. பொதுக் கூட்டம் நடந்த திடலில் தரைக்கடை விரித்து புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் இதழ்களை விற்பனை செய்த பு.மா.இ.மு. தோழர், இத்துண்டுப் பிரசுரத்தையும் பார்வைக்கு வைத்து விநியோகித்தார். இதனால் ஆத்திரமடைந்து வீரமணியின் எடுபிடிகளாக உள்ள ரௌடிக் கும்பல், தோழரை மிரட்டி ஆபாச வசவுகளால் ஏசியதோடு போலீசிடமும் புகார் செய்தது. அதைத் தொடர்ந்து பு.மா.இ.மு. தோழர் கருங்கல்பாளையம் போலீசு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு பொதுக் கூட்டம் முடிந்த பிறகு, வழக்கு ஏதும் போடாமல் விடுவிக்கப்பட்டார்.

பண பலமும் அடியாள் பலமும் அதிகார பலமும் கொண்டிருந்தாலும், ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கண்டு அஞ்சி நடுங்குகிறது வீரமணி துரோகக் கும்பல். பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்கு சாமரம் வீசிக் கொண்டு நிற்கும் இக்கோழைகள் தான் இந்து மதவெறியை எதிர்த்து நிற்கும் 'தளபதி'களாம்! வெட்கக் கேடு!

— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, ஈரோடு.

# போலி சுதந்திரம் — இதற்கென்ன கொண்டாட்டம்?

"நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!" என்ற மைய முழக்கத்துடன் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் இயங்கி வரும் பகுதிகளில் தொடர்ச்சியாக பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

★ திருப்பத்தூர் அருகிலுள்ள கந்திலியில் செப்டம்பர் 16-ந் தேதியன்று விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆம்பள்ளி முனிராஜ் (வி.வி.மு.), தோழர் சாமிநாதன் (ம.க.இ.க. தஞ்சை) ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியில், ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, பெருந்திரளாக வந்த விவசாயிகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்தது.

★ தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்திலுள்ள ஏரியூர், சின்னப்பட்டி ஆகிய கிராமப் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களுடன் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பிரச்சாரத்தின் போது கிராம மக்கள் அனைவரும் கூடி நின்றதோடு, தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடுகள் செய்து ஆதரவளித்தனர். ஏரியூரில் செப்டம்பர் 18-ந் தேதியன்று பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடுகள் நடந்து வந்த வேளையில், பா.ம.க. தலைவர் கார் மீது நடந்த கல்லெறி சம்பவத்தையொட்டி இப்பகுதியில் நிலவிய பதற்ற நிலை காரணமாக கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது. சின்னப்பட்டியில் செப்டம்பர் 20-ந் தேதியன்று நடந்த பொதுக் கூட்டம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது. தோழர் மணிவண்ணனின் (ம.க.இ.க., கோவை) சிறப்புரையைத் தொடர்ந்து நடந்த புரட்சிகர கலை நிகழ்ச்சி மக்களிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்றது. தொடக்கத்தில் நிகழ்ச்சிக்கு மின்சார உதவி செய்ய மறுத்தவர்கள், நிகழ்ச்சியைப் பார்த்த பிறகு தமது வருத்தத்தைத் தெரிவித்து மின்சாரத்தை இலவசமாகக் கொடுத்தனர். வறுமையான சூழ்நிலையிலும் இப்பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு தாராளமாக நன்கொடை அளித்தனர். பாதுகாப்புக்காக வந்த போலீசார் கூட, ஆர்வமாக நின்று நிகழ்ச்சியைப் பார்த்ததோடு, நிதி வசூலின் போது கூப்பிட்டு நன்கொடை அளித்து "இப்படிக் கூட நாட்டுப் பற்று இருக்கா? நீங்கள்தான் உண்மையிலேயே நாட்டுப்பற்று கொண்டவர்கள்" என்று ஆதரித்துப் பாராட்டினர்.

தகவல்: ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. - தமிழ்நாடு

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083
Printed by him at EZHIL PRINTS, 110 ...

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/Chief.PMG- 544 / 2000



பெரியாரின் 122-ஆவது பிறந்த தினத்தையொட்டி, தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதி, தமிழக அரசு சார்பில் பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிப்பதுதான் இந்தப் படம். இது வருடந்தவறாமல் நடக்கும் நிகழ்ச்சிதான் என்றாலும், தமிழகக் கூட்டணி அரசியலால் இந்த வருடம் இந்த நிகழ்ச்சிக்கு சற்று முக்கியத்துவம் கூடியது. பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்த தி.க.வைத் தனது பரம்பரை சொத்தாக மாற்றிக் கொண்ட வீரமணி, சென்னையில் நடத்திய பெரியார் பிறந்த தின விழாவில் ஜெயாவின் வடிவில் பெரியாரைக் காண்பதாக அறிவிக்க, வாரிசுப் போட்டியில் குதித்தார் கருணாநிதி. சமூக நீதிக்காக தஞ்சை மாவட்டத்தில் திராவிட இயக்கம் நடத்திய போராட்டங்களை, பழங்கதையாகிப் போனவற்றைக் கிளறிப் போட்டு, தி.மு.க.தான் பெரியாரின் உண்மையான வாரிசு என்றதோடு, தாங்கள்தான் உண்மையான கம்யூனிஸ்டுகள் என்றும் ஒரே போடாக போட்டார்.

என்னதான் பார்ப்பன மதவெறிக் கட்சியான பா.ஜ.க.வோடு தி.மு.க. கூடிக் குலாவினாலும், திராவிட இயக்கக் கொள்கைகளின் மிச்சம் மீதியெல்லாம் இன்றும் தி.மு.க.விடம் ஒட்டிக் கொண்டிருப்பதாக தமிழின உணர்வாளர்களில் பலரும் எண்ணிக் கொண்டுள்ளனர். இப்படிபட்ட மாயையை உருவாக்குவதில் தமிழினக் குழுக்களுக்கும் பங்குண்டு. பார்ப்பன ஜெயாவை விட, அ.தி.மு.க.வை விட, கருணாநிதியை, தி.மு.க.வை பெரியாரின் வாரிசாகச் சொல்லலாம் என கருணாநிதியின் பேச்சால் மயங்கிக் கிடப்பவர்களுக்கு, இதோ இந்தப் படம் சவுக்கடி கொடுக்கவே செய்யும்.

இந்து முன்னணித் தலைவர் இராம. கோபாலன் நீட்டும் கற்பூர தீபத்தைப் பயபக்தியுடன் தொட்டுக் கும்பிடுவர் தி.மு.க.வைச் சேர்ந்த சத்தியமங்கலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ராஜேந்திரன். சாமி கும்பிட்ட கையோடு, இந்து மதவெறியூட்டும் விநாயகர் ஊர்வலத்தையும் கொடியசைத்துத் துவங்கி வைத்தார், அவர். உடன் பிறப்புகள் இந்து மதவெறி ஜோதியில் கலப்பது ஒன்றும் புதிதானதல்ல.

ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, உறுதிமொழி எடுத்துக் கொண்ட சங்கரன் கோவில் நகரவைத் தலைவர் செல்வராசு; சென்னையில் நடக்கும் இந்து முன்னணியின் விநாயகர் ஊர்வலங்களைத் துவக்கி வைப்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்த டி.ஆர். பாலு என தி.மு.க.வில் இருக்கும் பா.ஜ.க. அனுதாபிகளைப் பற்றிப் பெரும் பட்டியலே போடலாம். நாத்திகத்திற்குப் பதிலாக, "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்", எதிரியோடு குலாவுவதற்காக, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" எனப் பிழைப்புவாத அடிப்படையில் பேசப்பட்ட அடுக்கு மொழி வசனங்களின் பரிணாம வளர்ச்சிதான் இந்தச் சீரழிவு.

"நாங்கள் பெரியாரின் வாரிசுகள்" என்று மார்தட்டுகிறார் கருணாநிதி. கழகக் கண்மணிகளோ அடிக்கடி தங்களை இராமரின் வாரிசுகளாகக் காட்டிக் கொள்கிறார்கள். இதில் எது உண்மை? எது பொய்? எந்த இடத்தில் கோளாறு?

தி.மு.க.வின் தலைமை தொடங்கி தொண்டன் வரை பார்ப்பன பாதந்தாங்கிகளாகச் சீரழிந்துக் கிடப்பதைப் புதிதாய்ச் சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும், கருணாநிதி தன்னைப் பகுத்தறிவுவாதியாக, பார்ப்பன எதிர்ப்பாளனாகக் காட்டிக் கொள்ளத் தயங்கியதில்லை. ஓட்டுக்காகப் போடப்படும் இந்தப் பிழைப்புவாத வேடத்தைப் புரிந்து கொள்ள முடியாத, பகுத்தறிவற்ற தற்குறிகளாக நாம்?

# இதுதான் இன்றைய இந்தியா



பயபக்தியுடன் தி.மு.க. எம்.எல்.ஏ.



நன்றி: நக்கீரன்